# ஆண்டறிக்கை

# 2012

## தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகாரசபை


இல. : 70, பாராளுமன்ற வீதி,
பெலவத்தை, பத்தரமுல்லை.
தொலைபேசி இலக்கம் : 7909021 - 22
தொலைநகல் இலக்கம் : 2784925 – 28
மின்னஞ்சல் : gmtshda@gmail.com
aetshda1@gmail.com

# ஆண்டறிக்கை

# 2012

## தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகாரசபை

இல. : 70, பாராளுமன்ற வீதி,
பெலவத்தை, பத்தரமுல்லை.
தொலைபேசி இலக்கம் : 7909021 - 22
தொலைநகல் இலக்கம் : 2784925 – 28
மின்னஞ்சல் : gmtshda@gmail.com
aetshda1@gmail.com

# தொலைநோக்கு

பொருளாதார மற்றும் சமூக ரீதியாக
ஸ்திரத்தன்மை வாய்ந்த சிறுதேயிலை
பற்றுநிலங்கள் சமூகமொன்றைத்
தோற்றுவித்தல்

# பணிநோக்கு

சிறந்த துணைச் சேவைகளை
வழங்குவதனூடாக தேயிலை சிறு
பற்றுநிலங்கள் பிரிவின் உற்பத்தித் திறனையும்
தரத்தையும் விருத்தி செய்தல்

# தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை

## ஆண்டறிக்கை – 2012

## தலைவரின் மீளாய்வு

தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவு தொடர்பாக சேவை வழங்கும் பொருட்டு 1977 ஆண்டில் தாபிக்கப்பட்ட தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் 2012 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கைக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்கக் கிடைத்தமையையிட்டு நான் அக மகிழ்கின்றேன். நீண்டகால அபிவிருத்திச் செயற்பாடுகளின் வாயிலாக, தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே எமது நிறுவனத்தின் நோக்கம் ஆகும். அவ்வாறே தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபையின் அனைத்து தேயிலை நிலங்களின் ஒவ்வொரு அலகுகளினதும் உற்பத்தித்திறனை விருத்தி செய்ய வேண்டியுள்ளமை தொடர்பாகவும், கொழுந்து உற்பத்திகளுக்காக எதிர்பார்க்கப்படும் அதி கூடிய விலையைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு தரம் வாய்ந்த கொழுந்து உற்பத்திகளை விருத்தி செய்ய வேண்டியுள்ளமை தொடர்பாகவும் இனங்காணப்பட்டுள்ளதுடன், அவை பிரதான மத்தியகால நோக்கங்களாக கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமைய 2010 ஆண்டில் இத் துறையின் இலக்குகளை எய்துவதற்கு பெறுபேறுசார் முகாமைத்துவ செயன்முறை ஒன்றின் மூலம், புதிய நடைமுறைச் சாத்தியமான திட்டமொன்றின் ஊடாக சேவை வழங்கும் பணிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

2012 ஆண்டின் தேசிய தேயிலை உற்பத்தி 326.27 மில்லியன் கிலோ கிராம் ஆகும். அதில் 233.10 மில்லியன் கிலோ கிராம் அதாவது 71.4 % வீதம் தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவினால் உற்பத்தி செய்ய முடிந்தமையிட்டு நான் பெருமிதமடைகின்றேன். அவ்வாறே, தேயிலை மீள் பயிரிடல் தொடர்பாக 1087 ஹெக்ரயார் களை பிடுங்கல், 889 ஹெக்ரயார் தேயிலை மீள் பயிரிடல் ஆகிய பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், 239 ஹெக்ரயார் புதிதாக தேயிலை பயிரிடல் பணிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவின் முன்னைய ஆண்டுக்கு நிகராக அலகுகளுக்கான உற்பத்தித்திறனை ஒரு ஹெக்ரயாரில் தயாரிக்கப்பட்ட தேயிலை 1966 கிலோ கிராமில் இருந்து 2001 கிலோ கிராம் வரை 1.8 % வீதத்தால் அதிகரித்துக் கொள்ள முடிந்துள்ளது. பச்சைக் கொழுந்து தேயிலை கிலோ கிராம் ஒன்றுக்கு இது வரை கிடைக்கப் பெற்ற உச்ச விலை கோரல்களுக்கு அமைய 2012 ஆண்டிலேயே அதி கூடிய விலையை தேயிலை சிறு பற்றுநில உரிமையார்கள் பெற்றுக் கொண்டுள்ளனர். பச்சைக் கொழுந்து கிலோ கிராம் ஒன்றுக்கான சாதாரண விலை 8.8% வீதத்தால் அதிகரித்திருந்தது.

விசேடமாக தேயிலை பயிரிடலின் போது பெரும்பாலான வேலைகளுக்கு தொழிலாளர் கிரயம் அதிகரித்தல் போன்ற தடைகளின் மத்தியில் சலுகையாக தேயிலை சிறு பயிர் செய்கையாளர்களுக்கு தேயிலை மீள் பயிரிடல் தொடர்பாக வழங்கப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவை ஹெக்ரயார் ஒன்றுக்கு ரூபா 300,000 வரை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தினால் முடிந்தமையினால் அது இத்துறையின் மேம்பாட்டுக்கு வலுவூட்டுவதாக அமையும் என்பதில் கிஞ்சித்தேனும் சந்தேகமில்லை.

නොවිල් පද්මසිරි කාරියවසම්

සභාපති

# தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவின் செயற்பாடு பற்றிய சுட்டிகள் - 2012

| | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|
| 1. தேயிலை சிறு பற்றுநிலங்களின் பரப்பு (ஹெக்ரயார் ) | 120,324 | 120,664 | 120,955 |
| 2. தேயிலை சிறுபற்றுநில உரிமையாளர்களின் எண்ணிக்கை | 388,645 | 389,561 | 390,346 |
| 3. தேயிலை சிறு பற்றுநிலங்களின் உற்பத்தி (மில்லியன் கிலோ கிராம்) | 230.1 | 229.0 | 233.10 |
| 4. தேசிய உற்பத்திக்கான பங்களிப்பு விகிதம் | 69.4 | 69.9 | 71.4 |
| 5. சாதாரண உற்பத்தித்திறன் (தயாரிக்கப்பட்ட தேயிலை /கி. கி/ ஹெக் ) | 1,976 | 1,966 | 2,001 |
| 6. தேயிலை மீள்பயிரிடப்படும் பரப்பு / ஹெக்ரயார் (ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளின் கீழ்) | 847 | 772 | 889 |
| 7. புதிதாக தேயிலை பயிரிடப்படும் பரப்பு / ஹெக்ரயார் (ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளின் கீழ்) | - | 28 | 239 |
| 8. மீள் பயிரிடல் விகிதம் | 0.73 | 0.66 | 0.76 |
| 9. பயிர் புனர்ஜீவனம் - செடிகளின் எண்ணிக்கை (மில்லியன்) | 0.424 | 0.504 | 0.767 |
| 10. தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்திச் சங்கங்களின் - எண்ணி. | 1,372 | 1,379 | 1,381 |
| உறுப்பினர்களின் எண்ணி. | 282,502 | 274,161 | 261,493 |
| 11. விஸ்தரிப்பும் ஆலோசனைச் சேவைகளும் | | | |
| தனியாள் தேயிலை விஸ்தரிப்பு எண்ணிக்கை | 27,346 | 26,103 | 27,843 |
| குழுநிலை நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணி. | 7,154 | 6,970 | 6,508 |
| விவசாயிகளின் பங்கேற்பு | 210,334 | 175,849 | 143,456 |
| 12. நிறுவன செயற்பாட்டுக் கிரயம் (1 ரூபாவிற்கான அபிவிருத்தி) | 1.08 | 1.04 | 0.85 |
| 13. தேயிலை பரிசோதகர் /விஸ்தரிப்பு அலுவலர் : தேயிலை பயிர்செய்கையாளர்களின் விகிதம் | 1:2643 | 1:2650 | 1:2730 |
| 14. ஒரு கி. கிராம் சாதாரண பச்சைத் தேயிலையின் விலை ரூ | 54.11 | 52.63 | 57.27 |

# உள்ளடக்கம்


பக்கம்

I பணிப்பாளர் சபை 01
II கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு
02
III பதவிநிலை பணியாட் தொகுதியினர் 03

**பொழிப்பு** 14

**1 ஆம் அத்தியாயம்**

**அறிமுகம்**
1.1 நிறுவனமும் தொழிற்பாடுகளும் 17
1.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுப் பணிகள்
18
1.3 நிர்வாகப் பணிகள் 19

**2 ஆம் அத்தியாயம்**

**இலங்கையின் தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவு** 22
2.1 தேயிலை சிறு பற்றுநிலங்கள் 22
2.2 தேயிலை சிறு பற்றுநிலங்களின் பரப்பு 22
2.3 தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்கள் 23
2.4 தேயிலை சிறு பற்றுநிலங்களின் எண்ணிக்கை 23
2.5 நில வகைப்படுத்தல் 23
2.6 தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறையின் உற்பத்தி 24
2.7 உற்பத்தித் தொகுப்பு 27
2.8 உற்பத்தித்திறன் 28
2.9 முதலீடுகள் 29

**3 ஆம் அத்தியாயம்**

**நியதிச்சட்ட நோக்கங்களும் சாதகப் பெறுபேறுசார் அபிவிருத்திச் செயற்பாடுகளும்** 32
3.1 மத்தியகால சாதகப் பெறுபேறுசார் அபிவிருத்தி இலக்குகள் / பணிகள் 35
3.2 ஒரு தசாப்தத்தின் விசேட செயலாற்றுகைகள் 51
3.3 பிரதான சாதகப் பணிசார் சுட்டிகள் 52

**4 ஆம் அத்தியாயம்**

**தேயிலை சிறு பற்றுநிலத் பிரிவின் பயிரிடல் கிரயம் மற்றும் கொழுந்து விலைகளும்** 53
4.1 தொழிலாளர் கிரயம் 53
4.2 ஒரு கிலோ கிராம் பச்சைக் கொழுந்துத் தேயிலையின் உற்பத்திக் கிரயம் 53
4.3 உற்பத்தி நோக்கெல்லையும் விலையும் 54
4.4 தேயிலை மீள்பயிரிடல் கிரயம் 54
4.5 ஊக்குவிப்புக் கொடுப்பனவும் பயிரிடல் கிரயமும் (ஒரு ஹெக்ரயாருக்கு) 55

**5 ஆம் அத்தியாயம்**

தேயிலை அபிவிருத்தி செயற்திட்ட சுழற்சிமுறை நிதிய கடன் திட்டம் 56

**6 ஆம் அத்தியாயம்.**

பிரதேச செயலக விசேட செயற்திட்டப் பணிகள் 58

நடப்பாண்டின் கணக்குக் கூற்றுக்கள் மற்றும் ஐந்தொகை

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

## அட்டவணை


| இல. | | | பக்கம் |
|---|---|---|---|
| (1) | நிறுவகத்தில் அனுமதியளிக்கப்பட்டுள்ள பணியாட்தொகுதீ | - 2012 | 60 |
| (2) | நிறுவகத்தில் பணிபுரியும் பணியாட்தொகுதி | - 2012 | 61 |
| (3) | 3- I பணியாட்தொகுதியினரின் வயது கட்டமைப்பு பகுப்பாய்வு | - 2012 | 63 |
| | 3- II நிறைவேற்றுத்தர அலுவலர்களின் கல்வி மட்டத்திற்கேற்ப வகுத்தல் | - 2012 | 64 |
| (4) | தேயிலை சிறு பற்றுநில பிரிவின் உற்பத்தி | ( 1983 - 2012 ) | 68 |
| (5) | தேயிலை மீள் பயிரிடல் உதவித் திட்ட செயற்பாடு | ( 1978 – 2012) | 69 |
| (6) | பயிர் புனர்ஜீவனம் (இடை நடுகை) உதவித் திட்ட செயற்பாடு | ( 1979- 2012 ) | 70 |
| (7) | புதிதாக தேயிலை பயிரிடல் உதவித் திட்ட செயற்பாடு | ( 1978 – 2012) | 71 |
| (8) | தேயிலையுடன் இறப்பர் பயிரிடல் உதவித் திட்டம் | ( 1999 -2009 - | 72 |
| (9) | 9 - A தாய் செடிகளின் மூலம் புதுவகை மொட்டுக்கள், கிளைகள் விநியோகம் | | 73 |
| | 9 - B நிறுவக ரீதியான தேயிலை நாற்றுமேடைகளின் செயற்பாடு | - 2012 | 74 |
| | 9 - C வணிக ரீதியான நாற்றுமேடைகள் தொடர்பாக அனுமதிப்பத்திரம் வழங்கல்சார் மேம்பாடு | (1992-2012) | 75 |
| (10) | 10 - A அமைவிடத்திற்கேற்ப கொழும்பு தேயிலை ஏலவிற்பனையில் தேயிலை விலை | ( 1985 – 2012 ) | 76 |
| | 10 - B பச்சைக் கொழுந்து ஒரு கிலோவிற்கான உற்பத்திக் கிரய மதிப்பீடு (மானியம்) | - 2012 | 77 |
| (11) | 11 - A பயிரிடல் கிரய மதிப்பீடு – மேட்டுநிலம் / மத்திய நிலம் தேயிலை மீள் பயிரிடல் ஒரு ஹெக்ரயாருக்கு | – 2012 | 78 |
| | 11 - B பயிரிடல் கிரய மதிப்பீடு – தாழ்நிலம் தேயிலை மீள் பயிரிடல் ஒரு ஹெக்ரயாருக்கு | – 2012 | 79 |
| (12) | மனிதவள பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | - 2012 | 80 |
| (13) | தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களுக்கு தவணை முறைக் கடன் திட்டத்தின் கீழ் உரம் வழங்கல் | (1993 – 2009) | 81 |
| (14) | தேயிலை ஏற்றுமதி மற்றும் அந்நியச் செலாவணி ஈட்டல் | | 82 |
| (15) | தேறிய தேசிய உற்பத்திக்கு தேயிலையின் மூலம் திரட்டப்பட்ட பெறுமதி | | 83 |

பக்கம்

**உரு இலக்கம்**


(1) மொத்தத் தேயிலை நிலங்கள் தொடர்பாக சிறு பற்றுநிலங்களின் பங்களிப்பு 22

(2) முகாமைத்துவ நிறுவனங்களின் உற்பத்திப் பங்களிப்பு வீதம்
25

(3) தேயிலை சிறு பற்றுநில பிரிவின் வருடாந்த / மாதாந்த தேயிலை உற்பத்தி
26
(2010/2012)

(4) தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவின் வருடாந்த தேயிலை உற்பத்தி வளர்ச்சி (2000/2012) 26

(5) தேயிலை மீள் பயிரிடல் உதவித் தொகை அதிகரிப்பு (1979 – 2012) 35

(6) தேயிலை மீள் பயிரிடல் உதவி தொடர்பாக விண்ணப்பித்தல்
36
(2000 – 2012)

(7) தேயிலை மீள் பயிரிடல் உதவிக் கொடுப்பனவுகள் பற்றிய மேம்பாடு (1992 – 2012) 38

(8) பயிர் புனர்ஜீவன உதவித் திட்டத்தின் கீழ் கொடுப்பனவுகளின் மேம்பாடு (1993 – 2012) 41

# தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை

## தலைமை அலுவலகக் கட்டமைப்பு




(1) சிரேஷ்ட முகாமைத்துவம்2-1

(2) சிரேஷ்ட முகாமைத்துவம்1-1

(6) மத்திய முகாமைத்துவம் 1-1

(5) மத்திய முகாமைத்துவம் 1-1

(4) கனிஷ்ட முகாமைத்துவ1-1

(1) முகா.உதவியாளர், 2-2 புததகம் கட்டுபவர்))

(35)முகா. உதவியாளர்1-2,

பி.அலு. 26/ ஹந்தானை -02

(10)ஆ.மட்டம் :3

(14) ஆ.மட்டம: 1

79

கட்டமைப்பு

முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் MSD /30 இற்கு அமைய

# தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை

## பிரதேச அலுவலகக் கட்டமைப்பு




(6) மத்திய முகாமைத்துவம் 1-1

(26) மத்திய முகாமைத்துவம் 1-1

(30) கனிஷ்ட முகாமைத்துவம்1-1

(165) முகாமைத்துவ உதவியாளர் 2-2

(119) முகாமைத்துவ உதவியாளர் 1-2

(07) முகாமைத்துவ உதவியாளர் 1-2(நாற்று உதவி:)

(14) ஆரம்ப மட்டம் 3

(18) ஆரம்ப மட்டம் 1

385

கட்டமைப்பு

முகாமைத்துவ சேவைத் திணைக்களம் MSD /30 இற்கு அமைய

**பணிப்பாளர் சபை**

1. தலைவர் - திரு நொஎல் பத்மசிறி காரியவசம்

**பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்**

| | பெயர் | பதவி | நிறுவனம் | தொ.பே.இல. |
|---|---|---|---|---|
| 1. | போராசிரியர் எஸ்.எஸ்.பீ.டீ.ஜீ. ஜயவர்த்தன | தலைவர் | தேயிலை ஆராய்ச்சி சபை | 051-3519619 |
| 2. | திரு. எம். விதானபத்திரன | தனியார் தொழிற்சாலை உரிமையாளர் சங்கத்தின் உறுப்பினர் | - | 077-6031000 |
| 3. | திருமதி. திஷ்னா தர்மசேகர | பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு கொழும்பு -02 | 011-2304132 |
| 4. | திருமதி. எம். அனோமா நந்தினி | பணிப்பாளர் | அரச நிதித் திணைக்களம் | 011-2480600 |
| 5. | திரு. எச்.டீ. ஹேமாரத்ன | பணிப்பாளர் நாயகம் | இலங்கைத் தேயிலை சபை காலி வீதி, கொழும்பு 03 ( 2012 ஆகஸ்ட் வரை ) | 011-2508991 |
| | திரு. டீ.டப்.எஸ். நாரங்கொட | பணிப்பாளர் நாயகம் | இலங்கைத் தேயிலை சபை ( காலி வீதி, கொழும்பு – 03) | 011-2508991 |
| 6. | திரு. நெவில் ரத்நாயக்க | கௌரவ தலைவர் | அகில இலங்கை சம்மேளனம் | 077-2910003 |
| 7. | திரு. கே.எல். குணரத்ன | கௌரவ தலைவர் | அகில இலங்கை சம்மேளனம் | 077-7707623 |
| 8. | திரு. எம்.எ.்.ப்.எஸ்.டப். ஸ்ரம்போ | கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரின் முகவர் | | 0777-226751 |
| 9. | திரு. ரொசான் ராஜதுரை | பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அலுவலர் | கஹவத்தை ப்ளான்ட்டேசன்ஸ் கம்பனி ( 2012 ஆகஸ்ட் 03 இலிருந்து ) | 011-4951353 |
| 10. | திரு. பீ.ஜீ. தசநாயக்க ( பணிப்பாளர் சபையின் கண்காணிப்பு உறுப்பினர் ) | செயற்பாட்டுப் பணிப்பாளர் | சுயாதீன ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ( 2012 ஆகஸ்ட் 25 இலிருந்து ) | 011-2773289 |

உரிய ஆண்டு காலப் பகுதியில் 12 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| | பெயர் | பதவி | நிறுவனம் | தொ.பே.இல. |
|---|---|---|---|---|
| 1. | தலைவர் - திருமதி அனோமா நந்தினி | பணிப்பாளர் | அரச நிதித் திணைக்களம் | 011-2480600 |
| 2. | உறுப்பினர் - திருமதி திஷ்னா தர்மசேகர | பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு கொழும்பு -02 | 011-2304132 |
| 3. | உறுப்பினர் - திரு. எம்.எ.ஃ.ப்.எஸ்.டப். ஸ்ரம்போ | கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரின் முகவர் | | 0777-226751 |
| 4. | உறுப்பினர் - திரு. கே.எல். குணரத்ன | கௌரவ தலைவர் | அகில இலங்கை சம்மேளனம் | 077-7707623 |
| 5. | கண்காணிப்பு – திருமதி சுவிநீதா அன்ரனி | கணக்காய்வு அதிகாரி | கணக்காய்வு உப அலவலகம் இலங்கைத் தேயிலை சபை காலி வீதி, கொழும்பு 03 | 0112583687 |

உரிய ஆண்டு காலப் பகுதியில் 06 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

<u>நிறைவேற்றுத்தர பணியாட்தொகுதி – தலைமை அலுவலகம்</u> :

தலைவர் : திரு நொஎல் பத்மசிறி காரியவசம்

பொது முகாமையாளர் : திரு.கே.ஜீ.பீ. ஒபேசேக்கர (2012/03/01) இலிருந்து (2012/02/29)-(பதில்) வரை

**விஸ்தரிப்புப் பிரிவு :**

பிரதிப் பொதுமுகாமையாளர் (விஸ்தரிப்பு) : திரு.கே.ஜீ.பீ. ஒபேசேக்கர (2012/02/29) வரை

: திரு.சீ.ஜே.ஐ.ரீ. பர்னாந்து (2012/05/12)-(பதில்) இல் இருந்து

**அபிவிருத்திப் பிரிவு :**

பிரதிப் பொதுமுகாமையாளர் (அபிவிருத்தி) : திரு. எம்.பீ. சிறில்

முகாமையாளர் ( அபிவிருத்தி ) : திரு. சீ.ஜே.ஐ.ரீ. பர்னாந்து

முகாமையாளர் ( சமூக அபிவிருத்தி ) : திரு. ஜே.எம்.ஜி. ஜயசிங்க

**திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு:**

முகாமையாளர் ( திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு ) : திருமதி எம்.ஐ.எம்.ஜே. சமரவிக்ரம

உதவி முகாமையாளர் ( திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு ) : திரு. ஆர்.ஏ. வைத்தியரத்ன

**நிதிப் பிரிவு :**

முகாமையாளர் ( நிதி ) : திருமதி டீ.ஜீ.பி. ஜயந்தி

உதவி முகாமையாளர் ( நிதி ) : திரு. பீ.ஆர். இந்திக பெரேரா

கணக்கு அலுவலர் : திரு. பீ.எச்.சீ.ஏ. பட்டகொட

**நிர்வாகப் பிரிவு :**

உதவிப் பொதுமுகாமையாளர் (சேவை) / பணிப்பாளர் சபை செயலாளர் : திரு. அமித பஸ்குவல்

முகாமையாளர் (மனிதவளம் / நிர்வாகம்) / உதவி செயற்திட்ட முகாமையாளர் : திரு. ரீ.எச்.ரீ. த சில்வா – பதில்

உதவி முகாமையாளர் (மனிதவளம் / நிர்வாகம்) : திரு. ஆர்.எம். அபேரத்னபண்டா (2012/11/02 ஆந் திகதி வரை)

நிர்வாக அலுவலர் : திரு. ஜீ.ஐ.யூ. சோமசிறி (2012/05/02 இலிருந்து 2012/09/30 திகதி வரை)

: திருமதி. கருணா சோமசிறி (2012/10/01 இலிருந்து)

: திருமதி. ஈ.எம்.டீ. அமுனுகம(2012-11-15 இலிருந்து) (2012/05/01 திகதி வரை ) மற்றும் பதில்

கணக்காய்வுப் பிரிவு :

உள்ளகக் கணக்காய்வு : திரு. கே.ஜீ. நாரத

உள்ளகக் கணக்காய்வு அலுவலர் : திரு. தமிந்த பிரியன்ஜித் (2012/05/02 இலிருந்து)

## பிரதேச அலுவலகங்கள்

**பிரதேச அலுவலகம் (காலி)**

| | | |
|---|---|---|
| பிரதேச முகாமையாளர் | : | திரு. ஏ.டப்.டப். கருணாரத்ன |
| உதவிப் பிரதேச முகாமையாளர் | : | திரு. ஜீ.பீ. சோமசிறி (பதில்) |
| பொறுப்பான அலுவலர் | | |
| | : | திரு. ஈ.ஆர்.எஸ். குணவர்த்தன |
| | : | திரு. எல். கே. வீரசேக்கர |
| | : | திரு. ஜீ. சிசிர குமார |
| | : | திரு. எஸ்.ஜே.எம். விஜேசிங்க (2012/06/30 வரை) |
| | : | திரு. ரீ.எம். சேனாரத்ன (2012/11/20 இலிருந்து) (அ.நி.) |
| நிர்வாக அலுவலர் | : | திரு. எச். தயானந்த |
| கணக்கு அலுவலர் | : | திருமதி. யு.எல்.எம். பெரேரா (2012/05/01 வரை) (பதில்) |
| | : | (2012/08/17 இலிருந்து) |

**பிரதேச அலுவலகம் (மாத்தறை)**

| | | |
|---|---|---|
| பிரதேச முகாமையாளர் | : | திரு. ஜி.ஜி. பந்துல |
| உதவி பிரதேச முகாமையாளர் | : | திரு.எஸ்எஸ்.பி. திசாநாயக்க (2012/02/10 இலிருந்து)(பதில்) |
| பொறுப்பான அலுவலர் | | |
| | : | திரு. டீ.எல்.சி. சூரியாரச்சி |
| | : | திரு. டீ.எம்.ஜே. நாகந்தல |
| நிர்வாக அலுவலர் | : | திரு. எம்.எச்.ஏ. கருணாரத்ன (2012/10/05 வரை) |
| | : | திருமதி. கே.எச்.எம்.ஏ.அமரலதா (2012/11/09 இருந்து)(பதில்) |
| கணக்கு அலுவலர் | : | திருமதி. எச்.எம்.எல்.புஷ்பகுமார (2012/05/01 வரை) (பதில்) (2012/08/17 திகதியில் இருந்து ) |
| | : | திருமதி. யு.எல்.எம். பெரேரா |
| | : | (2012/05/02 திகதியில் இருந்து 2012/08/16 வரை ) |

**பிரதேச அலுவலகம் (கண்டி)**

| | | |
|---|---|---|
| பிரதேச முகாமையாளர் | : | திரு. எச்.ஆர். அருணசாந்த (2012/02/08 வரை) (பதில்) |
| | : | திரு. எஸ். அபேசிங்க (2012/03/19 - 2012/10/30 வரை) (அ.நி) |
| | : | திரு. கே.ஏ.பீ.த.ஏ. ராஜபக்ஷ (2012/11/01 இலிருந்து) (பதில்) |
| உதவி பிரதேச முகாமையாளர் | : | திரு. எஸ்.எம்.கே.கே.பீ. கப்புகெதர ( பதில் ) |
| உதவி முகாமையாளர் (நிதி) | : | திரு. ஏ.ஜீ. சோமசிறி |
| பொறுப்பான அலுவலர் | : | திரு. எஸ்.எம்.கே.கே.பீ. கப்புகெதர |
| | : | திரு. டப்.ஜே.டப். அரம்பேபொல |
| | : | திரு. ரீ.எம்.ஜே. ஹேரத் |
| | : | திரு. ரீ. அமரசேகர |
| | : | திரு. அநுருத்த பண்டார |
| நிர்வாக அலுவலர் | : | திரு. ஈ. ஜேசுதாசன் (2012/05/01 வரை) பதில் |
| | : | திரு. பீ.எம்.ஜீ. பண்டாரநாயக்க (2012/05/02 இருந்து) |

**பிரதேச அலுவலகம் (இரத்தினபுரி)**

| | | |
|---|---|---|
| பிரதேச முகாமையாளர் | : | திரு. யூ.எல். ஆரியபால (பதில்) |
| உதவிப் பிரதேச முகாமையாளர் (விஸ்தரிப்பு) | : | திரு. ஜீ.ஏ.ஏ. கமகே (பதில்) |
| பொறுப்பான அலுவலர் | : | திரு. கே.ஏ.பீ. பத்மராஜா |
| | : | திரு. எல். யூ. குமாரசிறி |
| | : | திரு. கே.எம்.ஆர்.எல். பண்டார |
| | : | திரு. பீ.டீ.கே. பாலசந்திர (2012/01/16 இலிருந்து) - (பதில்) |
| நிர்வாக அலுவலர் | : | திரு. டீ.எம்.என்.கே.பீ. தானாயம்வத்தை (2012/05/01 வரை) பதில் ( 2012/10/01 இலிருந்து ) |
| | : | திருமதி. கருணா சோமசிறி (2012/05/02 இலிருந்து 2012/09/30 வரை) |
| கணக்கு அலுவலர் | : | திருமதி. எம்.ஏ. பியசீலி (2012/05/01 வரை) (பதில்) (2012/06/01 திகதியில் இருந்து) |
| | : | திரு.டப்.எம். தனபால (2012/05/01இருந்து 2012/05/31வரை) |

**பிரதேச அலுவலகம் (ஊவா)**

| | | |
|---|---|---|
| பிரதேச முகாமையாளர் | : | திரு. ஏ.டப். நில்மல்கொட (2012/02/15 வரை) - அ.நி. |
| பிரதேச முகாமையாளா | : | திரு. எச்.ஆர். அருணசாந்த (2012/02/15 இலிருந்து) - பதில் |
| உதவிப் பிரதேச முகாமையாளர் (விஸ்தரிப்பு) | : | திரு. எம்.எம். விஜேபண்டார (பதில்) |
| பொறுப்பான அலுவலர் | : | திரு. டப்.ரீ.ஆர்.பீ. விமலரத்ன |
| | : | திரு.கே.எம்.ஏ.டீ.எஸ். குருப்பு (2012/01/16 இருந்து)- (பதில்) |
| | : | திரு. டீ.எம்.ஜீ. விக்கிரமரத்ன பண்டார (2012/01/16 இலிருந்து)- (பதில்) |
| உதவி முகாமையாளர் (மனிதவளம் /நிர்வாகம்) | : | திரு. டீ.எம். குணபால |
| கணக்கு அலுவலர் | : | திரு.டப்.எம். தனபால (2012/05/01 வரை) (பதில்) (2012/06/01 இலிருந்து) |
| | : | திருமதி. எம்.ஏ.பியசீலி ( 2012/05/02 இருந்து 2012/05/31 வரை ) |

**பிரதேச அலுவலகம் (நுவரெலியா)**

| | | |
|---|---|---|
| பிரதேச முகாமையாளர் | : | திரு. எச்.வை.பீ. உக்குவளை (2012/03/18 வரை) (பதில்) |
| | : | திரு. பீ.ஏ.டப். நில்மல்கொட (2012/03/18 இருந்து) அ.நி. |
| உதவிப் பிரதேச முகாமையாளர் (விஸ்தரிப்பு) | : | திரு. டப்.எச்.பி.எஸ். விஜேதுங்க (பதில்) |
| பொறுப்பான அலுவலர் | : | திரு. டீ.எம்.ஆர்.கே.பி. தசநாயக்க |
| | : | திரு. ஜே. போகஹவத்தை |
| | : | திரு. ஜீ.என். யஹமுனி (2012/01/16 இருந்து) - (பதில்) |
| | : | திரு. பீ.டீ.ஏ. ஹியராப்பிட்டிய (2012/01/16 இருந்து) - (பதில்) |

| | | |
|---|---|---|
| உதவி பிரதேச முகாமையாளர்(நிதி) | : | திரு. ஏ.பீ.என்.எஸ். களுஆரச்சி (2012/10/05 வரை) |
| நிர்வாக அலுவலர் | : | திரு. பீ.எம்.ஜீ. பண்டாரநாயக்க (2012/05/01 வரை) - (பதில் |
| | : | திரு. டீ.எம்.என்.கே.பீ. தானாயம்வத்தை (2012/05/01 இலிருந்து 2012/09/30 வரை ) |
| | : | திரு. ஜீ.ஐ.யு. சோமசிறி (2012/10/01 இலிருந்து ) |
| மக்கள் தொடர்பாடல் அலுவலர் | : | திரு. ஏ. திசாநாயக்க |

**பிரதேச அலுவலகம் (கேகாலை)**

| | | |
|---|---|---|
| பிரதேச முகாமையாளர் | : | திரு. திரு. பீ.ஏ.டப். நில்மல்கொட |
| உதவி பிரதேச முகாமையாளர் (விஸ்தரிப்பு) | : | திரு. ஏ. குணவர்த்தன (பதில்) |
| பொறுப்பான அலுவலர் | | |
| | : | திரு. டீ.எம்.ஜி.எஸ். ஏக்கநாயக்க |
| | : | திரு. ஆர்.ஏ.ஜீ.பி. ரணசிங்க |
| நிர்வாக அலுவலர் | : | திரு. எம்.பி. சோமதாச (2012/05/01 இலிருந்து) பதில் |
| | : | திருமதி. ஈ.எம்.டீ. அமுனுகம (2012/05/02 இலிருந்து 2012/11/15 வரை) |

**பிரதேச அலுவலகம் (களுத்துறை)**

| | | |
|---|---|---|
| பிரதேச முகாமையாளர் | : | திரு. கே.ஏ.பீ. த ராஜபக்ஷ (2012/09/19 வரை) பதில் |
| உதவி பிரதேச முகாமையாளர் (விஸ்தரிப்பு) | : | திரு. எல்.எச். ரன்ஜித் (பதில்) |
| பொறுப்பான அலுவலர் | | |
| | : | திரு. ஏ.ஏ.டீ.பீ. அபேதிலக |
| | : | திரு. எம்.எம். சந்திரபால (2012/01/16 இருந்து) -(பதில்) |
| நிர்வாக அலுவலர் | : | திருமதி. எம்.கே.கே. சோமசிறி (2012/10/01 இருந்து)-(பதில்) |
| | : | திருமதி. என்.வீ. பிரீதி புஷ்பகுமாரி (2012/05/10 இருந்து) - (பதில்) |

ரத்னசிறி விக்கிரமநாயக்க தேசிய பயிற்சி நிலையம்

| | | |
|---|---|---|
| முகாமையாளர் (பயிற்சி) | : | திரு. எஸ். அபேசிங்க |

# நிர்வாக மாவட்ட அலுவலகங்கள்

**தலைமை அலுவலகம்**
**இல 70, பாராளுமன்ற வீதி,**
**பெலவத்தை, பத்தரமுல்லை.**
**தொலைபேசி இல. 011 – 7909020/21**

| நிர்வாக மாவட்டம் | அலுவலகம் | விஸ்தரிப்பு நிலையம் | உப அலவலகம் | சேவை பிரிவு |
|---|---|---|---|---|
| காலி | தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை<br><br>காலி பிரதேச அலுவலகம்<br>இல. 81, பிரதீபாகார வீதி,<br>கோட்டை, காலி<br>தொலைபேசி இல.: 091-7201126/28<br>தொலைநகல் : 091-2244382 | தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை<br>பிரதேச விஸ்தரிப்பு நிலையம்<br>வலஹந்துாவை வத்தை, காலி<br>தொலைபேசி இல.: 091-2234324 | வதுரம்ப | குருபனாவ<br>உனன்விட்டிய<br>உடுகம<br>பத்தேகம<br>வதுரம்ப |
| | | | எல்பிட்டிய | எத்கந்துர<br>பிட்டிகல<br>நியாகம<br>எல்பிட்டிய<br>படபொல<br>கஹதுாவை |
| | | | ஹிங்கல்கொட | தெல்லவ<br>மாவனான<br>நெளுவை<br>ஹபரகட<br>ஹல்விட்டிகல<br>ஹினிதும<br>ஓபாத |
| | | | ஆக்மீமன | இமதுாவ<br>கொட்டாவ<br>யக்கலமுல்ல<br>பெரனாகொட<br>அக்மீமன |

| நிர்வாக மாவட்டம் | அலுவலகம் | விஸ்தரிப்பு நிலையம் | உப அலுவலகம் | சேவைப் பிரிவு |
|---|---|---|---|---|
| மாத்தறை / ஹம்பாந் தோட்டை | தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை<br>மாத்தறை பிரதேச அலுவலகம்<br>இல. 31, காலிதாஸ் வீதி, மாத்தறை.<br>தொலைபேசி : 041 - 7200799<br>041 - 7200394/96<br>தொலைநகல்: 041- 2226487 | தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை<br>பிரதேச விஸ்தரிப்பு நிலையம்<br>மொரவக்க, அலபலாதெனிய | கொட்டடபொல | தெனியாய<br>களுபோவிடிய<br>மொரவக்க<br>தேரங்கல<br>கொலவனிகம<br>கொட்டபல |
| | | | அக்குரஸ்ஸ | பிட்டபெந்தர<br>கணங்கே<br>அக்குரஸ்ஸ<br>தெலிஜ்ஜவில<br>திப்பட்டுவாவ<br>கெட்டன்வில<br>கம்புறுபிட்டிய |
| | | | பஸ்கொட | பெரலபனாதர<br>வராபிட்டிய<br>கிரிலிபன<br>தம்பஹல<br>பஸ்கொட<br>ஊருபொக்க<br>தெய்யந்தர |
| நுவரெலியா/ கண்டி | தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை<br>கம்பஹா பிரதேச அலுவலகம்<br>இல. 22, ஹில் வீதி, கம்பளை.<br>தொலைபேசி : 081 - 7201863<br>081 - 7201593<br>தொலைநகல்: 081 - 2351293 | தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை<br>திஸ்பனை<br>பிரதேச விஸ்தரிப்பு நிலையம்<br>திஸ்பனை, புதிய திஸ்பனை<br>தொலைபேசி : 054-3541075 | கம்பளை | பன்விலதென்ன<br>கம்பளை<br>நில்லம்ப<br>புபுரஸ்ஸ<br>புஸ்ஸல்லாவை |
| | | | உடுநுவர | ஹந்தெஸ்ஸை<br>வட்டப்பொல<br>குருந்துவத்தை<br>உலப்பனை<br>தொலஸ்பாகே |
| | | | கொத்மலை | ருவன்புர<br>திஸ்பன<br>ஹரங்கல<br>ஹெல்பொட<br>பூண்டுலோயா |
| | | | கினிகத்ஹேனை | கினிகத்ஹேனை<br>பொல்பிட்டிய<br>லக்ஷபான<br>நாவலப்பிட்டிய<br>வெலிகம்பளை |

| நிர்வாக மாவட்டம் | அலுவலகம் | விஸ்தரிப்பு நிலையம் | உப அலுவலகம் | சேவைப் பிரிவு |
|---|---|---|---|---|
| கண்டி / மாத்தளை/ குருணாகலை | தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை<br>கண்டி பிரதேச அலுவலகம்<br>இல.2 / 7 /1, கன்னொருவை வீதி, போராதனை, கண்டி.<br>தொலைபேசி : 081 - 7200827<br>081 - 7201821<br>தொலைநகல்: 081 - 2389011 | தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை<br>பிரதேச விஸ்தரிப்பு நிலையம்<br>சூரியகொடை, முருதலாவை<br>தொலைபேசி : 081 -2412139 | மாத்தளை | உக்குவளை<br>மாத்தளை<br>இரத்தோட்டை<br>அலவதுகொடை |
| | | | வத்தேகம | பூஜாபிட்டிய<br>வரல்லகம<br>தெல்தெனிய<br>வத்தேகம |
| | | | ஹங்குரன்கெத்த | ஹேவாஹெட்ட<br>மந்தாரம்நுவர<br>ஹங்குரன்கெத்த<br>வலப்பனை |
| | | | கிராகம | கன்னொருவை<br>கலகெதர<br>மெனிக்திவல<br>தந்துறை |
| இரத்தினபுரி | தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை<br>இரத்தினபுரி பிரதேச அலுவலகம்<br>1 / 28, நவ நகரம், இரத்தினபுரி<br>தொலைபேசி : 045 - 7201243<br>045 - 7201904<br>தொலைநகல்: 045 - 2228647 | தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை<br>பிரதேச விஸ்தரிப்பு நிலையம்<br>சன்னஸ்கம, இரத்தினபுரி.<br>தொலைபேசி : 045 - 2275323 | நிவித்திகல | நிவித்திகல<br>இரத்தினபுரி<br>வெந்தாகல<br>கலவானை<br>அயகம<br>குகுலேகம |
| | | | பலாங்கொடை | ஓப்பநாயக்க<br>பின்னவலை<br>ராஸ்ஸகல<br>இம்புல்ப்பே<br>எல்லராவை<br>வலிகெபொல<br>பலாங்கொடை |
| | | | இரக்குவானை | பொத்துபிட்டிய<br>மாதம்பே<br>கோலொன்ன<br>இரக்குவானை<br>கஹவத்தை |

| நிர்வாக மாவட்டம் | அலுவலகம் | விஸ்தரிப்பு நிலையம் | உப அலுவலகம் | சேவைப் பிரிவு |
|---|---|---|---|---|
| | | | குருவிட்ட | எஹலியகொட<br>கல்லேல்ல<br>கிலிமலை<br>எரத்ன<br>கிரிஎல்ல<br>வேவல்வத்தை |
| பதுளை / மொனராகலை | தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை<br>பண்டாரவளை பிரதேச அலுவலகம்<br>நவ பதுளை வீதி, பண்டாரவளை<br>தொலைபேசி : 057 - 7200241<br>057 - 7200081<br>தொலைநகல்: 057 - 2232237 | தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை<br>பிரதேச விஸ்தரிப்பு நிலையம்<br>போகஹமடித்த, ஹாலிஎல.<br>தொலைபேசி : 055 -2294363 | ஹாலி எல | லுணுகல<br>பஸ்ஸரை<br>வேபஸ்ஸவளை<br>ஹாலி எல<br>எட்டம்பிட்டிய |
| | | | பண்டாரவளை | பதுளை<br>ஹப்புத்தளை<br>பண்டாரவளை<br>லியன்கஹவல<br>எல்ல<br>பல்லகெட்டுவ<br>ஹல்துமுல்லை |
| | | | வெலிமடை | வெலிமடை<br>பொரலந்த<br>லுணுவத்தை<br>பம்பரபாண |
| களுத்துறை/ கொழும்பு | தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை<br>களுத்துறை பிரதேச அலுவலகம்<br>தடுகொடயாவத்த வீதி,<br>இத்தகொட, மத்துகம<br>தொலைபேசி : 034 - 7200183<br>034 - 7201630<br>தொலைநகல்: 034 - 2249690 | | மீகஹதென்ன | மீகஹதென்ன<br>யட்டபாத்த<br>பெலவத்தை<br>இத்தபான<br>பந்துரலிய<br>ஹடிகல்ல |
| | | | ஹொரணை | ஹொரணை<br>புலத்சிங்கள<br>மஹகம<br>மத்துகம<br>அகலவத்தை<br>கெலின்கந்த |

| நிர்வாக மாவட்டம் | அலுவலகம் | விஸ்தரிப்பு நிலையம் | | சேவைப் பிரிவு |
|---|---|---|---|---|
| கேகாலை | தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை<br>கேகாலை பிரதேச பணிமனை<br><br>கமத்தொழில் கட்டிடம்,<br>கச்சேரி வீதி, கேகாலை.<br>தொலைபேசி : 035 - 7201254<br>035 - 7201243<br>தொலைநகல்: 035 - 2230163 | தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை<br>பிரதேச விஸ்தரிப்பு நிலையம் | தரணியகல | தரணியகல<br>நூரி<br>யட்டியந்தோட்டை<br>தெஹியோவிட்ட<br>மாலிபொட<br>கித்துள்கல<br>திக்எல்ல |
| | | ஹிங்குல | | |
| | | | கேகாலை | கேகாலை<br>அரநாயக்க<br>புலத்கொஹுபிட்டி<br>வலல்பொல |
| | தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபை<br>ஹந்தானை பயிற்சி நிலையம்<br>5 ஆம் மைல்கல், மத்திய பகுதி,<br>உடுவளை, ஹந்தானை<br>தொலைபேசி : 081 - 7201760<br>081 - 7201873<br>தொலைநகல்: 081 - 3800679 | | | |

**அகில இலங்கை தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி சங்கங்களின் அமைப்பு**

| | | |
|---|---|---|
| திரு. நெவில் ரத்நாயக்க | - | கௌரவ தலைவர் |
| திரு. கே.எல். குணரத்ன | - | கௌரவ செயலாளர் |
| திரு. என்.எம்.ஆர். ஜயதிலக்க | - | கௌரவ பொருளாளர் (Treasurer) |
| திரு. ஜே.எம்.பீ..ஜே. பண்டார | - | கௌரவ உப தலைவர் |
| திரு. கே. வீசரசிங்க | - | கௌரவ உப செயலாளர் |

**01. காலி - தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி பிராந்திய சங்கங்களின் அமைப்பு**

| | | |
|---|---|---|
| திரு.பீ.எச். சுசந்த டி சில்வா | - | கௌரவ தலைவர் |
| திரு.ரீ.எச். ரிச்சர்ட் | - | கௌரவ செயலாளர் |
| திரு.எம்.ஏ.ஆர். குணவர்த்தன | - | கௌரவ பொருளாளர் |

**02. மாத்தறை - தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி பிராந்திய சங்கங்களின் அமைப்பு**

| | | |
|---|---|---|
| திரு. நெவில் ரத்நாயக்க | - | கௌரவ தலைவர் |
| திரு. கே. வீரசிங்க | - | கௌரவ செயலாளர் |
| திருமதி டபிள்யூ பீ ஹேமா | - | கௌரவ பொருளாளர் |

**03. களுத்துறை - தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி பிராந்திய சங்கங்களின் அமைப்பு**

| | | |
|---|---|---|
| திரு. திரு. கே.எல். குணரத்ன | - | கௌரவ தலைவர் |
| திரு. கே.ரீ. பியதாச | - | கௌரவ செயலாளர் |
| திரு. யசபால குணவர்த்தன | - | கௌரவ பொருளாளர் |

**04. இரத்தினபுரி- தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி பிராந்திய சங்கங்களின் அமைப்பு**

| | | |
|---|---|---|
| திரு. ஜே.எம்.பீ..ஜே. பண்டார | - | கௌரவ தலைவர் |
| திரு. ஜகத் சௌரத் பத்திரண | - | கௌரவ செயலாளர் |
| திரு. ஓ.கே. ரத்னதிலக்க | - | கௌரவ பொருளாளர் |

**05. கேகாலை - தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி பிராந்திய சங்கங்களின் அமைப்பு**

| | | |
|---|---|---|
| திரு. பீ.ஆர்.ஏ. ரத்நாயக்க | - | கௌரவ தலைவர் |
| திரு. என்.எம்.ஆர். ஜயதிலக்க | - | கௌரவ செயலாளர் |
| திரு. எச்.டீ. அநுர ஜயரத்ன | - | கௌரவ பொருளாளர் |

**06. கண்டி - தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி பிராந்திய சங்கங்களின் அமைப்பு**

திரு. பீ.ஜி. அபேசிங்க - கௌரவ தலைவர்
திரு. டப். டீ. ஜயரத்ன - கௌரவ செயலாளர்
திரு. ஆர். ரி. குருசிங்க - கௌரவ பொருளாளர்

**07. நுவரெலியா - தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி பிராந்திய சங்கங்களின் அமைப்பு**

திரு .டப்.ஆர்.எஸ். கருணாரத்ன - கௌரவ தலைவர்
திரு. டீ.ஜி.எஸ்.பீ. பியசேன - கௌரவ செயலாளர்
திரு. பீ.கே. சோமரத்ன - கௌரவ பொருளாளர்

**08. ஊவா - தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி பிராந்திய சங்கங்களின் அமைப்பு**

திரு. ஆர்.எம். குணசேகர - கௌரவ தலைவர்
திரு. எச்.எம். தயானந்த - கௌரவ செயலாளர்
திரு. ஏ.எம். குணரத்ன - கௌரவ பொருளாளர்

# பொழிப்பு

## தேயிலை சிறு பற்றுநிலங்கள் விஸ்தரிப்பு

2005 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரத் தரவுகளுக்கேற்ப கைவிடப்பட்ட தேயிலை நிலங்கள் தவிர, மதிப்பிடப்பட்ட மொத்த தேயிலை நிலங்களின் பரப்பளவு 125019 ஹெக்ரயார்கள் (20 பேர்ச்சஸ்களுக்குக் குறைந்த காணிகள் அடங்கலாக) ஆகும். கடந்த தசாப்த காலத் தரவுகளின் படி, மானிய உதவியைக் கொண்டு வருடாந்தம் தேயிலை மீள்பயிரிடுகைக்காக ஏறத்தாழ 1092 ஹெக்ரயார் நிலங்களில் களை பிடுங்கப்பட்டும், 891 ஹெக்ரயார் நிலங்களில் வருடந்தோறும் தேயிலை மீள் பயிரிடப்பட்டும் வருகின்றன. கடந்த 03 ஆண்டுகளின் வளர்ச்சியை உற்றுநோக்கும் போது, வருடாந்தம் ஏறத்தாழ 1016 ஹெக்ரயார் நிலங்களில் களை பிடுங்கப்பட்டும், ஏறக்குறைய 836 ஹெக்ரயார் நிலங்களில் தேயிலை மீள் பயிரிடப்பட்டும் வந்துள்ளன. மானிய உதவியின் கீழ் தேயிலையை மீள்பயிரிடுவது தவிர, விவசாயிகள் வருடாந்தம் மானிய உதவிகளின்றியும் தேயிலையை மீள் பயிரிடுவதற்கும் இன்னும் புதிதாகத் தேயிலையை நடுவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், உற்பத்தியாகும் தேயிலைக்கும் மாற்றுப் பயிர்களுக்கும் கவர்ச்சிகரமான சந்தை விலையைப் பெற்றுக் கொள்வதற்கும், குறைந்த வருமானம் பெறுகின்றவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட விசேட வேலைத்திட்டங்கள் மற்றும் உரிய காலத்தில் நிகழும் சாதக மற்றும் பாதக விளைவுகளைப் பொறுத்து வருடாந்தம் இந்த வளர்ச்சி வீதப் போக்கில் தளம்பல்நிலை காணப்படுவதை அவதானிக்க முடியும். 2012 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவு தொடர்பாக தேயிலைப் பரிசோதகர்கள் / தேயிலை விஸ்தரிப்பு அலுவலர்கள் ஆகியோர் மூலம் சேகரிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட பின்னணி தகவல்களின் அடிப்படையில் ஏறக்குறைய 785 விவசாயிகள் தேயிலைப் பயிர் செய்கையில் புதிதாக ஈடுபட்டுள்ளனர். அத் தகவல்களின் அடிப்படையில் மானிய உதவியின்றி 291 ஹெக்ரயார் நிலங்களில் புதிதாக தேயிலை பயிரிடப்பட்டுள்ளன. அதே போன்று அதிக நிலப்பரப்பில் அதாவது 84 ஹெக்ரயார் நிலப்பரப்பில் இரத்தினபுரி மாவட்டத்தில் புதிதாக தேயிலை பயிரிடப்பட்டுள்ளன. அதற்கமைய 2012 ஆண்டின் இறுதியில் தேயிலை பயிரிடல் தொடர்பாக மதிப்பிடப்பட்ட முழுமொத்த தேயிலை சிறு பற்றுநில நிலப்பரப்புக்கள் 120,955 ஹெக்ரயர்கள் ஆகும்.

### தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறை உற்பத்தியும் தேசிய உற்பத்திக்கான அதன் பங்களிப்பும்

கடந்த ஒரு தசாப்த காலத்தினுள் தேயிலை சிறு பிரிவின் உற்பத்தியை 188 மில்லியன் கிலோவில் இருந்து 233 மில்லியன் கிலோ வரை அதிகரித்துக் கொள்வதற்கு முடிந்துள்ளது. அத்துடன் தேசிய உற்பத்திக்கான பங்களிப்பு 62 % இலிருந்து 71.4 % வரை அதிகரித்துள்ளது. 2011 ஆண்டுடன் ஒப்பிடும் போது 4.09 மில்லியன் கிலோ அல்லது 1.52 % வீதத்தால் வளர்ச்சி கண்டுள்ளமையை அவதானிக்க முடிந்தது.

### தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவின் உற்பத்தித்திறன்

தேசிய பசளை மானியத்துடன் திறந்த சந்தையின் விலைத் திட்டத்தின் கீழ் தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களுக்கு பசளையைப் பெற்றுக் கொள்ள முடிந்தமையினால் 2012 ஆண்டிலும், தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவின் உற்பத்தியைப் போன்று பொதுவாக நோக்கும் போது உற்பத்தித்திறனும் அதிகரித்தள்ளது. அதாவது சாதாரணமாக வருடாந்த உற்பத்தித்திறன் ஒரு ஹெக்ரயாருக்கு / முடிவுப் பொருளான தேயிலை 1976 கிலோ கிராமில் இருந்து 2001 கிலோ கிராம் வரை அதாவது 0.26% அதிகரித்துள்ளது. 2011 ஆண்டுக்கு நிகராக மலைநாட்டு மற்றும் மத்திய மலைநாட்டுத் தேயிலை உற்பத்தி முறையே 0.9 % மற்றும் 0.4 % வீதத்தால் குறைவடைந்து இருப்பினும், தாழ்நாட்டுத் தேயிலை உற்பத்தி 0.4 % வீதத்தால் அதிகரித்துள்ளது. பொதுவாக தாழ்நாட்டு உற்பத்தித்திறன் ஒரு ஹெக்ரயாருக்கு / முடிவுப் பொருளான தேயிலை 2083 கிலோ கிராமில் இருந்து 2142 கிலோ கிராம் வரை அதாவது 2.8 % வீதத்தால் அதிகரித்துள்ளது.

### தேயிலை மீள் பயிரிடல் நிலப்பரப்பும் தேயிலை மீள் பயிரிடல் விகிதமும்

தேசிய கொள்கைக்கு இணங்க, ஆகக் கூடிய அறுவடையைப் பெறுகின்ற தேயிலை நிலப்பரப்புக்களை மேலும் பேண வேண்டுமாயின் தற்பொழுது இருக்கின்ற 2 % வீத தேயிலை உற்பத்தி நிலப்பரப்புக்களில் வருடாந்தம் தேயிலை மீள் பயிரிடப்படல் வேண்டும். புள்ளிவிபரத் தகவல்களின் படி தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறையில் வளர்ந்த தேயிலைச் செடிகள் காணப்பட்ட நிலப்பரப்புக்களின் அளவு 116,492 ஹெக்ரயாாகள் ஆகும். மேலும், 21,613 ஹெக்ரயார் காணிகள் ஏற்கனவே 25 ஆண்டுகளாக பயிரிடப்பட்டு வந்த நிலங்களாகும். இதனை இயன்றளவில் துரிதமாக மீள் பயிரிடலில் ஈடுபடுத்த வேண்டியது அத்தியாவசிமாகும். ஒதுக்கீடுகளுக்கு அமைய நிறுவனத்தின் முன்னைய ஆண்டுகளின் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் பௌதிக இலக்குகள் குறைக்கப்பட்டதன் காரணமாக 2010 ஆண்டில் களைபிடுங்கப்பட்ட 1015 ஹெக்ரயார் நிலப்பரப்புக்களில் 889 ஹெக்ரயார் அல்லது 88 % வீதம் 2012 ஆண்டில் மீள் பயிரிடல் வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. தேசிய தேவையின் அடிப்படையில் 2300 ஹெக்ரயார் ஆண்டுதோறும் மீள் பயிரிட வேண்டியிருந்தும் கூட, மேற்படி வரையறுக்கப்பட்டுள்ள நிலைமைகளைக் கருத்திற் கொண்டு தேயிலை மீள் பயிரிடப்பட்டுள்ள விகிதம் 0.76 % ஆகும்.

### பயிர் புனர்ஜீவனம்

தேயிலை கத்தரித்தல், மண் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுதல், நிழலாக்கல் போன்ற நடவடிக்கைகளுடன் வெற்றிடங்களில் இடைநடுகை ஆகிய பணிகளை ஒன்றிணைந்தவாறு மேற்கொள்ளும் பொருட்டு சிபார்சு செய்யப்பட்டுள்ளவாறு, பயிர் புனர்ஜீவன ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் செலுத்தப்படுகின்றன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ஊக்குவிப்புத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிப்பவர்களின் தொகை 34 % வீதத்தாலும், விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் முன்னேற்றம் 44 % வீதத்தாலும் அதிகரித்துள்ளது. இது 2011 ஆண்டுடன் ஒப்பிடும் போது 52 % அதிகரிப்பை காட்டுகின்றது. வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளின் பிரகாரம் இலக்காகக் கொள்ளப்பட்ட தேயிலைச் செடிகளின் எண்ணிக்கை 377400 ஆகும். எனினும், நேர் அமைச்சின் ஆலோசனைக்கு இணங்க களத் தேவைப்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கும் அடிப்படையில் செடிகளின் எண்ணிக்கையை 766991 வரை அதிகரிக்க முடிந்துள்ளது. ஒதுக்கீடுகள் வரையறுக்கப்பட்டுள்ளமை காரணமாக நடுகைச் செடிகள் குறைக்கப்பட்டிருப்பினும் பயிர் புனர்ஜீவனம் தொடர்பாக இலக்காகக் கருதப்பட்ட செடிகளின் எண்ணிக்கை 1.3 மில்லியன் ஆகும்.

### விஸ்தரிப்பு மற்றும் ஆலோசனைச் சேவைகள்

அனைத்து பிரதேச அலுவலகங்கள், விஸ்தரிப்பு அலுவலகங்கள் ஆகியவற்றின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட விஸ்தரிப்பு மற்றும் ஆலோசனைச் சேவை நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 2012 ஆம் ஆண்டில் 6508 குழுநிலை நிகழ்ச்சிதிட்டங்கள் நடாத்தப்பட்டன. இது 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பு நோக்குகையில், 6.6 % வீதத்தால் குறைவடைந்துள்ளது. 2012 ஆம் ஆண்டின் இலக்கு 6846 நிகழ்ச்சித் திட்டங்கள் ஆக இருந்தது. அதன் ஆண்டுக்கான முன்னேற்றம் 5 % வீதத்தால் குறைந்திருந்து காணப்பட்டது. 2012 ஆண்டில் அந் நிகழ்ச்சித் திட்டங்களில் 143,456 விவசாயிகள் கலந்துகொண்டனர். எனினும், 175,289 எண்ணிக்கையான விவசாயிகள் எதிர்பார்க்கப்பட்டனர். அதற்கமைய எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையின் முன்னேற்றம் 82 % ஆக இருந்தது.

தேயிலை சிறு பற்றுநிலங்களில் மண்ணின் அமிலத்தன்மையை பரீட்சிப்பது தொடர்பாக 16,235 மண் மாதிரிகள் 2012 ஆம் ஆண்டில் பரீட்சிக்கப்பட்டுள்ளதுடன், அதன் மேம்பாடு எதிர்பார்க்கப்பட்டவாறு 23257 மாதிரிகளின் எண்ணிக்கையின் 70 % வீதமாகும்.

### தேயிலை சிறு பற்றுநில சங்கங்கள்

1989 ஆண்டில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்திச் சங்கங்கள் சட்டரீதியான ஒரு அமைப்பு முறையாகும். 8 பிரதேச அமைப்புக்களையும், ஒரு அகில இலங்கை அமைப்பையும் கொண்டுள்ள அச் சங்க முறையின் கீழ் 2012 ஆண்டளவில் 1381 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 261,493 ஆகும். 2011 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டின் சங்கங்களின் எண்ணிக்கை 02 ஆல் அல்லது 0.1 % வீதத்தால் அதிகரிகத்துள்ளது. உறுப்பினர்களின் எண்ணிக்கை 12668 ஆல் அல்லது 4.6 % வீதத்தால் குறைந்துள்ளது.

**நிறுவகத்தின் செயற்பாட்டுக் கிரயம்**

2012 ஆண்டளவில் நிறுவகத்தின் அபிவிருத்திக் கிரயம் 276,323 மில்லியன் ரூபா ஆகும். செயற்பாட்டுக் கிரயம் 233,738 மில்லியன் ரூபா ஆகும். 2011 ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி ஏற்பாடுகளுக்கு அமைய, அபிவிருத்திக் கிரயம் 67.9 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது. செயற்பாட்டுக் கிரயம் 15.21 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதற்கமைய செயற்பாட்டுக் கிரயத்துக்கும் அபிவிருத்தி கிரயத்துக்கும் இடையிலான விகிசாதாரம் 0.85 ஆகும். இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் செயற்பாட்டுக் கிரயம் 0.19 ஆல் குறைந்து காணப்படுகிறது. எனினும் வரையறுக்கப்பட்ட நிதியேற்பாட்டுக்கு அமைய அபிவிருத்தி இலக்குகளையும், பணிகளையும் நேரடியாக செயற்பாட்டு மீளாய்வு அலுவல்கள் தொடர்பாக பயன்படுத்துவதற்கு முடியாமையினால், அப் பெறுமதியை செயற்பாட்டு மீளாய்வு தொடர்பாக பயன்படுவது உசிதமானதல்ல.

**தேயிலைப் பற்றுநில உரிமையாளர்களின் விகிதாசாரத்திற்கேற்ப தேயிலைப் பரிசோதகர்கள் / விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள்**

பயனுறுதி வாய்ந்த சேவைகளை வழங்கும் பொருட்டு விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களினதும் விவசாயிகளினதும் எண்ணிக்கை 1:1000 என இருப்பினும், தேயிலை சிறு பற்றுநிலப் பிரிவின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் தேயிலை பயிரிடலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் விகிதாசாரம் 1:2730 ஆகும். இதற்கமைய உள்ளடக்கப்பட வேண்டிய விவசாயிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளமையால் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். எனினும், நிறுவனத்தின் நிதியேற்பாடுகள் மற்றும் செலவுகள் வரையறுக்கப்பட்டுள்ளமையைக் கவனத்திற்கொண்டு அவ்வாறு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியாத போதும், அதற்குப் பதிலாக தேயிலை சிறு பற்றுநில சங்கங்கள் போன்ற சமூக அமைப்புக்களின் துணைச் சேவைகளிடமிருந்து ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தேயிலைப் பற்றுநிலங்களின் உற்பத்தித் திறனை மென்மேலும் விருத்தி செய்வதற்கு விவசாய விஸ்தரிப்பு நடவடிக்கைகளை வலுவூட்டுவது அத்தியாவசியமாகும்.

**பச்சைத் தேயிலைக்கான விலை**

2012 ஆண்டளவில் இலங்கைத் தேயிலைச் சந்தையில் பெற்ற விலைமனுக்களுக்கு அமைய பச்சைத் தேயிலை ஒரு கிலோவுக்கு ஆண்டிறுதியில் தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களுக்கு கிடைத்த பொதுவான பச்சைத் தேயிலை விலை அதாவது மலைநாடு தொடர்பாக 54.91 ரூபாவும், மத்திய மலைநாடு தொடர்பாக 51.34 ரூபாவும், தாழ்நிலப் பகுதிகள் தொடர்பாக 59.54 ரூபாவும் ஆக இருந்ததுடன், ஏனைய அனைத்துப் பிரதேசங்கள் தொடர்பாகவும் பொதுவாக 57.27 ரூபா ஆக இருந்தது. அனைத்துப் பிரதேசங்கள் தொடர்பாகவும் பொதுவான விலையின் படி 2012 ஆண்டில் தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் உற்பத்திகளில் நேர் பெறுமானத்தைக் காட்டியது.

# தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபை
# ஆண்டறிக்கை – 2012

## 1. அறிமுகம்

### 1.1. நிறுவனமும் தொழிற்பாடும்

தேசிய பொதுச் சபையின் 1975 இன் 35 ஆம் இலக்க தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி சபையின் கீழ், 1977 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆந் திகதி தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை தாபிக்கப்பட்டது.

அதன் பிற்பாடு, பிரதான பட்டயத்தில் திருத்தங்களை ஒன்றிணைத்து 1991 இன் 36 ஆம் இலக்க சட்டம், 1997 இன் 21 ஆம் இலக்க சட்டம், 2003 இன் 34 ஆம் இலக்க சட்டம் மற்றும் 2006 இன் 24 ஆம் இலக்க சட்டம் ஆகியன சட்டங்களாக்கப்பட்டுள்ளன.

**குறிக்கோள்கள்:**

தேயிலை சிறு பற்றுநிலங்களை அபிவிருத்தி செய்தல், உற்பத்தியை அதிகரித்தல், உற்பத்தித்திறனை அதிகரித்தல், கொழுந்து விற்பனை நடவடிக்கைகள் மற்றும் தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் நலன்களைப் பேணுதல் என்பன இந் நிறுவனத்தின் குறிக்கோள்கள் ஆகும்.

தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம், “ 10 ஏக்கருக்குக் குறைந்த தேயிலை நிலங்கள் தேயிலை சிறு பற்றுநிலங்கள்” என அழைக்கப்படும். எனினும், இலங்கைத் தேயிலைச் சபையின் கீழுள்ள 10 – 50 ஏக்கர் வரையான தேயிலை நிலங்கள் தொடர்பான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் அதிகாரங்களும் தத்துவங்களும் 1978 சனவரி மாதம் 01 ஆந் திகதியில் இருந்து தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையிடம் கௌரவ பெருந்தொட்ட கைத்தொழில் அமைச்சரினால் ஒப்படைக்கப்பட்டது. அதற்கமைய தனியார் தரப்புக்குச் சொந்தமான 50 ஏக்கருக்குக் குறைந்த அனைத்து தேயிலைக் காணிகளினதும் அபிவிருத்தி தொடர்பாக குறித்த துணைச் சேவைகளும் இந் நிறுவனத்தினால் இற்றைவரை வழங்கப்பட்டு வந்துள்ளன. ஈ

2011 / 2012 ஆம் ஆண்டுகளில் 10 ஏக்கரில் இருந்து 50 ஏக்கர் வரையான தேயிலை நிலங்கள் தொடர்பாக காணி அபிவிருத்தி சேவைகளை வழங்குவது தொடர்பாக இலங்கை தேயிலை சபையிடமும், தேயிலை பயிரிடல் ஆலோசனைகள் மற்றும் விஸ்தரிப்பு சேவைகளை வழங்குவது தொடர்பாக இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திடமும் ஒப்படைக்கப்பட்டள்ளன. அதற்கமைய சட்டத்தில் நிலவுகின்ற நிதி ஏற்பாடுகளின் படி, 10 ஏக்கருக்கு குறைந்த தேயிலை நிலங்கள் தொடர்பாக மட்டும் அவற்றின் அபிவிருத்தி மற்றும் அது குறித்த துணை சேவைகள் நிறுவத்தினால் வழங்கப்படும்.

**அதிகாரசபையின் தொழிற்பாடுகள்**

1. தேயிலை சிறு பற்றுநிலங்களினதும் தமக்கென்று சொந்தமான உற்பத்தி வழிவகை அற்ற ஏனைய தேயிலை பற்றுநிலங்களினதும் அபிவிருத்திக்கு உத்துழைத்தல் அல்லது அபிவிருத்தி செய்வதைப் பொறுப்பேற்றல்.

2. அத்தகைய தேயிலை நிலங்களின் தேயிலை உற்பத்திற்குக் தேவையான ஏனைய வசதிகளையும் இன்னும் தேயிலைத் தொழிற்சாலைகளையும் சுவீகரித்தல், அல்லது அபிவிருத்தி செய்தல்.

3. அத்தகைய தேயிலைத் நிலங்களில் அல்லது தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் உற்பத்திகளின் சந்தைப்படுத்தப்படுத்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தல் அல்லது விற்பனையை பொறுப்பேற்றல்

4. அத்தகைய தேயிலை நிலங்களையும் தொழிற்சாலைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குதல் அல்லது அத்தகைய வசதிகளையும் சேவைகளையும் பெற்றுக் கொடுத்தல் இன்றேல் அவற்றை இலகுவாக்குவது தொடர்பாகவும், அந் நிலங்களின் உற்பத்தி, பொதியிடல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு நியதிச்சட்டத்திற்கு அமைவான உரிமைகளையும், பணிக்கொடைகளையும் வழங்குவதும் உட்பட அவர்களது நலன்களுக்குத் தேவையான அனைத்துவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

5. தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்திச் சங்கங்களை பதிவு செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அவ்வாறான சங்கங்களின் உறுப்பினர்களுக்கு உதவிகளை வழங்கவும், அவ் விடயங்கள் தொடர்பான சட்டதிட்டங்களை தயாரிப்பதற்கான விதிமுறைகளை வகுத்தல்.

6. தேயிலை சிறு பற்றுநிலங்களின் முதலீடுகளை மேம்படுத்தல்

7. தரவுகளைச் சேகரித்தல், விநியோக நடவடிக்கைகளைப் பொறுப்பேற்றல் மற்றும் தேயிலை சிறு பற்றுநிலங்களின் அபிவிருத்தி திறனை ஆராய்தல்

8. உசிதமான கொள்கைகள் தொடர்பாக அமைச்சுக்கு மதியுரை வழங்குதல் மற்றும் ஏனைய பிற முகவர் நிலையங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இல. 02, 03 மற்றும் 04 ஆகியவற்றின் தொழிற்பாடுகளை தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபையின் சட்டத்திலிருந்து நீக்குவதற்கும் பிற பணிகளை பதிலீடு செய்வதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு மேலதிகமாக, 1978 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 01 ஆந் திகதியில் இருந்து இலங்கை தேயிலைச் சபையினால் அடிக்கடி விதிக்கப்பட்ட பணிகள் மற்றும் ஏனைய உரியதான கீழே குறிப்பிடப்பட்டுள்ள இன்னபிற பணிகளும் உள்ளடங்குமாறு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**1. தனியார் துறையின் முகாமைத்துவத்தின் கீழ் உள்ள காணிகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள உதவியளிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்**

i. தேயிலை மீள் பயிரிடல் ii. புதிதாக நடுதல் iii. இடைநடுகை
iv. தேயிலையுடன் இறப்பர் பயிரிடல் v. தேயிலையுடன் தென்னை நடுகை

2. தேயிலை பசளைகளை பகிர்ந்தளித்தல், பெருந்தோட்டப் பொருட்கள், உபகரணங்கள் போக்குவரத்து வதிகளை வழங்குதல் ஆகிய துணைச் சேவைகளை நடைமுறைப்படுத்தல்.

3. விஸ்தரிப்பு மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்

4. தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் கொழுந்து உற்பத்திகள், தேயிலைத் தொழிற்சதலைகளின் விலைகள் ஆகியவற்றின் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளல்.

5. கொழுந்து சேகரிப்பு சங்கங்களுக்கான மத்திய நிலைமொன்றைத் தாபித்தல்

**1.2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பணிகள்**

இக் குழுவினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயசார் துறைகள் சம்பந்தமான ஆரம்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. நடப்பாண்டின் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தை விசாரணைக்கு உட்படுத்தி அங்கீகரித்தல்

2. உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் வாயிலாக அறியப்பட்ட விடயங்கள் மீளாய்வுக்குட்படுத்தல், பிரேரணைகளை அமுல்படுத்துவதை துரிதப்படுத்தல்.

3. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை மீளாய்வு செய்தலும், அதன் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பற்றாக்குறைகள் மீளவும் ஏற்டாதவாறு தடுப்பதற்குத் தேவையான சரிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

4. கணக்காய்வு விசாரணைகள் தொடர்பான விடைகளை சமர்ப்பித்தல் சம்பந்தமான முன்னேற்றத்தை பரிசீலித்தல்

5. ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம், உள்ளக நிதிக் கூற்றுக்கள் ஆகியனவற்றை மீளாய்வு செய்தல் மற்றும் செயலாற்றுகையின் அடிப்படையிலான இலக்குகளை எய்துவதற்கான மதிப்பீடு.

6. முடிவடைந்த கணக்குகள் மற்றும் ஆண்டறிக்கை என்பனவற்றை குறித்த காலஎல்லையில் சமர்ப்பிப்தை உறுதிப்படுத்தல்

7. மனித வளங்கள், ஏனைய பிற வளங்களின் நிர்வாகம் மற்றும் அவை சார்ந்த அபிவிருத்திப் பணிகளின் மீளாய்வு மற்றும் தீர்மானங்களை மேற்கொள்ளல்.

8. பணியாட்தொகுதியினரின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்த விடயங்களை மீளாய்வு செய்தல், நிறுவகச் செலவுகளை சிக்கனமாக பயன்படுத்துவது குறித்து விளக்கமளித்தல்

9. தற்போதுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் விதிமுறைகளுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா என்பது பற்றி விசாரணை செய்தல் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடைமுறைகளை மேற்கொள்ளல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினதும், பணிப்பாளர் சபையினதும் அங்கீகாரத்துடன் 2012 ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்திற்கேற்றவாறு 09 கணக்காய்வு பரிசீலனைகள் மற்றும் 19 தொழிநுட்ப பரிசீலனைகள் 2012 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## 1.3. நிர்வாகம்சார் பணிகள்

### 1.3.1. நிறுவனக் கட்டமைப்பு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள்

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் என்பவற்றுக்கு ஏற்றவாறு அனைத்து ஊழியர்களும் குறித்தொதுக்கப்பட்ட பதவிகளில் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.

**ஆண்டினுள் வழங்கப்பட்டுள்ள நியமனங்கள்**

அதிகார சபையில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினதும், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினதும் அங்கீகாரத்தின் பிரகாரம் விண்ணப் படிவங்கள் கோரப்பட்டு, அதன் பின்னர் ஆண்டினுள் பின்வரும் பதவிகள் தொடர்பாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| பதவிகள் | தரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் | JM 1-1 | 01 |
| நிர்வாக உத்தியோகத்தர்கள் | JM 1-1 | 05 |
| கணக்கு உத்தியோகத்தர்கள் | JM 1-1 | 04 |

### 1.3.2. நியதிச்சட்ட நோக்கங்களை எய்துவதற்கான முகாமைத்துவ அணுகுமுறை மூலோபாயங்கள்

தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறையின் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திப் பெறுபேறுகளின் ஊடாக இலக்குகளை அடைந்துகொள்ளுமுகமாக தயாரிக்கப்பட்டிருந்த மூலோபாயங்கள்களின் படி 2012 ஆண்டில் நடவடிக்கைகள் மேற்காள்ளப்பட்டன. இம் மூலோபாயங்கள் நியதிச்சட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிறுவகத்தின் முழுமொத்த திட்டமிடலுக்கும் ஏற்றவாறு தயாரிக்கப்பட்டதுடன், ஆண்டின் செயற்பாட்டுத் திட்டமிடலின் மூலம் அதனை நிறைவேற்றும் பொருட்டு 2009 ஆண்டில் திட்டமிடல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2010 ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன் போது, “ தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல்” நிறுவகத்தின் நீண்ட கால பெறுபேறென என இனங்காணப்பட்டது.

அதற்கமைய 2012 ஆண்டுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள மத்தியகால பெறுபேற்றை அடைந்து கொள்ளுமுகமான ஆண்டின் செயற்பாட்டுத்திட்டத்திற்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**அபிவிருத்திப் பெறுபேறுகள்**

நீண்டகால தாக்கங்கள் / பெறுபெறு – தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்

**மத்தியகால பெறுபேறுகள்**

1. 06 ஆண்டுகளுள் ஒரு ஆண்டுக்கு/ஒரு ஹெக்ரயாருக்கு/ தயாரிக்கப்பட்ட தேயிலை / கிலோ

    தாழ்நிலம் 2700 வரை
    மத்திய மலைநாடு 1700 வரை
    ஊவா 1500 வரை அதிகரிப்பது

2. ஐந்து (5) ஆண்டுகளில் தொழிற்சாலை மட்டத்தில் பச்சைக் கொழுந்தின் தரத்தை 75 % வரை அதிகரிப்பது
3. ஆறு (06) ஆண்டுகளுள் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை 50 % வீதத்தால் வலுப்படுத்தல்
4. ஒரு ஆண்டினுள் சிறப்பாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக நிறுவனத்தை வலுவூட்டுதல்
5. ஐந்து (05) ஆண்டுகளுள் தேயிலை நிலங்களை 10 % வீத மேலதிக வருமானமீட்டும் வகையில் ஈடுபடுத்தல்

**1.3.3. கொள்கைத் தீர்மானங்கள்**

(i) ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக முழுமொத்த பயிரிடல் செலவில் இருந்து தேயிலை மீள் பயிரிடல் செலவுகள் தொடர்பாக அதுவரையில் 14 % குறைக்கப்பட்டமையின் காரணமாக ஊக்குவிப்புத் தொகை மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய 2012 ஆண்டின் வரவு செலவுத் திட்டப் பிரேரணை மூலம் மானியத் தொகையாக 2013.01.01. ஆந் திகதியில் இருந்து உயர், மத்திய, தாழ் நிலப் பிரதேசங்கள் தொடர்பாக ஒரு ஹெக்ரயாருக்கு 350,00 ரூபா வீதம் அதிகரிப்பதென உத்தேசிக்கப்பட்டது.

(ii) 01 ஹெக்ரயார் அல்லது அதனை விட குறைந்த முழுமையான உரித்துடைய தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர் ஒருவருக்கு மண் பதப்படுத்தல் தவிர, தேயிலை மீள் பயிரிடல் காணிகளுக்காக வழங்கப்படும் தொகை ஒரு ஹெக்ரயாருக்கு 260,000 ரூபா வரை அதிகரிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

(iii) தேயிலை மீள் பயிரிடல் தொடர்பாக மண் பதப்படுத்தல் உடன் காணி உரிமையாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படும் உச்ச நிலப்பிரப்பினை 02 ஹெக்ரயார் வரை அதிகரிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

(iv) மண் பதப்படுத்தல் உடன் புதிதாக தேயிலை நடுகை சம்பந்தமாக வழங்கப்படும் மானியத் தொகையை ஒரு ஹெக்ரயாருக்கு 250,000 ரூபா வரை அதிகரிக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய 2012 ஆண்டின் வரவு செலவுத்திட்ட பிரேரணையின் மூலம் ஒரு ஹெக்ரயாருக்கு 250,000 ரூபா வரை அதிகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(v) மண் பதப்படுத்தல் இன்றி, புதிதாக தேயிலை பயிரிடல் தொடர்பாக ஒரு ஹெக்ரயாருக்கு 195,000 ரூபா அதிகரிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

# 2ை இலங்கையின் தேயிலை சிறு பற்றுநிலங்கள்

**2.1. தேயிலை சிறு பற்றுநிலங்கள் :**

தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம், “10 ஏக்கருக்குக் குறைந்த தேயிலைத் தோட்டங்கள் தேயிலைச் சிறு பற்றுநிலங்கள்” என கருதப்படுகின்றன. எனினும், இலங்கை தேயிலைச் சபையின் கீழ் உள்ள 10 - 50 ஏக்கர் வரையான தேயிலைத் தோட்டங்களின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் அதிகாரம் 1978 சனவரி மாதம் 01 ஆந் திகதியில் இருந்து தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையிடம் கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரினால் ஒப்படைக்கப்பட்டது. அதற்கமைய தனியார் உரித்துடைமையின் கீழ் உள்ள 50 ஏக்கருக்குக் குறைந்த அனைத்து தேயிலை நிலங்களினதும் அபிவிருத்தி தொடர்பாக உரிய துணைச் சேவைகள் நிறுவனத்தினால் இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்துள்ளன.

2011 / 2012 ஆம் ஆண்டுகளில் 10 ஏக்கரில் இருந்து 50 ஏக்கர் வரையான தேயிலை நிலங்கள் தொடர்பாக காணி அபிவிருத்தி சேவைகளை வழங்குவது தொடர்பாக இலங்கை தேயிலை சபையிடமும், விஸ்தரிப்பு சேவைகளை வழங்குவது தொடர்பாக இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திடமும் ஒப்படைக்கப்பட்டள்ளன. அதற்கமைய சட்டத்தில் நிலவுகின்ற நிதி ஏற்பாடுகளின் படி, 10 ஏக்கருக்கு குறைந்த தேயிலை நிலங்கள் தொடர்பாக மட்டும் அவற்றின் அபிவிருத்தி மற்றும் அது குறித்த துணை சேவைகள் நிறுவத்தினால் வழங்கப்படுகின்றது.

**2.2. தேயிலை சிறு பற்றுநிலங்களின் நிலப்பரப்புக்கள் :**

2005 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரத் தரவுகளுக்கு இணங்க காணப்படும் தேயிலை சிறு பற்றுநிலங்களின் பரப்புக்கள் 132,329 (20 பேர்ச்சஸ்களுக்குக் குறைந்த காணிகள் அடங்கலாக) ஹெக்ரயார்கள் ஆகும். இலங்கையில் உள்ள மொத்தத் தேயிலை நிலங்களின் நிலப்பரப்புக்கள் ஏறக்குறைய *221,968 ஹெக்ரயார்கள் ஆகும். ஆதலால் இலங்கையில் உள்ள மொத்தத் தேயிலை நிலங்களில் 59 % வீதமான தேயிலை நிலங்கள் தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறைக்குச் சொந்தமானவையாகும். 1994 / 1995 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேயிலை சிறு பற்றுநிலங்கள் தொடர்பான புள்ளிவிபரங்களுடன் ஒப்பிடும் போது இலங்கையிலுள்ள தேயிலை சிறு பற்றுநிலங்களின் நிலப்பரப்புக்கள் ஒரு தசாப்த காலத்திற்குள் 82,919 ஹெக்ரயார்களில் இருந்து 116,492 ஹெக்ரயார்கள் ( 20 பர்ச்சஸ்களுக்கு மேற்பட்ட நிலங்கள் மாத்திரம்) வரை அதாவது ஏறக்குறைய 40 % வீதத்தினால் அதிகரித்திருந்தது.

மொத்தத் தேயிலை சிறு பற்றுநிலங்களின் பரப்புக்கள் 132,329 (20 பேர்ச்சஸ்களுக்குக் குறைந்த காணிகள் அடங்கலாக) ஹெக்ரயார்கள் ஆகும். அதில் 7,310 ஹெக்ரயார்கள் கைவிடப்பட்டுள்ள தேயிலை நிலங்கள் ஆகும். எஞ்சியுள்ள தேயிலை நிலப்பரப்புக்களில் 118,275 ஹெக்ரயார் நிலங்கள் வளர்ந்த மற்றும் இளம் தேயிலைச் செடிகளைக் கொண்ட நிலங்கள் ஆகும். 20 பர்ச்சஸ்களுக்குக் குறைவான தேயிலை நிலங்கள் தவிர, வளர்ந்த மற்றும் இளம் தேயிலைச் செடிகளைக் கொண்ட மொத்த தேயிலை நிலப்பரப்புக்கள் 116,492 ஆகும். தேயிலை பரிசோதகர், விஸ்தரிப்பு உத்தியோகத்தர் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்ட தகவல் மீளாய்வு – 2011 ஆம் ஆண்டிற்கு இணங்க, 2011 ஆம் ஆண்டில் 340 ஹெக்ரயார் காணிகள் இந்தத் தேயிலை நிலப்பரப்புகளில் புதிதாகச் சேர்ந்திருந்தன. 2012 ஆண்டிறுதியில் புதிதாக சேர்ந்த 291 ஹெக்ரயார் நிலப்பரப்புக்கள் உள்ளடங்கலாக மதிப்பிடப்பட்ட மொத்தத் தேயிலை நிலங்களின் நிலப்பரப்புக்கள் 120,955 ஹெக்ரயார்கள் ஆகும்.

**உருப்படம் 01**
**மொத்தத் தேயிலை சிறு பற்றுநிலங்களின் பங்களிப்பு**




மூலம்

இலங்கைத்தேயிலை நிலங்கள் பற்றிய புள்ளவிபர அறிக்கை 1994/1995 - இலங்கைத் தேயிலை சபை
தேயிலை சிறு பற்றுநிலங்கள் பற்றிய புள்ளவிபர அறிக்கை 2005 – குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரவியல் திணைக்களம்

## 2.3. தேயிலை சிறு பற்றுநில உரிமையாளாகள்

2005 ஆம் ஆண்டளவில் தேயிலைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் எண்ணிக்கை (20 பேர்ச்சர்ஸ்களுக்குக் குறைந்த தேயிலை நிலப் பயிர்ச் செய்கையார்கள் அடங்கலாக) 370,842 ஆகும். இதில் 82 % வீத விவசாயிகள் தனி நில உரிமையாளர்கள் ஆவர். தேயிலை நிலப் பரப்பில் இவர்கள் ஏறறக்குறைய 76 % நிலங்களைக் கொண்டிருக்கின்றனர். தேயிலை பரிசோதகர் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்ட தகவல்களின் மதிப்பீடுகளின் பிரகாரம், 2012 ஆம் ஆண்டில் 785 விவசாயிகள் புதிதாக தேயிலைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## 2.4. தேயிலை சிறு பற்றுநில உரிமையாளாகள்

1994 ஆம் ஆண்டில் இருந்து 2005 ஆண்டு வரையான காலப்பகுதியினுள் தேயிலை சிறு பற்றுநில உரிமையார்களின் மொத்த எண்ணிக்கை 206,652 முதல் 350,982 (20 பர்ச்சஸ்களுக்கு மேற்பட்ட) வரை அதாவது 70 % வீதத்தினால் அதிகரித்திருந்தது. இலங்கையிலுள்ள தேயிலை சிறு பற்றுநில துண்டங்களின் எண்ணிக்கையில் 11.6 % வீதமான தேயிலை நிலங்கள், நிலப் பரப்பில் 20 பர்ச்சஸ்களுக்குக் குறைவான துண்டங்கள் ஆகும். மொத்த தேயிலை நிலப் பரப்பில் இது 1.5 % வீதத்தை உள்ளடக்குகின்றது. தேயிலை சிறு பற்றுநில தண்டங்களின் எண்ணிக்கையில் 75 % வீதமானவை ஒரு ஏக்கருக்குக் குறைந்த துண்டங்கள் ஆகும். அதே நேரம் 95 % வீதமானவை இரண்டு ஏக்கருக்குக் குறைந்த துண்ட வகுதியைச் சார்ந்தவையாகும். 10 ஏக்கருக்கு அதிகமான தேயிலை சிறு பற்றுநிலங்களின் விகிதம் மிகக் குறைவாக அதாவது ஏறக்குறைய 0.78 % வீதம் ஆகும்.

2005 ஆம் ஆண்டின் புள்ளிவிபரங்களின் படி மொத்த தேயிலை சிறு பற்றுநில துண்டங்களின் எண்ணிக்கை மற்றும் நிலப்பரப்பு விஸ்தரிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை இலக்கம் 1**

**மாவட்ட ரீதியில் இலங்கையில் காணப்படும் தேயிலை சிறு பற்றுநில துண்டங்களின் எண்ணிக்கை - 2005**

| மாவட்டம் | தேயிலை சிறு பற்றுல உரிமையாளார்களின் எண்ணிக்கை | தேயிலை சிறு பற்றுநிலங்களின் எண்ணிக்கை | ஹெக்ர. எண்ணிக்கை | நிலங்களின் எண்ணிக்கை/ ஹெக்ரயார் அலகுகளின் பரப்பின் பிரகாரம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | <1/2 குறைந்தகுறைந்த | 1/2 - < 1 | 1 - < 2 | 2 - < 3 | 3 - < 5 | 5 - < 10 | >10 - |
| கொழும்பு | 478 | 491 | 246 | 423 | 35 | 22 | 4 | 4 | 2 | 1 |
| கம்பஹா | 9 | 9 | 2 | 9 | - | - | - | - | - | - |
| களுத்துறை | 35,908 | 38,263 | 7,823 | 35,793 | 1,927 | 396 | 74 | 38 | 26 | 9 |
| கண்டி | 29,224 | 30,747 | 16,058 | 25,457 | 3,345 | 1,094 | 353 | 206 | 140 | 152 |
| மாத்தளை | 1,387 | 1,408 | 1,672 | 1,011 | 166 | 81 | 40 | 38 | 41 | 31 |
| நுவரெலியா | 16,875 | 17,547 | 7,205 | 15,270 | 1,663 | 302 | 100 | 77 | 55 | 80 |
| காலி | 81,491 | 90,524 | 27,427 | 79,432 | 8,296 | 1,840 | 467 | 276 | 166 | 47 |
| மாத்தறை | 63,273 | 67,613 | 25,417 | 58,470 | 6,835 | 1,296 | 430 | 290 | 176 | 116 |
| ஹம்பாந். | 2,386 | 2,533 | 546 | 2,373 | 141 | 14 | 4 | 1 | - | - |
| குருனாகலை | 145 | 151 | 180 | 111 | 23 | 8 | 3 | 2 | - | 4 |
| பதுளை | 28,101 | 29,679 | 9,020 | 26,989 | 1,747 | 574 | 182 | 85 | 56 | 46 |
| மொனரகலை | 634 | 637 | 199 | 551 | 72 | 11 | 1 | 2 | - | - |
| இரத்தினபுரி | 92,038 | 97,984 | 30,441 | 87,070 | 7,910 | 1,880 | 530 | 345 | 141 | 108 |
| கேகாலைரத்தினபுரி காலை | 18,893 | 19,637 | 6,093 | 17,333 | 1,680 | 400 | 98 | 65 | 31 | 30 |
| **மொத்தம்** | **370,842** | **397,223** | **132,329** | **350,292** | **33,840** | **7,918** | **2,286** | **1,429** | **834** | **624** |
| **விகிதம்** | | | | **88.19** | **8.52** | **1.99** | **0.57** | **0.36** | **0.21** | **0.16** |

**மூலம் - இலங்கையில் உள்ள தேயிலை நிலங்கள் பற்றிய புள்ளிவிபரங்கள் – 2005**

பச்சைத் தேயிலையின் விலை அதிகரிப்பு, தேயிலைப் பயிர்ச் செய்கைக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு, பாரியளவான தேயிலை சிறு பற்றுநிலங்கள் துண்டங்களாக்கல் மற்றும் தேயிலையுடன் மாற்றுப் பயிர்களின்றிய தேயிலை நிலங்களில் பயிர்செய்கையை மேற்கொள்ளுதல் என்பன போன்ற விடயங்கள் குறிப்பாக தேயிலை சிறு பற்று நிலங்கள் துறையின் காணிகள் அதிகரிப்பில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

## 2.5. நில வகைப்படுத்தல்

* தேயிலை சிறு பற்றுநிலங்களின் மொத்த நிலப்பரப்பில் 113,190 ஏக்கர் ( 34.6% ) நிலங்கள் ஒரு ஏக்கருக்குக் குறைந்த நிலங்கள் ஆகும். அதே நேரம் 198,707 ( 60.8% ) நிலங்கள் இரண்டு ஏக்கருக்குக் குறைந்த நிலங்கள் ஆகும். 10 ஏக்கருக்கு அதிகமானவை 59,731 ( 18.3 % ) ஆகும்.

**அட்டவணை இலக்கம் 2**

**இலங்கையிலுள்ள தேயிலை சிறு பற்றுநிலங்களின் நிலப்பரப்பினதும் துண்டங்களினதும் எண்ணிக்கைக்கு அமைய வகைப்படுத்தல் - 2005**

| ஏக்கர் | நிலப் பரப்பு ஏக்கரில் | % | காணித் துண்டங்களின் எண்ணிக்கை | விகிதம் % |
|---|---|---|---|---|
| 1- இற்குக் குறைந்த | 113,190 | 34.6 | 297,342 | 75 |
| 1 - 2 இற்குக் குறைந்த | 85,517 | 26.2 | 74,314 | 18.7 |
| 2 - 3 இற்குக் குறைந்த | 31,882 | 9.8 | 15,101 | 3.8 |
| 3 - 5 இற்குக் குறைந்த | 18,413 | 5.6 | 5,299 | 1.3 |
| 5-10 இற்குக் குறைந்த | 18,251 | 5.5 | 2,936 | 0.7 |
| 10 மற்றும் அதிகமான | 59,731 | 18.3 | 2,231 | 0.5 |
| | **326,984** | | **397,223** | |

**மூலம் - இலங்கையில் உள்ள தேயிலை நிலங்கள் பற்றிய புள்ளிவிபர அறிக்கை**

## 2.6. தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறையின் உற்பத்தி :

1991 ஆண்டில் தேசிய தேயிலை உற்பத்தியில் 50 % வீத பங்களிப்பை வகித்த தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறை, 2012 ஆண்டளவில் அதன் பங்களிப்பினை 71.4 % வீதம் வரை அதிகரித்துக் கொண்டது (உப அட்டவணை 04)

2012 ஆண்டில் தேசிய தேயிலை உற்பத்தி 326.27 கிலோ மில்லியன் ஆகும். இது 2011 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 0.38 % வீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

எனினும், தேயிலை சிறு பற்றறுநில துறையின் உற்பத்தி 229.01 மில்லியன் கிலோவில் இருந்து 233.1 வரை அதாவது 1.78 % வீதத்தால் 2012 ஆண்டில் அதிகரித்துள்ளது. 2000 ஆண்டில் 60 % வீதமாக காணப்பட்ட தேயிலை சிறு பற்றுநில தேசிய உற்பத்திப் பங்களிப்பு விகிதம் 2011 ஆண்டில் 69.92 வீதமாக அதிகரித்திருந்ததுடன் 2012 ஆண்டில் அது 71.4 % வீதம் வரை அதிகரித்துக் காணப்பட்டது.

### அட்டவணை இலக்கம் 3

### இலங்கையின் மொத்தத் தேயிலை உற்பத்தி 2011 / 2012
### முகாமைத்துவ நிறுவனங்களுக்கு அமைய பங்களிப்பு

| முகாமைத்துவ நிறுவனங்கள் | தேயிலை உற்பத்தி மெ. தா. 2011 | % | 2012 | % |
|---|---|---|---|---|
| 01.தனியார் துறை (தேயிலை சிறுபற்றுநிலங்கள் துறை) | 229,016 | 69.92 | 233,106 | 71.40 |
| 02.பிராந்திய பெருந்தோட்டக் கம்பனி | 94,402 | 28.82 | 89,2160 | 27.30 |
| 03.மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை அரச பெருந்ததோட்டக் கூட்டுத்தாபனம் | 3,615 | 1.10 | 3,529 | 1.08 |
| 04.ஏனையவை | 498 | 0.16 | 427 | 0.13 |
| **மொத்தம்** | **327,531** | | **326,278** | |

(ஏனையவை = தேயிலை சக்தி, ரீ ஸ்மோல் ஹோல்டர் பெக்ரரி லிமிட்டட், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவகம், கூட்டுறவுச் சங்கங்கள், எல்கடுவை ப்ளாண்டேசன், களுபோவிட்டியன தேயிலை தொழிற்சாலைக் கம்பனி)

மூலம் - இலங்கை தேயிலை சபை

(நிறுவன வகைப்படுத்தலின் போது கொள்வனவு செய்யப்பட்ட கொழுந்து அனைத்தும் தேயிலை சிறு பற்றுநில உற்பத்தியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் போது தனியார் துறை என்பது தேயிலை சிறு பற்றுநிலங்கள் பிரிவு எனப் பொருள்படும்.)

### உருப்படம் இலக்கம் 2
### முகாவைத்துவ நிறுவனங்களின் அடிப்படையில் உற்பத்திப் பங்களிப்பு விகிதம் - 2012



உருப்படம் இலக்கம் 3

**தேயிலை சிறுபற்றுநில பிரிவின் மாதாந்த தேயிலை உற்பத்தி – கிலோ மில்லியன்**
**: 2011 / 2012 -**




மூலம் : இலங்கைத் தேயிலை சபை

உருப்படம் இலக்கம் 4

**தேயிலை சிறுபற்றுநில பிரிவின் வருடாந்த தேயிலை உற்பத்தி வளர்ச்சி வீதம்**
**2011 / 2012 வரை (கிலோ மில்லியன்)**




**மூலம் : இலங்கைத் தேயிலை சபை**

## 2.7. தேயிலை சிறு பற்றுநிலங்கள் உற்பத்தித் தொகுப்பு

2012 ஆம் அண்டிற்கான தேசிய உற்பத்தியில் தாழ்நாட்டுத் தேயிலை உற்பத்தியின் 95 % வீதமும், மத்திய மலைநாட்டுத் மொத்தத் தேயிலை உற்பத்ததியின் 59 % வீதமும், மலைநாட்டுத் மொத்தத் தேயிலை உற்பத்தியின் 15 % வீதமும், தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறை உற்பத்தியில் உள்ளடங்குகின்னறன. (அட்டவணை இலக்கம் 04) மேலும் 2012 ஆம் ஆண்டிலும் தனியார் துறையின் மொத்த தேயிலை உற்பத்தியில் 82 % வீதமானவை தாழ்நநாட்டுத் தேயிலை உற்பத்திகளில் உற்றடங்குகின்றன.

**அட்டவணை இல. 04**

**தேயிலை சிறு பற்றுநில துறையின் பௌதீக மற்றும் உற்பத்திப் பங்களிப்பு ( அமைவிட அடிப்படையில்)**

**2011/ 2012**

| | | | அமைவிடம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு | மலைநாடு | மத்திய மலைநாடு | தாழ்நிலம் | மொத்தம் |
| தேயிலை சிறுபற்று நிலங்களின் பரப்பு | (ஹெக்ரயார்) | | 5913 | 21403 | 89176 | 116492 |
| பங்களிப்பு வீதம் | % | | 5 | 18 | 77 | |
| தேசிய உற்பத்தி | மெ.ரொ. | 2011 | 78219 | 52591 | 196721 | 327531 |
| | % | | 24 | 16 | 60 | |
| | மெ.ரொ. | 2012 | 72739 | 52293 | 201246 | 326278 |
| | % | | | | | |
| தேயிலை சிறு உற்பத்தி | மெ.ரொ. | 2011 | 12909 | 29427 | 186680 | 229016 |
| | % | | 5.6 | 12.8 | 81.6 | |
| | மெ.ரொ. | 2012 | 11066 | 30969 | 191071 | 233106 |
| | % | | 4.7 | 13.3 | 82 | |
| தேசிய உற்பத்திக்கான பங்களிப்பு | % | 2011 | 3.94 | 8.98 | 57 | 69.92 |
| | | 2012 | 3.39 | 9.49 | 28.56 | 71.44 |
| உற்பத்தித்திறன் | ஆண்டுக்கு / ஹெக்ரயாருக்கு/ தயாரிக்கப்பட்ட தேயிலை | 2011 | 2183 | 1375 | 2093 | 1966 |
| | | 2012 | 1872 | 1447 | 2142 | 2001 |

**மூலம்**

**i.** தேயிலை சிறு பற்றுநில புள்ளிவிபர அறிக்கை 2005 – குடிசன, புள்ளிவிபரவியல் திணைக்களம்

**ii.** மாதாந்த புள்ளிவிபர சுருக்கக்கூறு - இலங்கை தேயிலை சபை 2012

## 2.8. தேயிலை சிறு பற்றுநில துறையின் உற்பத்தித்திறன்

2011 மற்றும் 2012 ஆகிய இரு ஆண்டுகளிலும் தேசிய தேயிலை உற்பத்தி அதிகரிப்பு தொடர்பாக தேயிலை சிறுபற்றுநில துறையின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் என்பவையே பிரதானமாக செல்வாக்குச் செலுத்தின.

இலங்கை தேயிலைச் சபையின் தேயிலை உற்பத்தி தொடர்பான தரவுகளின்படி 2011 ஆண்டில் தேயிலை சிறுபற்றுநில துறையின் சாதாரண உற்பத்தித்திறன் ஆண்டொன்றுக்கு ஒரு ஹெக்ரயாருக்கு, தயாரித்த தேயிலை 1,996 கிலோ ஆக காணப்பட்டது. 2012 ஆண்டில் தேயிலை சிறு பற்றுநில துறையின் சாதாரண உற்பத்தித்திறன் ஒரு ஹெக்ரயாருக்கு தயாரித்த தேயிலை 2011 கிலோ கிராம் வரை அதிகரித்துக் காணப்பட்டது.

**அட்டவணை இலக்கம் 05**

**தேயிலை சிறு பற்றுநில துறையின் உற்பத்தித்திறன் 2012 ( தயாரித்த தேயிலை / கிலோ )
நிர்வாக மாவட்டங்களின் அடிப்படையில்**

| நிர்வாக மாவட்டம் | தேயிலை சிறுபற்று நிலப்பரப்பு (ஹெக்.) | மேட்டு நிலம் | நடுத்தர நிலம் | தாழ்நிலம் | மொத்தம் | உற்பத்தித் திறன் (ஹெக். 01 இற்கு தயாரித்த தேயிலை கிலோ) * |
|---|---|---|---|---|---|---|
| பதுளை | 7,863 | 3,731,237 | 6,072,439 | - | 9,803,676 | 1,247 |
| காலி | 25,325 | - | - | 47,710,384 | 47,710,384 | 1,884 |
| ஹம்பாந்தோ | 492 | - | - | 284,332 | 284,332 | 578 |
| களுத்துறை | 7,588 | - | - | 17,408,260 | 17,408,260 | 2,294 |
| கண்டி | 12,486 | 157,202 | 15,403,904 | 10,015,336 | 25,576,442 | *2,048 |
| கேகாலை | 5,753 | - | 278,734 | 9,588,819 | 9,867,553 | 1,721 |
| மாத்தளை | 1,190 | - | 923,588 | 522,932 | 1,446,520 | 1,215 |
| மாத்தறை | 22,971 | - | 100,676 | 41,981,546 | 42,082,222 | 1,832 |
| நுவரெலியா | 5,971 | 7,165,393 | 7,106,932 | 828,544 | 15,100,869 | *2,529 |
| இரத்தினபுரி | 28,232 | 12,399 | 1,083,099 | 62,730,365 | 63,825,863 | 2,261 |
| மொத்தம் | - | **11,066,231** | **30,696,372** | **191,070,517** | **233,106,120** | **-** |
| **2005 புள்ளி விபரத்தின் படி நிலப்பரப்பு | - | **5,913** | **21,403** | **89,176** | **116,492** | **-** |
| மதிப்பிடப்பட்ட හෙක්ටයාරයකට | 2012 | 1,871 | 1,447 | 2,143 | 2,001 | - |
| | 2011 | 2,183 | 1,375 | 2,093 | 1,966 | - |

**மூலம் : இலங்கைத் தேயிலை சபை**

* நிர்வாக மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டல்லாது தொழிற்சாலைகளுக்கான கொழுந்து கொள்வனவின் அடிப்டையிலான தரவுகள் பொறுத்தமானதாக அமையவில்லை.

** வளர்ந்த செடிகளைக் கொண்ட தேயிலை நிலப்பரப்பு

## 2.9 தேயிலை சிறுபற்றுநிலத் துறையின் முதலீட்டாளர்கள்

2012 ஆம் ஆண்டில் அபிவிருத்தி மற்றும் நிறுவன மூலதனக் கிரயமாக 221.37 மில்லியன் ரூபாவும், மீண்டெழும் செலவினமாக 224.18 மில்லியன் ரூபாவும் அடங்கலாக 445.55 மில்லியன் ரூபா திரட்டு நிதியில் இருந்து ஒதுக்கப்பட்டு இருந்தது.

2012 ஆம் ஆண்டில் பெற்ற மூலதனத் தொகை 199 மில்லியன் ரூபா மற்றும் மீண்டெழும் செலவினமான 219.83 மில்லியன் ரூபா அடங்கலாக மொத்த பெறுவனவுகள் 418.83 மில்லியன் ரூபா ஆக இருந்தது.

மேற்படி நிதி ஏற்பாடுகளில் தேயிலை சிறு பற்றுநில துறை சம்பந்தமான மொத்த மூலதன கிரயம் 225 மில்லியன் ரூபா நிறுவகத்தின் வருடாந்த செயலாற்றுகை திட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக போதாமையினால், மேலதிக ஏற்பாடுகளாக 150 மில்லியன் ரூபா நிறுவனத்திற்கு பெற்றுக்கொடுக்கும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் முழுமொத்த அபிவிருத்தி மற்றும் நிறுவனம்சார் மூலதன ஏற்பாடுகளில் 371.37 மில்லியன் ரூபா தொடர்பாக மூலதன அபிவிருத்திப் பணிகள் இவ்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது நிதி ஏற்பாடுகளில் இருந்து அதிகமான தொகை அதாவது 86 % வீதம் தேயிலை மீள் பயிரிடல் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவே செலவிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் குறித்த ஆண்டுக்கான மூலதனச் செலவினம் தொடர்பாக 199 மில்லியன் ரூபா திரட்டிய நிதியில் இருந்து கிடைக்கப் பெற்றது. எதிர்பார்க்கப்பட்ட மேலதிக நிதியேற்பாடுகளான 150 மில்லியன் ரூபா கிடைக்கப் பெறவில்லை. எனினும், முழு அபிவிருத்தி மூலதனச் செலவினம் 276.32 மில்லியன் ரூபா ஆக இருந்தது. 88.98 மில்லியன் ரூபா மானியம் தொகையை திரட்டிய செலவாக தொடர் ஆண்டுக்கு கொண்டு செல்வதற்கான நிலை நிறுவனத்திற்கு ஏற்பட்டது.

மேற்படி பின்னணியின் கீழ் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டு பெறுகைகளையும் ஆண்டுக்கான செலவுகளையும் மதிப்பிடப்பட்ட அபிவிருத்தி இலக்குகள் மற்றும் பணிகளுக்காக நேரடியாக நிறுவனத்தின் செயற்பாட்டு மீளாய்வு தொடர்பாக ஈடுபடுத்தவது காலோசிதமானதல்ல.

தேயிலை சிறு பற்றுநிலத் துறைக்கான முதலீட்டுப் பணிகளை அமுல்படுத்தும் பொருட்டு, நிறுவக உட்கட்டமைப்பு வசதிகளை அதற்கு நிகராக மேற்கொள்ள வேண்டியிருப்பினும், ஒதுக்கீடுகள் வரையறுக்கப்பட்டுள்ளமையினால் அப் பணிகளுக்கு நிறுவனத்தினால் முன்னுரிமை அளிக்கப்படவில்லை.

**அட்டவணை இலக்கம் 06**

**தனியார் துறையின் தேயிலை உற்பத்தி மற்றும் நிதியேற்பாடு**

**1998 – 2012**

| ஆண்டு | மொத்தத் தேயிலை உற்பத்தி (கி.கி.மி) | முழுமொத்த உற்பத்தி பங்களிப்பு % | | நிதியம் (ரூ.மி.) | தனியார் துறை (தேயிலை சிறு பற்றுநில துறை) க்கான நிதியேற்பாடுகள் (ரூ.மி.) | நிதி ஏற்பாடுகளின் விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| | | தனியார் துறை | ஏனைய துறை | | | |
| 1998 | 280.05 | 59.2 | 46.1 | 680.3 | 188.5 | 27.7 |
| 1999 | 283.76 | 57.8 | 42.2 | 651.1 | 247.9 | 33.0 |
| 2000 | 305.84 | 60.0 | 40.0 | 701.2 | 259.4 | 37.0 |
| 2001 | 295.09 | 62.1 | 37.9 | 741.0 | 274.5 | 37.0 |
| 2002 | 310.01 | 61.1 | 38.9 | 767.5 | 230.2 | 30.0 |
| 2003 | 303.23 | 61.9 | 38.1 | 739.6 | 332.0 | 37.0 |
| 2004 | 308.08 | 65.9 | 34.1 | 753.8 | 371.6 | 43.7/39.5 |
| 2005 | 317.19 | 64.8 | 35.1 | 771.1 | 290.68 | 39.5 |
| 2006 | 310.82 | 68.3 | 26.1 | 1088.4 | 461.56<br>**426.00 | 39.51/43.28 |
| 2007 | 304.61 | 67.5 | 26.2 | - | (பெற்ற உள்ளபடியான தொகை ரூ. 418.00 ஆகும்.) | - |
| 2008 | 318.46 | 67.4 | 25.9 | 1294.64 | 405.30 | - |
| 2009 | 291.13 | 69.3 | 24.8 | 1360.40 | 367.80 | - |
| 2010 | 331.42 | 69.4 | 23.8 | 1193.98 | 394.93 | - |
| 2011 | 327.53 | 69.9 | 30.1 | | 391.59 | |
| 2012 | 326.27 | 71.4 | 28.6 | | 418.83 | |

** திருத்தப்பட்ட

**மூலம்: இலங்கை தேயிலை சபை**

** 2007 ஆண்டில் இருந்து நிதியேற்பாடுகள் திறைசேரி நிதியிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.

**செயற்பாட்டு மீளாய்வு**

2011 ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2012 ஆண்டின் செயற்பாட்டு மீளாய்வின் படி செயற்பாட்டுக் கிரயம் 0.19 ஆல் குறைந்து காணப்படுகின்றது. எனினும், மொத்த பெறுகைகள் குறைந்தமை காரணமாக அபிவிருத்திச் கிரயம் மற்றும் செயற்பாட்டுக் கிரயம் ஆகியவற்றின் பெறுமானம் யதார்த்த நிலையை காண்பிக்கவில்லை.

**அட்டவணை இலக்கம் 7**

**செயற்பாட்டு மீளாய்வு (1995 ஆண்டில் இருந்து 2012 வரை)**

| ஆண்டு | அபிவிருத்தி கிரயம் ரூ. '000 | செயற்பாட்டுக் கிரயம் ரூ. '000 | அபிவிருத்தி ரூபா தொடர்பாக செயற்பாட்டுக் கிரயம் |
|---|---|---|---|
| 1995 | 79821 | 59150 | 0.74 |
| 1996 | 52665 | 58095 | 1.10 |
| 1997 | 63379 | 70547 | 1.11 |
| 1998 | 101191 | 127080 | 1.26 |
| 1999 | 153503 | 116822 | 0.76 |
| 2000 | 115575 | 128460 | 1.11 |
| 2001 | 112839 | 142654 | 1.26 |
| 2002 ** | 166982 | 188126 | 1.13 |
| 2003 | 170134 | 155216 | 0.91 |
| 2004 | 215430 | 156809 | 0.73 |
| 2005 | 192263 | *158695 | 0.83 |
| ***2006 | 198118 | *186396 | 0.94 |
| 2007 | 183782 | 178985 | 0.97 |
| 2008 | 208255 | 188725 | 0.91 |
| 2009 | 185660 | 202146 | 1.08 |
| 2010 | 189194 | 205385 | 1.08 |
| 2011 | 208407 | 218527 | 1.04 |
| 2012 | 276324 | 233738 | 0.85 |

** 2002 ஆண்டு வரையான செயற்திட்ட கிரயம் உள்ளடங்கலாக செயற்பாட்டுக் கிரயம் கணக்கிடப்பட்டுள்ளது.

+ செயற்பாட்டுக் கிரயம் திரட்டிய அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.

# 3. நியதிச்சட்ட நோக்கங்களும் பெறுபேறுகளை அடிப்படையாக கொண்ட பணிகளும்

நிறுவனத்தின் நியதிச் சட்ட நோக்கங்களுடன் இணைந்த அபிவிருத்திப் பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

01. தேயிலை சிறு பற்றுநிலங்களினதும், தாமாக உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ள ஏனைய தேயிலை சிறு பற்றுநிலங்களின் அபிவிருத்திக்கு துணைபுரிதல் அல்லது அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு பொறுப்பெற்றல்.

மேற்படி நியதிச் சட்ட நோக்கங்களை எய்துவதற்கு நிறுவனத்தினால் தேயிலை நிலங்களின் உரிமையாளர்கள் தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

01 தேயிலை மீள் பயிரிடல் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்
02 தேயிலை புதிதாக பயிரிடல் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்
03 பயிர் புனர்ஜீவன ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்
04 இறப்பர் உடன் தேயிலை பயிரிடல்
05 தென்னை உடன் தேயிலை பயிரிடல்

02. அத் தேயிலை நிலங்களின் உற்பத்திகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு தேவையான தேயிலை தொழிற்சாலைகள் தொடர்பாக பிற வசதிகளை கையேற்றல்

மேற்படி நியதிச் சட்ட குறிக்கோள்களின் கீழ் அதிகாரசபையினால் 1997 ஆம் ஆண்டில், ''தேயிலை சக்தி நிதியம்'' தாபிக்கப்பட்டுள்ளதுடன், 2000 ஆண்டில் இருந்து இது பிறிதொரு நிறுவனமாக மேற்படி நோக்கங்களை எய்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

03. மேற்படி தேயிலை நிலங்களில் அல்லது அத் தொழிற்காலைகளில் மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திகளின் விற்பனையை மேம்படுத்தல் அல்லது விற்பனையை பொறுப்பெற்றல்

மேற்படி நியதிச் சட்ட நோக்கங்கள் தொடர்பாக

தேயிலை சிறுபற்றுநில உரிமையாளர்களினால் கொழுந்து வழங்கப்படுகின்ற தொழிற்சாலைகளில் பச்சைக் கொழுந்தின் தரத்தை மேம்படுத்தல்.

தேயிலை சிறுபற்றுநில கொழுந்து உற்பத்தி செய்யப்படுகின்ற தேயிலை தொழிற்சாலைகளின் விலை கண்காணிப்புப் பணிகளை நடைமுறைப்படுத்தல்.

தேயிலை சிறுபற்றுநிலங்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற கொழுந்து விற்பனை தொடர்பாக தேயிலை சிறுபற்றுநில அபிவிருத்தி சங்கங்களை செயற்படுத்தல்

04. அந் நிலங்கள் மற்றும் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் அபிவிருத்தி தொடர்பாக தேவைப்படும் வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குதல் அல்லது விநியோகித்தல் அல்லாதவிடத்து வசதிகள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்வதை இலகுபடுத்தல் ஆகியன தொடர்பாக தேயிலைக் காணிகளின் உற்பத்திறனை மேம்படுத்தவதற்கு அல்லது பொதியிடல் வேலையில் ஈடுபடட்டுள்ளவர்களின் நலன்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

இதன் கீழ்,

01. தேயிலை பசளை பகிர்ந்தளிப்பு, பெருந்தோட்டப் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் போக்குவரத்து சேவை ஆகிய வசதிகளை வழங்குதல் போன்ற துணைச் சேவைகளை நடைமுறைப்படுத்தல்

02. விஸ்தரிப்பு மற்றும் ஆலோசனை சேவைகளை நடைமுறைப்படுத்தல்

03. கொழுந்து சேகரிப்புச் சங்கங்களின் மத்திய நிலையங்களை தாபித்தல்

04. தேயிலை காணிகளின் உற்பத்தித் திறனை சிறப்பாக மேற்கொள்ளும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் நலன்களுக்காக நடவடிக்கை எடுத்தல் மற்றும் துணைச் சேவைகளை விஸ்தரித்தல் ஆகியனவற்றைக் நோக்கங்களாகக் கொண்டு தேயிலை சிறு தோட்ட அபிவிருத்தி சட்டதிட்டங்களை விதித்தல்.

05. தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி சங்கங்களை சமுதாய அடிப்படையிலான சங்கங்களாக வலுப்படுத்துதல் மற்றும் சிறு தேயிலை உரிமையாளர்களை தமது காணிகளை மேலதிக வருமானம் ஈட்டும் பணிகளில் ஈடுபடுத்தல்

மேற்படி பணிகள் மூலம் நியதிச்சட்ட நோக்கங்களை நிறைவேற்றவதற்கு நிறுவனத்தினால், 2012 ஆண்டில் குறித்த அபிவிருத்திப் பணிகள் மற்றும் அதன் மூலம் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளவதற்கு நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட (20 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள) மத்திய கால அபிவிருத்தி பெறுபேறுகளை இலக்காகக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## செயற்திட்டமும் நடைமுறைப் பிரச்சினைகளும்

தேயிலை சிறு பற்றுநிலங்கள் துறை தொடர்பாக நிறுவனத்தின் குறிக்கோள்களான அபிவிருத்தி பெறுபேறுகளை அடைந்து கொள்ளும் பொருட்டு 2012 ஆம் ஆண்டில் அபிவிருத்திப் பணிகளுக்காக திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 350.8 மில்லியன் ஆகும். திரட்டிய நிதியிலிருந்து உரிய 225 மில்லியன் ரூபா நிதியேற்பாடுகளான போதாமை காரணமாக மேலதிகமாக 150 மில்லியன் ரூபாவிற்கான நிதியேற்பாடுகளை பெற்றுக் கொள்ள வேண்டும் எனும் இணக்கப்பாட்டுக்கு அமைய 371.3 மில்லியன் ரூபா தொடர்பாக குறித்த அபிவிருத்தி மற்றும் நிறுவன ரீதியான மூலதன ஒதக்கீடுகளினால் எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்ள முடிந்தது.

எனினும் எதிர்பார்க்கப்பட்ட மேலதிக ஏற்பாடான 150 மில்லியன் ரூபா நிறுவனத்துக்கு கிடைக்காதபோதும், போகங்களில் களப்பணிகள் இடம்பெறுவதுடன், தொடர்ந்தேச்சையான கள அபிவிருத்தி பணிகளின் போது குறித்த கள நடவடிக்கைகளுக்கு உரிய தவணைப் பணத்தை உரிய வேளையில் வழங்குவதற்கு நிதியேற்பாடுகளை செய்தல், ஒதுக்கீடுகளை பெறுதல் ஆகியன அத்தியாவசியமாக இருந்தும்கூட அவ்வாறு கிடைக்காமற் போனமையினால் நிறுவனத்துக்கு பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது

முன்னைய ஆண்டுகளின் வரையறுக்கப்பட்ட நிதியேற்பாடுகள் காரணமாக துறைசார் இலக்காக 1000 இற்குக் குறைவான தேயிலை மீள்பயிரிடல் தொடர்பாக மதிப்பிடப்பட்டிருப்பினும் 2012 ஆண்டு தொடர்பாக மேலதிக நிதியேற்பாட்டுடன் 1511 ஹெக்ரயார் தேயிலை மீள் பயிரிடல் தொடர்பாக களை பிடுங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. தேசிய தேவைப்பாட்டின் அடிப்படையில் 2% வீதம் அதாவது 2300 ஹெக்ரயார் மீள் பயிரிடல் தொடர்பாக மதிப்பிடப்பட வேண்டியிருப்பினும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிதியேற்பாடுகளின் அடிப்படையில் 2012 ஆண்டு தொடர்பாக அத் தேசிய தேவைப்பாட்டில் இருந்து 1.3 % வீத மீள் பயிரிடல் தொடர்பாக களை பிடுங்குவதற்கென எதிர்பார்க்கப்பட்டது. எனினும், இதில் 1087 ஹெக்ரயார் அல்லது எதிர்பார்க்கப்பட்ட நிலப்பரப்பில் 72 % குறித்த ஆண்டினுள் நிறுவனத்தினால் பூர்த்தி செய்ய முடிந்தது.

அது போன்றே மண் பதப்படுத்தப்பட்டு முதலாந் தவணை தொடர்பாக 1359 ஹெக்ரயார் இலக்காக இருந்தும் கூட அதன் பயன்விளைவு 960 ஹெக்ரயார் அல்லது 71 % வீதமாகவே இருந்தது. முன்னைய ஆண்டுகளில் நிதியேற்பாடுகள் வரையறுக்கப்பட்டிருந்ததனால் ஆகக் குறைந்த அளவிலான இலக்குகளை உருவாக்கி, மண் பதப்படுத்தப்பட்டதன் காரணமாக இரண்டாம் தவணையில் விளைச்சல் 88.5 ஹெக்ரயார் ஆக இருந்தது. அதாவது இலக்காகக் கருதப்பட்ட நிலப்பரப்பு 900 ஹெக்ரயாரில் 99 % வீதம் ஆகும். அவ்வாறே தேயிலை மீள் பயிரிடல் பணிகளை 900 ஹெக்ரயார் நிலப்பரப்புக்களில் மேற்கொள்வதென எதிர்பார்க்கப்பட்டதுடன், அதன் பயன்விளைவு இலக்கு 99 % வீதம் அல்லது 889.1 ஆக இருந்தது. ஒரு ஆண்டுக்குப் பின்னர் பராமரிப்புப் பணிகளின் இலக்கு 850 ஹெக்ரயார் ஆகும். அதன் பயன்விளைவு 806 ஹெக்ரயார் அதாவது 95 % வீத மேம்பாடு ஆகும்.

நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட அபிவிருத்தி சார்ந்த பெறுபேறுகளை எய்தும் பொருட்டு எதிர்பார்க்கப்பட்ட இலக்கை நோக்கி நிறுவனம் தடம்பதிப்பது பற்றி அளவிடுவதற்காக நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள பணிகளை அடிப்படையாகக் கொண்ட சுட்டிகளினால் மதிப்பிடப்படும்.

**மத்தியகால பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட இலக்குகள் மற்றும் பயன்விளைவுகள்**

## 3.1. மத்தியகால பெறுபேறுகள் - 01

### 06 ஆண்டுகளுள் ஒரு ஆண்டுக்கு / ஹெக்ரயாருக்கு / தயாரிக்கப்பட்ட தேயிலை / கிலோ தாழ்நிலம் 2700 வரையும், மத்திய மலைநாடு 1700 வரையும், ஊவா 1500 வரையும் அதிகரித்தல்

### 3.1.1 வருடாந்தம் 2 % மட்டத்தில் தேயிலை மீள் பயிரிடல் நடவடிக்கைகளைப் பேணல்

தேயிலை சிறு நிலங்களில் தேயிலை உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் பொருட்டு குறைந்த விளைச்சலையுடைய புராதன தேயிலை நிலங்களில் மீள அங்கீகரிக்கப்பட்ட மொட்டுக்களையுடைய தேயிலையை பயிரிடுவதற்கு அதிகாரம் வழங்குவதற்கு இவ் ஊக்குவிப்புக் கொடுப்பனவின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. மேட்டுநிலம் / மத்திய மற்றும் தாழ்நிலம் ஆகிய அனைத்து நிலங்கள் தொடர்பாகவும் ஹெக்ரயாருக்கு ரூபா 300,000 ஐ தவணை முறையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உச்ச ஹெக்ரயார் அலகுகளைக் கொண்ட நிலப்பரப்புக்கள் தொடர்பாக மானியம் வழங்கப்பட்டன. மீள் பயிரிடல் கிரயத்துக்கு அமைய மொத்தக் கிரயத்தில் இருந்து 14 % வீதமானவை ஊக்குவிப்புக் கொடுப்பனவில் உள்ளடக்கப்படுவது போதுமானதாக இன்மையால், குறித்த மானியத் தொகையை கீழே குறிப்பிடப்பட்டுள்ள தவணை அடிப்படையில் அதிகரிப்பதற்கு கொள்கை ரீதியாக தீர்மானிக்கப்பட்டது.

**தேயிலை மீள் பயிரிடல் மானியத் தொகை (தவணை) - ஹெக்ரயாருக்கு**

| | |
|---|---|
| புராதன தேயிலை களை பிடுங்குதல் | ரூபா 80000 |
| மண் பதப்படுத்தல் 1 ஆம் தவணை | ரூபா 30000 |
| மண் பதப்படுத்தல் 2 ஆம் தவணை | ரூபா 120000 |
| தேயிலை மீள் பயிரிடல் | ரூபா 40000 |
| முதலாம் ஆண்டின் பராமரிப்பு | ரூபா 30000 |
| மொத்தம் | ரூபா 300000 |

**உருப்படம் இலக்கம் - 05**
**தேயிலை மீள் பயிரிடல் மானியத் தொகையை அதிகரித்தல் / ஹெக்ரயாருக்கு**
**1979 இல் இருந்து**



**மீள் பயிரிடுவதற்காக விண்ணப்பித்தல்**

2012 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்துக்கு அமைய தேயிலை மீள் பயிரிடல் தொடர்பாக சுமார் 13330 விவசாயிகள் விண்ணப்பிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 12349 விவசாயிகளே மீள் பயிரிடல் தொடர்பாக விண்ணப்பித்திருந்தனர். அதன் மூலம் களை பிடுங்க வேண்டிய நிலப்பரப்பு 3271 ஹெக்ரயார் ஆக இருந்தது. அதில் 11889 விவசாயிகளுக்கு அனுமதிச்சீட்டுக்கள் 2012 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்டிருந்தன. அதன் மூலம் 2648 ஹெக்ரயார் நிலப்பரப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

**உருப்படம் இலக்கம் - 06**

**பயிர்செய்கை மானியம் தொடர்பாக வருடாந்தம் விண்ணப்பித்தல் 2000 - 2012**




**பயன்விளைவு**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது (அட்டவணை இலக்கம் 08) மீய் பயிர்செய்கைக்கான மானியத் தொகையை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை 20% வீதத்தால் அதிகரித்துள்ளது. வரவு செலவுத்திட்ட நிதியேற்பாடுகளின் பிரகாரம் களை பிடுங்குவது தொடர்பாக 1511 ஹெ்ரயார் நிலப்பரப்புக்கள் இலக்காக இருந்த போதிலும், 1087 ஹெக்ரயார் நிலப்பரப்புக்களிலே களைபிடுங்கல் வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் களை பிடுங்கல் 15% வீதத்தால் முன்னேற்றம் கண்டுள்ளது. வருடாந்தம் இலக்கு நிலப்பரப்புக்கு அமைய 72% வீதத்தால் முன்னேற்றம் கண்டுள்ளது. மண் பதப்படுத்தல் முதலாந் தவணைக்கான இலக்கு 1359 ஹெக்ரயார் ஆக இருப்பினும், பயன்விளைவு 960 ஹெக்ரயார் ஆகும். அது இலக்கு நிலப்பரப்பின் 71% வீத முன்னேற்றமாகும். மண் பதப்படுத்தல் இரண்டாம் தவணை மற்றும் மீள் பயிரிடல் வருடாந்த இலக்கு 900 ஹெக்ரயார் ஆக இருந்ததுடன், அதன் பயன்விளைவு 889 ஹெக்ரயார் ஆகும். அது வருடாந்த இலக்கின் 99 % வீத முன்னேற்றமாகும்.

தேயிலை மீள்பயிரிடல் தொடர்பாக குறித்த ஆண்டிலேயே நிறுவனத்தினால் 226.83 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் (மானிய தவணை அதிகரிப்பின் படி) 20.9 % வீதத்தால் அதிகரித்துள்ளது. விவசாயிகள் தொடர்பாக விவசாயிகளுக்கு உபகரணங்க வழங்குவதற்காக 3.949 மில்லியன் ரூபாவும், தேயிலை அபிவிருத்தி செயற்திட்டங்கள் சுழற்சி முறை கடன் திட்டத்தின் கீழ் தேயிலை மீள் பயிரிடல் தொடர்பாக வட்டி இன்றிய மானியமாக 0.112 மில்லியன் ரூபாவும் அடங்கலாக மொத்தமாக 230.898 மில்லியன் ரூபா மீள்பயிரிடல் தொடர்பாக செலவிடப்பட்டுள்ளது.

## அட்டவணை 08
## தேயிலை மீள் பயிரிடல் மானியத் திட்டம்
## 2011 / 2012 ஆண்டின் பயன்விளைவு (ஹெக்ரயார்)

| விடயம் | ஆண்டு | தாழ்நிலம் | | | | | மேட்டு / மத்திய நிலம் | | | மொத்தம் | வருடாந்த இலக்கு | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடு கையில் மேம்பாடு அதிகரித்த/குறைந்த விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | காலி | களுத் | மாத்தறை | இரத்தினபுரி | கேகாலை | கண்டி | நுவரெலியா | ஊவா | | | |
| 1. கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 2012 | 2305 | 526 | 2254 | 3052 | 941 | 1420 | 781 | 1070 | 12349 | 13330 | 20 |
| | 2011 | 1761 | 384 | 1549 | 2432 | 870 | 1366 | 731 | 1228 | 10321 | 11365 | 19 |
| 2. விநியோகித்த அனுமதிச் சீட்டுக்களின் எண்ணிக்கை | 2012 | 2145 | 517 | 2178 | 2938 | 901 | 1329 | 805 | 1076 | 11889 | 11200 | 30 |
| | 2011 | 1214 | 335 | 1476 | 2103 | 731 | 1296 | 847 | 1178 | 9180 | 10062 | 18 |
| 3. அனுமதிச் சீட்டுக்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்புக்கள் | 2012 | 496 | 151 | 553 | 508 | 202 | 290 | 234 | 214 | 2648 | 1795 | 17 |
| | 2011 | 337 | 102 | 394 | 539 | 150 | 267 | 254 | 220 | 2263 | 1668 | 19 |
| 4. மண் வளப்படுத்தல் | 2012 | 196 | 51 | 221 | 241 | 85 | 91 | 93 | 109 | 1087 | 1511 | 15 |
| | 2011 | 171 | 44 | 188 | 202 | 87 | 87 | 94 | 74 | 947 | 399 | (7) |
| 5. மண் பதப்படுத்தல் | 2012 | 186 | 34 | 181 | 183 | 56 | 102 | 81 | 67 | 889 | 900 | (1.3) |
| | 2011 | 162 | 31 | 172 | 174 | 79 | 96 | 108 | 79 | 901 | 824 | (6) |
| 6. தேயிலை மீள்பயிரிடல் | 2012 | 171 | 29 | 198 | 193 | 58 | 81 | 71 | 88 | 889 | 900 | 15 |
| | 2011 | 167 | 30 | 154 | 141 | 74 | 69 | 90 | 47 | 772 | 845 | (9) |
| 7. வழங்கப்பட்ட பயிர் செய்கை மானியம் (மில். ரூபா) | 2012 | 44.13 | 7.82 | 45.75 | 52.63 | 16.57 | 22.56 | 19.59 | 17.77 | *226.83 | 300.17 | 21 |
| | 2011 | 35.21 | 6.98 | 36.18 | 36.73 | 16.34 | 20.80 | 19.52 | 15.88 | 187.64 | 145.24 | 4.8 |

மூலம் : தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபையின் மேம்பாட்டு அறிக்கை

* விவாசாய உபகரணங்கள் தொடர்பாக 3.949 மில். ரூபா மற்றும் வட்டியின்றிய மானியமாக 0.112 மில். ரூபா அடங்கலாக வழங்கப்பட்ட மொத்த மானியம் 230.898 மில். ரூபா ஆகும்.

* * IFAD செயற்திட்டம் அடங்கலாக 2012 இல் 1133 ஹெக். களை பிடுங்கப்பட்டு, 942 ஹெக். மண் பதப்படுத்தப்பட்டு, 937 ஹெக். தேயிலை மீள் பயிரிடப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளன.

**உருப்படம் இலக்கம் - 07**

**தேயிலை மீள் பயிரிடல் மானியம் வழங்கல் தொடர்பான வருடாந்த மேம்பாடு (ரூபா மில்லியன்)**

**1993 – 2012**




* திருத்தப்பட்டவாறு குறித்த தொகை விகிதம் காண்பிக்கப்படவில்லை.

### 3.2.1 பயிர் புனர்ஜீவன மானியத் திட்டம்

உற்பத்தித் திறன் அலகுகளை விருத்தி செய்யும் நோக்குடன் கொழுந்து பறிக்கப்படுகின்ற மொட்டுக்கள் காணப்படும் தேயிலை நிலங்களில் சிபார்ச செய்யப்பட்டுள்ளவாறு கத்தறித்தலின் போது தேயிலைச் செடிகளுக்கு இடையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புதல், மண் பாதுகாத்தல் முறைகள் (வடிகான் முறைமை, கல் மச்சுகள் என்பவற்றை பழுதுபார்த்தல்) மற்றும் நிழலாக்கல் அடங்கலாக ஏனைய பயிரிடல் முறைகளை ஒன்றிணைத்து மேற்கொள்ளுதல் (நிழலாக்கல், கத்தறித்தல், களைபிடுங்குதல்) ஆகியன தொடர்பாக பயிர் புனர்ஜீவன மானியத் திட்டத்தின் கீழ் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

தொடர்ந்தேச்சையாக பத்து ஆண்டு காலப்பகுதியில் சிறப்பாக தேயிலைப் பயிர்செய்கையை முன்னெடுக்கக் கூடிய நிலங்கள் தொடர்பாக சிபார்சு செய்யப்படுவதுடன். அதில் தேயிலை நிலங்களின் இரண்டாவது கத்தறிப்பு மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது, அல்லது பயிர்செய்கையில் ஈடுபட்டு 07 ஆண்டுகளைத் தாண்டியிருப்பின் மானியம் பெற்றுக்கொள்ள முடியும்.

இம் மானியத் திட்டத்தின் கீழ் குழுமங்களாக அமைந்துள்ள, இடைவெளிகளை நிரப்பப்பட்டு கொழுந்து பறிக்கப்படும் தேயிலை பயிர்செய்கைகளை மறுசீரமைத்தலை அடிப்படையாகக் கொண்டு மலைநாடு / மத்திய மலைநாடு ஏக்கருக்கு 1,000 செடிகள் மற்றும் தாழ் நிலத்தில் ஏக்கருக்கு 750 செடிகள் என உச்சளவின் கீழ் செடியொன்றுக்கு ரூபா 25/= வீதம் 2 தவணைகளில் மானியம் வழங்கப்படும்.

**பயன்விளைவு**

2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, இம் மானியம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்தவர்கள் 34 % வீதத்தாலும், அனுமதிச் சீட்டுக்களின் விநியோகம் 44 % வீதத்தாலும் அதிகரித்திருந்தன. எனினும் வருடாந்த செடிகளின் இலக்கு எண்ணிக்கையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 49 % வீதத்தால் குறைவடைந்திருந்தது.

வரையறுக்கப்பட்ட நிதியேற்பாடுகள் மற்றும் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் திருத்தங்களுக்கமைய வருடாந்த செடிகளின் இலக்கு எண்ணிக்கை 377,400 ஆக வரையறுக்கப்பட்டிருந்தும் கூட, அமைச்சின் மீளாய்வுகளின் பொது எட்டப்பட்ட தீர்மானங்களின் படி இடைவெளி நிரப்பல் தேவைப்பாடு தொடர்பாக முன்னுரிமை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கமைய இலக்குச் செடிகளின் எண்ணிக்கை 1,005,840 ஆகும். இதன் காரணமாக 377,400 செடிகள் முதலாந் தவணை இலக்கை தாண்டி இத் துறையின் மேம்பாட்டிற்காக 766,991 செடிகள் வரை அதிகரித்துள்ளன. அதற்கமைய திருத்தப்பட்டவாறு வருடாந்த இலக்கிற்கு அமைய மேம்பாடு 76 % வீதமாகும். (அட்டவணை இலக்கம் 09)

இரண்டாம் தவணையில் பெற்றுக்கொள்ளப்பட்ட செடிகளின் எண்ணிக்கை 345,152 ஆகும். இது முன்னுரிமையளிக்கப்படல் வேண்டும் எனும் தேவைப்பாட்டுக்கமைய இலக்குச் செடிகளின் எண்ணிக்கையான 517584 செடிகளில் 67 % வீத முன்னேற்றமாகும். 2011 ஆண்டினுள் முதலாந் தவணையில் பெற்றுக்கொண்ட செடிகளில் 68 % வீத முன்னேற்றம் கண்டுள்ளன. 2012 ஆண்டில் பயிர் புனர்ஜீவனம் தொடர்பான ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 14.355 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது வழங்கப்பட்டுள்ள மானியம் 126 % வீதத்தினால் அதிகரித்திருந்தது.

## அட்டவணை 09

## பயிர் புனர்ஜீவன மானியத் திட்டம்

## 2011 / 2012 ஆண்டின் பௌதீக பயன்விளைவு (ஹெக்ரயார்)

| விடயம் | ஆண்டு | தாழ்நிலம் | | | | | மேட்டு / மத்திய நிலம் | | | மொத்தம் | வருடாந்த இலக்கு | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடு கையில் மேம்பாடு அதிகரித்த/குறைந்த விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | காலி | களுத் | மாத்தறை | இரத்தினபுரி | கேகாலை | கண்டி | நுவரெலியா | ஊவா | | | |
| 1 கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 2012 | 1193 | 411 | 713 | 493 | 216 | 612 | 278 | 314 | 4230 | | |
| | 2011 | 651 | 105 | 521 | 650 | 209 | 434 | 231 | 288 | 3089 | - | 32 |
| 2. விநியோகித்த அனுமதி சீட்டுக்களின் எண்ணிக்கை | 2012 | 932 | 409 | 621 | 852 | 198 | 490 | 212 | 311 | 3625 | | 44 |
| | 2011 | 476 | 80 | 422 | 490 | 149 | 310 | 312 | 272 | 2511 | | 76 |
| 3 இலக்குச் செடிகளின் எண்ணிக்கை | 2012 | 172500 | 106000 | 249440 | 100000 | 31200 | 243500 | 54600 | 48600 | 1005840 | | (23) |
| | 2011 | 238122 | 40293 | 242823 | 289858 | 76243 | 197550 | 171479 | 123366 | 1379734 | | 79 |
| 4 1 தவணை வழங்க பட்ட செடிகள் | 2012 | 133644 | 60968 | 127287 | 122012 | 49787 | 118985 | 73210 | 81098 | 766991 | 1005840 | (1.7) |
| | 2011 | 82878 | 17047 | 93011 | 110643 | 46089 | 64648 | 57361 | 32645 | 504322 | 529372 | 19 |
| 2 தவணை வழங் கப்பட்ட செடிகள் | 2012 | 67293 | 18969 | 58671 | 71151 | 23473 | 64893 | 22317 | 18385 | 345152 | 517584 | 9.6 |
| | 2011 | 15218 | 17698 | 24698 | 47010 | 7577 | 36735 | 30830 | 2635 | 182401 | 424227 | (28) |
| 5. வழங்கப்பட்ட மானியம் (மில். ரூபா) | 2012 | 2.373 | 0.741 | 2.616 | 2.394 | 0.977 | 2.430 | 1.323 | 1.499 | 14.355 | 8.66 | 127 |
| | 2011 | 0.984 | 0.278 | 1.026 | 1.539 | 0.629 | 1.064 | 0.455 | 0.354 | 6.329 | 9.24 | 76 |

மூலம் : தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபையின் மேம்பாட்டு அறிக்கை

**உருப்படம் இல- 08**

**பயிர் புனர்ஜீவன மானியத் திட்டம் கொடுப்பனவுகளின் முன்னேற்றம்**

**( 1993 - 2012 )**




* திருத்தத்திற்குட்பட்டவை விகிதாசாரமாக காட்டப்படவில்லை.

### 3.2.3 தேயிலை மீள் பயிரிடல் மானியத் திட்டம்

கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு அமைவாக 2003 ஆம் ஆண்டில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த புதிதாக தேயிலை பயிர்செய்கை மானியத் திட்டத்தை 2010 ஆண்டில் இருந்து மீள செயற்படுத்துக்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய பதிலீட்டுப் பயிர்கள் மற்றும் வருமான வழிவகைகள் அற்ற பிரதேசங்கள் தொடர்பாக வரையறுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் கீழ் தேயிலை புதிதாக நடுகை சம்பந்தமாக நிதியேற்பாடுகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. புதிய பயிர்செய்கை தொடர்பாக 2011 ஆண்டின் இறுதி வரை ணரு ஹெக்ரயார் நிலப்பரப்புக்கு செலுத்தப்படும் மானியத் தொகை ரூபா 150,000/- ஆகும்.

**பயன்விளைவு**

2012 ஆம் ஆண்டில் 735 ஹெக்ரயார் நிலப்பரப்பு தொடர்பாக விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன், 517 ஹெக்ரயார் உள்ளடக்கப்படும் வகையில், அனுமதிச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டு இருந்தன. 2012 ஆம் ஆண்டினுள் புதிதாக 200 ஹெக்ரயார் நிலப்பரப்பில் புதிதாக பயிரிடுவது இலக்காக இருந்தததுடன். 239 ஹெக்ரயார் நிலப்பரப்புக்களில் புதிதாக நடுகைப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. புதிதாக தேயிலை பயிரிடுவது தொடர்பாக வழங்கப்பட்ட மானியம் 23.2 மில்லியன் ரூபா ஆகும்.

புதிதாக பயிரிடல் தொடர்பாக வழங்கப்பட்ட மானியத் தொகை போதாமை காரணமாக காணி உரிமையாளர்கள் மானியத் தொகை இன்றி புதிதாக தேயிலை பயிரிடல் வேலைகளில் ஈடுபடுவதற்கு விரும்பவில்லை. 2012 ஆம் ஆண்டில் 2013 ஆண்டுக்குரிய உத்தேச தேசிய வரவு செலவுத்திட்டத்தின் மூலம் 01 ஹெக்ரயார் தொடர்பாக இம் மானியத் தொகையை ரூபா 250,000 வரை அதிகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டது.

மேலும் புதிய அனுமதிப் பத்திரதாரி ஒருவருக்கு மானியத் தொகையின் கீழ் தேயிலை புதிதாக நடுகைக்கான உச்ச நிலப்பரப்பை ½ ஏக்கரில் இருந்து 01 ஏக்கர் வரை அதிகரிப்பதற்கு ஆண்டினுள் கொள்கை ரீதியாக தீர்மானிக்கப்பட்டது.

## அட்டவணை 10

## புதிதாக தேயிலை பயிரிடல் மானியத் திட்டம்

## 2011 / 2012 ஆண்டின் பௌதீக பயன்விளைவு (ஹெக்ரயார்)

| விடயம் | ஆண்டு | தாழ்நிலம் | | | | | மேட்டு / மத்திய நிலம் | | | மொத்தம் | இலக்கு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | காலி | களுத் | மாத்தறை | இரத்தினபுரி | கேகாலை | கண்டி | நுவரெலியா | ஊவா | | |
| 1. கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 2011 | - | 270 | - | - | 212 | - | - | - | 482 | |
| | 2012 | 293 | 1113 | 423 | 598 | 549 | 158 | 65 | 109 | 3308 | |
| 2. விநியோகித்த அனுமதி சீட்டுக்களின் எண்ணிக்கை | 2011 | - | 256 | - | - | 174 | - | - | - | 430 | |
| | 2012 | 257 | 937 | 385 | 582 | 493 | 158 | 70 | 110 | 2990 | |
| 3. மண் வளப்படுத்தல் | 2011 | - | 17.46 | - | - | 10.67 | - | - | - | 28.14 | 50 |
| | 2012 | 16.00 | 70.00 | 31.00 | 72.00 | 46.00 | 11.00 | 6.00 | 8.00 | 260.00 | 200 |
| 4. தேயிலை பயிர்செய்கை | 2011 | - | 17.80 | - | - | 10.58 | - | - | - | 28.38 | 50 |
| | 2012 | 16.00 | 69.00 | 31.00 | 60.00 | 45.00 | 6.00 | 5.00 | 7.00 | 239.00 | |
| 5 வழங்கப்பட்ட மானியம் (மில். ரூபா) | 2011 | - | 0.573 | - | - | 0.613 | - | - | - | 1.186 | 2.5 |
| | 2012 | 0.740 | 4.583 | 3.526 | 7.809 | 4.707 | 0.714 | 0.220 | 0.904 | 23.206 | 24 |

மூலம் : தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபையின் மேம்பாட்டு அறிக்கை

**தரம்வாய்ந்த தேயிலைச் செடிகளை வழங்குதல்**

மேம்படுத்தப்பட்ட புதிய தேயிலை வகைகளுடன் தாய்ச் செடி பாத்திகளைப் பேணல்

தேயிலை உற்பத்தியையும் உற்பத்தித்திறனையும் விருத்தி செய்து கொள்வது தொடர்பாக தேயிலை சிறு பற்றநில உரிமையாளர்களுக்கு தரம் வாய்ந்த நடுகைச் சாதனங்களை பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகளை வழங்குவது நிறுவனத்தின் கவனத்திற்கொள்ளத்தக்க ஒரு மூலோபாயம் ஆகும். அதற்கமைய மேம்படுத்தப்பட்ட வகைககளிலான தரம்வாய்ந்த தாய்ச் செடி பாத்திகள் நிறுவனத்தினால் பேணப்பட்டு வருவதுடன், சிறு தேயிலை பற்றுநில உரிமையாளர்களுக்கும் வணிக ரீதியான தேயிலை நாற்றுமேடையாளர்களுக்கும், நிறுவனத்தின் நாற்றுமேடைகளுக்கும் 249327 கிளைகள் வழங்கப்பட்டன. தாய்ச் செடி பாத்திகளை மேம்படுத்தவதற்காக புதிய வகையிலான மொட்டுகளையுடைய கிளை வகைகள் வழங்கப்பட்ட விதம் குறித்த முழுமையான தகவல்கள் அட்டவணை 9 - A இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இப் பணிகள் தொடர்பாக 1.246 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

**வணிக ரீதியிலான தேயிலை நாற்றுமேடைகள்**

தேயிலை உற்பத்தியையும் உற்பத்தித்திறனையும் அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு தேயிலை சிறு பற்றநில உரிமையாளர்கள் செடிகளை பெற்றுக் கொள்வதை இலகுபடுத்துவது தொடர்பாக தரம்வாய்ந்த வணிக ரீதியிலான தேயிலை நாற்றுமேடைகளை நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள தேயிலை நாற்றுமேடைகளாக பேணுவதும் கண்காணிப்பதும் மிகவும் முக்கியமானதாகும். அதற்கமைய 2012 ஆண்டில் பிராந்திய அலுவலகங்கள் வாயிலாக 969 வணிக ரீதியிலான தேயிலை நாற்றுமேடைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அந் நாற்று மேடைகளில் உள்ளடங்க வேண்டிய இயலளவு 39.41 மில்லியன் செடிகளாகும். அந் நாற்றுமேடைகளில் உறுதிப்படுத்தப்பட்ட செடிகளின் மேம்பாடு அட்டவணை 9 – C இன் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 10**

**வணிக ரீதியிலான நாற்றுமேடைகள் தொடர்பான அனுமதிச் சீட்டுக்கள் மற்றும் செடிகளின் இயலளவு ( 2011 - 2012 )**

| பிராந்தியம் | விநியோகிக்கப்பட்ட அனுமதிச்சீட்டுக்கள் எண்ணிக்கை | | செடிகளின் இயலளவு | |
|---|---|---|---|---|
| | **2011** | **2012** | **2011** | **2012** |
| மாத்தறை | 117 | 165 | 3.692 | 5.457 |
| இரத்தினபுரி | 82 | 176 | 4.385 | 8.378 |
| கோலை | 110 | 52 | 5.982 | 2.880 |
| கண்டி | 111 | 113 | 4.342 | 4.444 |
| காலி | 142 | 136 | 3.903 | 4.487 |
| நுவரெலியா | - | 172 | - | 9.028 |
| ஊவா | 64 | 128 | 1.811 | 3.656 |
| களுத்துறை | 37 | 27 | 1.286 | 1.081 |
| **மொத்தம்** | **663** | **969** | **25.401** | **39.412** |

மூலம் : தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபையின் மேம்பாட்டு அறிக்கை

**நிறுவனத்தின் தேயிலை மேடைகள்**

தேயிலை சிறு தேயிலை பற்றுநில உரிமையாளர்களுக்கு அவசியமான தேயிலைச் செடிகளை கொள்வனவு செய்யும் போது சந்தை கேள்வி விலைகளை கட்டுப்படுத்தவதுடன் தரம்வாய்ந்த செடிகளின் உற்பத்தியை பேணுவதை முன்மாதிரியாகக் கொண்டு நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு நிறுவனத்தினால் தேயிலை நாற்று மேடைகள் பேணப்படுகின்றன. அதற்கமைய 2012 ஆண்டில் பேணப்பட்டு வருகின்ற 07 நாற்றமேடைகளில் மொட்டுத் தேயிலை உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டன. விற்பனை செய்யப்பட்ட மொத்த செடிகளின் எண்ணிக்கை 514676 ஆகும். நாற்றுமேடை மட்டத்தில் செடியொன்றின் விற்பனை விலை அட்டவணை 9 - B சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### 3.1.4. விஸ்தரிப்பு மற்றும் ஆலோசனைச் சேவை பயிற்சித்திட்டங்கள்

முழுமொத்த விஸ்தரிப்பு மற்றும் பயிற்சி ஆலேசானை தொடர்பாக 6846 நிகழ்ச்சித் திட்டங்கள் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை 6508 ஆகும். அந் நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்துகொள்வதற்காக எதிர்பார்க்கப்பட்ட விசாயிகளின் எண்ணிக்கை 175289 ஆக இருப்பினும், அதில் பங்குபற்றிய விவசாயிகளின் எண்ணிக்கை 143456 ஆகும்.

தேயிலை உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பது தொடர்பாக விஸ்தரிப்பு மற்றும் ஆலோசனைச் சேவைகளைப் வழங்கும் பொருட்டு 2012 ஆண்டில் திட்டமிடப்பட்ட பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை 5487 ஆகும். நடாத்தப்பட்ட நிகழ்ச்சி திட்டங்களின் எண்ணிக்கை 5455 ஆகும். இதற்கமைய இலக்காக் கருதப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அமைய மேம்பாடு 99 % வீதமாகும். அந் நிகழ்ச்சித் திட்டங்களில் 131147 விவசாயிகள் எதிர்பாக்கப்பட்ட போதிலும், 111640 விவசாயிகளே கலந்து கொண்டனர். (அட்டவணை இல. 11)

## அட்டவணை - 11- i
## விஸ்தரிப்பு மற்றும் ஆலோசனைச் சேவை – உற்பத்தித்திறன் விருத்தி
## பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை - (1) மற்றும் பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை - (2)

| பிராந்திய அலுவலகம் | | நிகழ்ச்சித் திட்டங்கள் அனுமதிப்பத் திரதாரிகளை அறிவூட்டல் பயிற்சி (1.1.6) | நூற்றுமேடை களுக்கான பயிற்சி (1.1.15) | வணிக நாற் றுமேடையாள ர்களுக்கான பயிற்சி (1.1.19) | தேயிலை பயிரிடல் பற்றிய பயிற்சி (1.1.25) | கொழுந்து பறித்தல் பற்றிய பயிற்சி (1.2.6) | கத்த றித்தல் பயிற்சி (1.3.3) | கத்த றித்தல் திறன் விருத்தி பயிற்சி (1.3.7) | மண் முகாமை த்துவம் பற்றிய பயிற்சி (1.4.2) | நிழலாக் கல்,முகா மைத்துவம் பற்றிய பயிற்சி (1.5.2) | வுள முகா மைத் துவம் (1.6.1) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலி | 1 | 83 | 11 | 27 | 76 | 227 | 82 | 52 | 114 | 126 | 129 | **927** |
| | 2 | 2068 | 182 | 427 | 2195 | 4431 | 1787 | 906 | 2471 | 2649 | 2825 | **19941** |
| மாத். | 1 | 63 | 28 | 20 | 78 | 136 | 73 | 17 | 161 | 155 | 166 | **897** |
| | 2 | 1889 | 514 | 326 | 2282 | 3089 | 1834 | 358 | 4185 | 4502 | 4984 | **23963** |
| களுத். | 1 | 60 | 16 | 0 | 36 | 168 | 104 | 47 | 90 | 132 | 134 | **787** |
| | 2 | 923 | 133 | 0 | 524 | 2267 | 1826 | 635 | 1379 | 1747 | 2485 | **11919** |
| கேகா | 1 | | 10 | 3 | 34 | 68 | 41 | 31 | 65 | 87 | 61 | **442** |
| | 2 | 900 | 169 | 29 | 735 | 1257 | 771 | 643 | 1436 | 1617 | 1191 | **8748** |
| கண்டி | | 54 | 16 | 14 | 33 | 91 | 35 | 28 | 70 | 66 | 63 | **470** |
| | 2 | 1128 | 181 | 153 | 672 | 1662 | 620 | 495 | 1283 | 1044 | 1462 | **8700** |
| நுவ. | 1 | 145 | 20 | 14 | 78 | 69 | 69 | 18 | 59 | 55 | 24 | **551** |
| | 2 | 3691 | 308 | 192 | 1713 | 1315 | 1143 | 251 | 1293 | 892 | 529 | **11327** |
| இர.புரி | 1 | 62 | 21 | 24 | 38 | 143 | 113 | 52 | 133 | 111 | 128 | **825** |
| | 2 | 1703 | 212 | 231 | 777 | 2432 | 2112 | 890 | 2433 | 1962 | 2571 | **15323** |
| ஊவா | 1 | 67 | 23 | 17 | 26 | 114 | 78 | 21 | 67 | 67 | 76 | **556** |
| | 2 | 1340 | 324 | 169 | 544 | 2477 | 1743 | 429 | 1589 | 1533 | 1571 | **11719** |
| **மொத்.** | **1** | **576** | **145** | **119** | **399** | **1016** | **595** | **266** | **759** | **799** | **781** | **5455** |
| | **2** | **13642** | **2023** | **1527** | **9442** | **18930** | **11836** | **4607** | **16069** | **15946** | **17618** | **111640** |
| **இலக்கு** | **1** | **448** | **204** | **113** | **280** | **1106** | **614** | **283** | **733** | **839** | **867** | **5487** |
| | **2** | **11808** | **3710** | **1053** | **6835** | **25419** | **14673** | **4316** | **17507** | **22033** | **23793** | **131147** |

மூலம் : தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபையின் மேம்பாட்டு அறிக்கை

மேற்படி விஸ்தரிப்புச் சேவை பணிகளுக்கு மேலதிகமாக தேயிலை நிலங்களின் மண் அமிலத்தன்மை (Soil pH ) தொடர்பாக 16235 மண் மாதிரிகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு, அவ் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதன் இலக்காகக் கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் முன்னேற்றம் 70% வீதமாகும். அவ்வாறே 31890 தனிநபர் விஸ்தரிப்புச் சேவைகள் திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதன் முன்னேற்றம் 27843 ஆகும். அது இலக்காகக் கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கையின் 87 % வீதமாகும்.

**அட்டவணை - 11-ii**

**தனி நபர் விஸ்தரிப்புப் பணிகளினதும் மண் பரிசோதனைகளினதும் எண்ணிக்கை**

| பிராந்திய அலுவலகம் | | காலி | மாத். | களுத். | கேகாலை | கண்டி | நுவரெ. | இர.புரி | ஊவா | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தனிநபர் விஸ்தரிப்பு | இலக்கு | 6900 | 6100 | 2160 | 2170 | 2000 | 3000 | 7000 | 2560 | **31890** |
| | மேம்பாடு | 6448 | 5664 | 2064 | 2028 | 1738 | 1923 | 5552 | 2429 | **27843** |
| மண் பரிசோதனை | இலக்கு | 4000 | 4500 | 1860 | 1959 | 1945 | 2300 | 2858 | 3835 | **23257** |
| | மேம்பாடு | 2421 | 3351 | 1817 | 1562 | 1174 | 445 | 2511 | 2954 | **16235** |

மூலம் : தேயிலை சிறு பற்றுநில அபிவிருத்தி அதிகார சபையின் மேம்பாட்டு அறிக்கை

## மத்தியகால பெறுபேறு - 02

**5 ஆண்டுகளுள் தொழிற்சாலை மட்டத்தில் பச்சைக் கொழுந்தின் தரத்தை 75% வரை அதிகரித்தல்**

தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களின் வருமானத்தை விருத்தி செய்யும் போது, அதிக விளைச்சல், குறைந்த உற்பத்திச் செலவு மற்றும் அதிகூடிய சந்தை விலை ஆகியன பிரதானமாக செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக விளங்குகின்றன. உற்பத்திச் செலவை குறைத்துக் கொள்வதற்கு தேசிய உர மானியத் திட்டத்தின் மூலம் குறைந்த விலையில் உரம் பெற்றுக்கொள்ள முடியும். எனினும் பச்சைக் கொழுந்துகளுக்கு அதிகூடிய சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு தரம் வாய்ந்த பச்சைக் கொழுந்து உற்பத்திகள் விருத்தி செய்யப்படல் வேண்டும்.

கொழுந்தின் தரத்தை விருத்தி செய்வது தொடர்பாக 10000 கொழுந்து பறிப்பவர்களுக்கு பயிற்சி வழங்குதல், தரம் வாய்ந்த கொழுந்துகளை மட்டும் தொழிற்சாலைகள் ஊடாக பொறுப்பேற்றுக் கொள்வது தொடர்பான சட்டதிட்டங்களை வகுத்தல், கொழுந்து வழங்குநர்களுக்கு பயிற்சியளித்தல், தரம்வாய்ந்த கொழுந்துகள் தொடர்பாக தேயிலை சிறுபற்றுநில உரிமையாளர்களை விழிப்புணர்வூட்டல் ஆகிய நடவடிக்கைகள், அப் பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக எதிர்பார்க்கப்படும் செய்ன்முறைகளாகும். அதற்கமைய 2012 ஆம் ஆண்டில் கொழுந்தின் தரத்தை விருத்தி செய்யும் பொருட்டு 475 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்ததுடன், 313 நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. (அட்டவணை இல. 12) அவ் ஆண்டின் இலக்கிற்கு அமைய அதன் மேம்பாடு 66 % வீதமாகும். 14974 விவசாயிகள் அந்நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றியதுடன், 23280 விவசாயிகள் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்பட்டனர். அதற்கமைய பங்குபற்றுநர்களின் முன்னேற்றம் 64 % வீதமாகும்.

### அட்டவணை - 12
### கொழுந்தின் தர விருத்தி பயிற்சிப் பட்டறைகளின் எண்ணிக்கை மற்றும் பங்குபற்றிய விவசாயிகளின் எண்ணிக்கை

| பிராந்திய அலுவலகம் | உருப்படி | கொழுந்து பறிப்பவர்க ளுக்கான பயிற்சி (2.2.2.) | கொழுந்த வழங்குநர் விழிப்பு ணர் வூட்டல் பயிற்சி (2.3.4.) | கொழுந்தின் தரம் பற்றிய பயிற்சி (2.5.2.) | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| காலி | நிகழ்ச்சித்திட்டம் | 132 | 8 | 46 | **186** |
| | பங்குபற்றுநர் | 2918 | 583 | 3129 | **6630** |
| மாத்தறை | நிகழ்ச்சித்திட்டம் | 93 | 37 | 52 | **182** |
| | பங்குபற்றுநர் | 1895 | 1837 | 4786 | **8518** |
| களுத்துறை | நிகழ்ச்சித்திட்டம் | 66 | 17 | 13 | **96** |
| | பங்குபற்றுநர் | 887 | 492 | 434 | **1813** |
| கேகாலை | நிகழ்ச்சித்திட்டம் | 46 | 4 | 26 | **76** |
| | பங்குபற்றுநர் | 807 | 59 | 559 | **1425** |
| கண்டி | நிகழ்ச்சித்திட்டம் | 25 | 3 | 33 | **61** |
| | பங்குபற்றுநர் | 405 | 108 | 1862 | **2375** |
| நுவரெலியா | நிகழ்ச்சித்திட்டம் | 27 | 18 | 14 | **59** |
| | பங்குபற்றுநர் | 495 | 437 | 458 | **1390** |
| இரத்தினபுரி | நிகழ்ச்சித்திட்டம் | 57 | 45 | 76 | **178** |
| | பங்குபற்றுநர் | 1017 | 1280 | 1789 | **4086** |
| ஊவா | நிகழ்ச்சித்திட்டம் | 57 | 32 | 53 | **142** |
| | பங்குபற்றுநர் | 1142 | 807 | 1957 | **3906** |
| **மொத்தம்** | **நிகழ்ச்சித்திட்டம்** | **503** | **164** | **313** | **980** |
சேவையில் 6 ஆண்டுகளைப் பூத்திசெய்துள்ள அனைத்து ஊழியர்களுக்கும் செலுத்த வேண்டிய ஓய்வூதிய பணிக்கொடை தொடர்பாக முழுமையான நிதியேற்பாடுகள் கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நிதியின்மையின் காரணமாக, பணிக்கொடை நிதியேற்பாடுகளுக்கு தகுந்தவாறு வைப்புக்களின் பெறுமதியை அதிகரிப்பதற்கு முடியாதுள்ளது. எவ்வாறாயினும், சுமார் ரூபா 6.7 மில்லியன் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு வைப்பிலிடப்பட்டுள்ளது.

**3.2 வாடகை அறிவிடல்**

ஒருங்கிணைந்த நிதியிலிந்து மற்றும் செஸ் நிதியிலிருந்து முதலீடு செய்யும் நிறுவமொன்றாக தேயிலை சிறுபற்று நிலங்கள் அதிகார சபை வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

3.3 **முறைசாரா பொறுப்புக்கள்**

தொழில் நியாயாதிக்கச் சபை மற்றும் நீதிமன்ற வழக்குகள் தொடர்பாக 3 மில்லியன் ரூபா முறைசாரா பொறுப்புக்கள் காணப்படுகின்றன.

(4) IRDP , SHTDP, TDP, *பிற செயற்திட்டங்கள் தொடர்பாக 1981 இலிருந்து 2011 வரை கிடைக்கப்பெற்ற நிதி, திறைசேரி மானியங்கள் மற்றும் இலங்கை தேயிலைச் சபையின் சொத்துக்கள், இலங்கை கணக்கீட்டு நியம இல. 24 இற்கு ஏற்ப தேய்மானம் நிலவுகின்றது. அதற்கமைய ரூபா 5.945 மில்லியன் பிற்போடப்பட்ட வருமானமாக கணக்கிலிடப்பட்டுள்ளதுடன், மீதி நிலுவைகள் இனிவரும் ஆண்டு தொடர்பாக தேய்மானம் மேற்கொள்ளப்பட்டு முன்கொணரப்பட்டுள்ளது.*

(5) *வலஹந்தூவை சுற்றுலா பங்களா மற்றும் காணியை அண்மித்த நிலப்பரப்பின் விஸ்தீரணம் 10.54 ஹெக்ரயார்கள் ஆகும். காணி நிரப்பும் ஆணைக்குழுவுக்குச் சொந்தமான இக் காணி இதுவரை அதிகாரசபையிடம் ஒப்படைக்கப் படவில்லை.*

(6) ***சட்டகத்தன்மை***

*திரு. ஜயந்த த சில்வா அவர்களின் தொழில் பிணக்கை சுமுகமாக தீர்த்துவைப்பதற்காக இவ் வாண்டினுள் ரூபா 01 மில்லியன் செலுத்த வேண்டி ஏற்பட்டது.*

(7) *மீள் பயிரிடுதல் நிவாரண முறையில் காணப்பட்ட செயலாற்றுகை மற்றும் ஆரம்ப செயற்பாட்டுத் திட்டத்துக்கு அமைய ஆண்டிற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், வரவுசெலவுத்திட்ட ஆவணம் அதற்கமைய தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், மேலதிக நிதியேற்பாடுகள் திறைசேரியிடமிருந்து கிடைக்காமை காரணமாக இவ் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிவாரணக் கொடுப்பனவு தொடர்பாக அதிகாரசபையிடமிருந்த ரூபா 28 மில்லியன் செலவிடப்பட்டது.*

.

(8) 2012 சனவரி 01 ஆந் திகதியில் இருந்து செல்லுபடியாகுமாறு நிவாரணங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிகரிக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| *மீள் பயிரிடல் -* | ஒரு ஹெக்ரயாருக்கு ரூபா 250,000 இலிருந்து 300,000 வரை |
| *புதிதாக பயிரிடல் -* | 50,000 ரூபாவில் இருந்து 150,000 வரை |

(9) *இவ் ஆண்டினுள் தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், 'திவிநெகும' நிதியேற்பாடுகளின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக ரூபா 9.3 மில்லியன் செலவிடப்பட்டது.*

(10) *களுத்துறை மாவட்டத்தின் தேயிலை சிறு பற்றுநிலங்களின் மகளிர் உரிமையாளர்கள் 1000 பேரின் வருமானத்தை வருமானத்தை அதிகரிப்பது தொடர்பான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இவ்வாண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேல் மாகாண சபையினால் இது தொடர்பாக நிதி வழங்கப்பட்டதுடன், அதற்கான மொத்தச் செலவினம் ரூபா 3.75 மில்லியன் ஆக இருந்தது.*

# தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை

## 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த காசுப் பாய்ச்சல் கூற்று

**செயற்பாட்டுப் பணிகளின் காசுப் பாய்ச்சல்**

**பொதுவான பணிகளின் மிகை (பற்றாக்குறை)**

***பணம் அல்லாதவைகள்***

*தேய்மானம்*
*பணிக்கொடை நிதியேற்பாடுகள்*
*சந்தேகத்திற்கிடமான கடன் ஒதுக்கீடுகளை அதிகரித்தல்*
*கடன்பெறுநர்களது அறவிடமுடியாக்கடன் / பதிவழித்தல்*
*வட்டி வருமானம்*

*செலுத்தவேண்டிய நிதி அகரித்தல் /குறைவடைதல்*
*மிள்மதிப்பீட்டு நட்டங்கள்*
*ஊழியர் கிரய அதிகரிப்புக்கான ஒதுக்கீடு*
*ஆதனங்கள், பொறித்தொகுதி உபகரண விற்பனையின் மூலம்பெற்ற இலாபம் / நட்டம்*
*ஏனைய சொத்துக்கள் அதிகரித்தல் /குறைவடைதல்*
*அறவிட வேண்டியன அதிரித்தல் /குறைவடைதல்*
*பொருட் பட்டியல் அதிரித்தல் /குறைவடைதல்*

**செயற்பாட்டுப் பணிகளின் தேறிய காசுப் பாய்ச்சல்**

*முதலீட்டுப் பணிகளின் நிதிப் பாய்ச்சல்*
*இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு*
*இயந்திரங்கள், உபகரணங்களின் விற்பனையின் மூலம் பெற்ற வருமானம்*

***முதலீட்டுப் பணிகளின் தேறிய காசுப் பாய்ச்சல்***
*வட்டி*
*செலுத்தப்பட்ட பணிக்கொடை*

# தேயிலை சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை

## 2012 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கான நிதி நிலைமை பற்றிய கூற்று

(ரூபா '000)

| | அட்டவணை இல. | | 2012 | | 2011 |
|---|---|---|---|---|---|
| <u>சொத்துக்கள்</u> | | | | | |
| **பொருட் பதிவேடு / கையிருப்பு** | | | | | |
| காசும் காசு ஒப்புரவுகளும் | 7 | 40,633 | | 70,392 | |
| வர்த்தக மற்றும் பிறபெறுவனவுகள் | 4.5 | 131191 | | 215,307 | |
| **பொருட் பதிவேடு / கையிருப்பு** | 3 | 22,381 | | 19,610 | |
| முற் கொடுப்பனவுகள் | 6 | 290 | | 224 | |
| ஏனைய நிதிசார் சொத்துக்கள் | 2A | 4540 | 199035 | 4740 | 310273 |
| **நடைமுறைசாரா சொத்துக்கள்** | | | | | |
| முதலீடு ( நீண்ட கால ) | 2 | | 7,891 | 6,702 | |
| ஏனைய நிதிசார் சொத்துக்கள் | 2A | | 1,484 | | 965 |
| **ஆதனம், இயந்திரம், உபகரணம்** | 1 | 332,731 | | 314,454 | |
| கழிக்குக : தேய்மானக் கணக்கு | | 56,983 | 275,749 | 77,362 | 237,092 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | | **484,159** | | **555,032** |
| <u>பொறுப்புக்கள்</u> | | | | | |
| <u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u> | | | | | |
| கொடுமதிகள் | 8 | 24116 | | 26,782 | |
| அட்டுறு செலவுகள் | 9 | 99,529 | 123,645 | 24, 744 | 51,526 |
| <u>நடைமுறைசாரா பொறுப்புக்கள்</u> | | | | | |
| பணிக்கொடைக்கான நிதி ஏற்பாடுகள் | 10 | 115,902 | 115,902 | 108,871 | |
| <u>மொத்தப் பொறுப்புக்கள்</u> | | | 239,547 | 160,397 | |
| தேறிய சொத்துக்கள் | | | **244,613** | | **394,635** |
| தேறிய சொத்துக்கள் / **ஒப்புரவுகள்** | | | | | |
| தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களுக்கான | 01 A | 6,164 | | - | |
| வரவு செலவுத் திட்ட மானியம் | *01 B* | *176,645* | *212,473* | | |
| மீள்மதிப்பீட்டு மிகை | 01 C | | 143,664 | | 109,857 |
| ஒதுக்கல்கள் | | | (81,860) | | 72,305 |
| | | | 244,613 | | 394,635 |
| மொத்தத் தேறிய சொத்துக்கள் / **ஒப்புரவுகள்** | | *244,613* | | **394,635** | |

.........................................  .........................................

**(தலைவர்)**  **(நிதி முகாமையாளர் )**

# தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை

## 2012 டிசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றுகை கூற்று

(ரூபா'000)

| | அட்டவணை இல. | | 2012 | | 2011 |
|---|---|---|---|---|---|
| **செயற்பாட்டு அரசிறை** | | | | | |
| கூட்டிணைந்த நிதி | | | | | |
| குறித்த ஆண்டினுள் கிடைக்கப் பெற்ற நிதி | | | 412,669 | | 391,594 |
| **ஏனைய வருமானம்** | 15 | | | | |
| வட்டி – C / D | | 2,231 | | 1,925 | |
| ஊழியர் கடன் மீதான வட்டி | | 3824 | | 1,858 | |
| நானாவித வருமானம் | | 3815 | | 2,697 | |
| வாகனங்கள் அப்புறப்படுத்தல் மீதான மிகை / பற்றாக்குறை | | 1086 | | 1,627 | |
| உரப் பகிர்ந்தளிப்பு மீதான மிகை / பற்றாக்குறை | 16 | (79) | | (444) | |
| நாற்றுமேடைகள் மீதான மிகை / பற்றாக்குறை | 17 | (572) | | 871 | |
| செலவை விஞ்சிய வருமானம் - ஹந்தானை | | 1,568 | 11874 | 1,676 | 12,210 |
| | | | 424,542 | | 403,804 |
| **அபிவிருத்திச் செலவுகள்** | | | | | |
| நிவாரண உதவு தொகைகள் | 13 | 268,460) | | (202,059) | |
| விஸ்தரிப்புச் செலவினம் | 14 | (4617) | | (2,717) | |
| சமூக அபிவிருத்திச் செலவுகள் | 13 | (1,500) | | (2,310) | |
| நிறுவக வலுவூட்டல் | | (1,727) | | (928) | |
| | | | (276,304) | | (208,014) |
| **செயற்பாட்டுச் செலவினம்** | 12 | | | | |
| தனியாள் வேதனாதிகள் | | | | | |
| சம்பளம், கொடுப்பனவு, ஊசேநி., ஊநபொநி. முதலியன | | 178,549) | | (167,635) | |
| மேலதிக நேர கொடுப்பனவு / விடுமுறை கொடுப்பனவு | | (2,274) | | (2,485) | |
| பிரயாணச் செலவுகள் | | (7,728) | | (7,109) | |
| விநியோகம் மற்றும் பயன்படுத்துகை | | (3,517) | | (2,930) | |
| பராமரிப்பு | | 15,135) | | (13,545) | |
| தொடர்பாடல் | | (4,188) | | (3,863) | |
| வட்டி, வாடகை மற்றும் மின்சாரம் | | (4,844) | | (4,505) | |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் | | 17,421) | | (16,455) | |
| **மொத்த செயற்பாட்டுச் செலவினம்** | | | (233,675) | | (218,527) |
| | | | (85,436) | | (22,737) |
| **செயற்பாட்டுப் பணிகளின்** மிகை / பற்றாக்குறை | | | | | |
| பணிக்கொடை | | 14,908) | | (16,309) | |
| தேய்மானமும் கழிவும் தொடர்பான செலவுகள் | | (11744) | | (21, 424) | |
| கடன்பெறுநர்களிடமிருந்துஅறவிடமுடியாக் கடன் / பதிவழித்தல்கள் | | 48,022) | (74,675) | (2,476) | (40,209) |
| நிதியேற்பாடுகள் | | | (160,111) | | (62,946) |
| ஆதனங்கள், பொறிமுறை மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலம் பெறப்பட்ட இலாபம் | | | | | |
| IFAD – மீண்டுடெழும் மானியம் | 14 | 23,618 | | 24,144 | |
| மீண்டுடெழும் செலவினம் | | 23,618) | | (24,144) | |
| கடன்தருநர்களினால் பதிவழிக்கப்பட்ட கடன் | | | | 46,677 | |
| விசேட உருப்படிகளுக்கு முன்னரான மிகை / பற்றாக்குறை | | | | | 46,677 |
| விசேட உருப்படி | | | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் | 01D | | 5,946 | | 3,512 |
| **குறித்த காலப் பகுதிக்கான தேறிய மிகை / பற்றாக்குறை** | | | **(154,165)** | | **(12,757)** |

## நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள்

**01. கணக்கீட்டுக் கொள்கைகள்**

**1.1 பொதுவானவை**

**1.1.1 கணக்கீட்டு அடிப்படை**

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் நிதிசார் கூற்றுக்கள், பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீ கோட்பாடுகளுக்கும், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீ நியமங்களுக்கும் அமைவாகவே தயாரிக்கப்படுகின்றன. இந் நிதிக்கூற்றுக்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க கிர பிரமாணங்களின் அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. இக் கணக்குகள் தொடர்பாக செல்வாக்குச் செலுத்துகி பணவீக்க காரணிகளை கவனத்திற்கொண்டு அவற்றில் மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை. உரியவாறு கையாளப்பட்டு திட்டவட்டமான கொள்கைகள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புக்களின் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

**1.1.5 ஐந்தொகை தொடர்பான பின்கண்காணிப்பு**

ஐந்தொகை தொடர்பாக குறித்த திகதிக்குப் பின்னரான முக்கியமான நிகழ்வுகள் தொடர்பாக கவனஞ் செலுத்தப்பட்டு, தேவைய இடங்களில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

**1.1.6 ஒப்பீட்டு ரீதியான எண்ணிக்கை**

நடப்பாண்டின் கணக்குகளை சமர்ப்பிப்பது தொடர்பான மாற்றல்களுடன் பொருந்தும் வகையில் ஒப்பீட்டு ரீதிய எண்ணிக்கைகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

**1.1.7 வெளியிடப்பட்ட புதிய கணக்கீட்டு நியமங்கள் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை என்பது பற்றி**

*இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்திளால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் தொடர்பான புதிய தொகுப் கணக்கீட்டு கோட்பாடுகள் 2012 சனவரி மாதம் 1 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரான நிதியாண்டு தொடர்பாக பிரயோகமான அமைந்துள்ளது. நிதியாண்டு மார்ச் 31 திகதியுடன் முடிவுறுத்தப்படுகின்ற அனைத்து நிறுவனங்களுக்கும் இந் நியமங்கள் பொருத்தமான அமைந்து விடாது.*

SLFRS மற்றும் LKAS (IAS களுக்கு இணையாக) SLFRS ஆகிய இரு முதல் எழுத்துக்களும் குறித்து நிற்கின்ற கணக்கீ நியமங்களில், இலங்கை புதிய கணக்கீட்டு நியமங்களும் உள்ளடங்குகின்றன. இலங்கை கணக்கீட்டு நியமங்களில் SLF மற்றும் LKAS முதன்முதலில் உபயோகிக்கும் போது SLFRS ஆக இசைவுறுத்தப்படல் வேண்டும். இந் நியமங் நிதிக்கூற்றுக்களுடன் எவ்வாறு செல்வாக்குச் செல்வாக்குச் செலுத்தக்கூடும் என்பது பற்றி தேயிலை சிறுபற்று நிலங்கள் அதிகார ச ஏற்கெனவே ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதுடன், இந் நியமங்கள் இசைவுறுத்தப் படுவதனால் ஏற்படும் தாக்கம் ஐந்தொகை பத்திர தினத்தன்று எண்ணிக்கை ரீதியாகவெளியிடப்படவில்லை.

**1.1.5 அதிவிசேட விடயங்கள்**

*நடப்பாண்டினுள் உரம் கடனாகப் பெற்ற சில கடன்பெறுநர்கள், அவர்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைை செலுத்தியுள்ளனர். அறவிட முடியாக் கடனை அறவிடும் முறையில் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளதுடன், இவ் ஆண்டு தொடர் ஒதுக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன் தொடர்பான நிதியேற்பாடு ரூபா 9.465 மில்லியன் ஆகும். சில கடன்பெறுநர்களிடமிருந்து மீ கடனைப் பெற்றுக் கொள்ளவதிலுள்ள சந்தேகம் குறித்து குறிப்பிடப்பட்டிருந்தமையினால் அதற்கமைய கணக்கு தயாரிக்கப்பட்டிருந்தன. பிரதிநிதித்துவமின்றிய மீதிகள் தொடர்பாக அறவிடமுடியாக் கடன் நிதியேற்பாடுகள் ஏதுமில்லை.*

.

| **கடன் காஎல்லை** | **நிதியேற்பாடுகள்** |
|---|---|
| ஒராண்டுக்குக் கீழ் | ஏதுமில்லை |
| 1 ஆண்டுலிருந்த 2 இற்கு மேல் | 30% |
| 3 ஆண்டிற்கு மேல் | 100% |

## (2) சொத்துக்கள் மற்றும் மதிப்பீட்டு அடிப்படை

2.1 **ஆதனங்கள், பொறிமுறை மற்றும் உபகரணங்கள்**

*ஐந்தொகையில் ஆதனங்கள், பொறிமுறை மற்றும் உபகரணங்கள் என்பன திரண்ட தேய்மானம் குறைக்கப்பட்ட கிரயமாக சுட் காட்டப்பட்டுள்ளது. தேய்மானம் தொடர்பாக பின்வருமாறு நேரடியாக மீள் மதிப்பீட்டு முறைக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.*

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 2% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| தளபாடங்கள்,பொருத்துதல்கள் மற்றும் அலுவலக உகரணங்கள் | 12.5% |
| கணனிகள் | 20% |

கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டின் தேய்மானம் தொடர்பாக அறவிடப்பட்டிருப்பினும், ஆண்டினுள் அப்புறப்படுத்தப்ப சொத்துக்கள் தொடர்பாக தேய்மானம் ஏதுமில்லை. *கடந்த ஆண்டில் திறைசேரியிடம் இருந்து அதிகார சபைக்கு 3 கெப் வாகனங் கிடைத்ததுடன், அதில் ஒரு வாகனத்திற்கான வியாபாரப் பெறுமதி ரூபா 6.8 மில்லியன் ஆக விலை நிர்ணயிக்கப்பட்டு இருந்ததுடன், இ கணக்குகள் தொடர்பான சீராக்கம் இவ் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டது. மோட்டார் வாகனங்களின் மீள்மதிப்பீடு இவ் ஆண்டின மேற்கொள்ளப்பட்டது. மீள்மதிப்பீடு தொடர்பாக செல்லுபடியாகும் கால எல்லை 2012.12.31 ஆந் திகதியுடன் முடிவடைந்தது. இம் மதிப்*

அரசாங்கத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட வாகன மதிப்பீட்டு நிறுவனம் ஒன்றின் மூலமே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.2 முதலீடு**

**முதலீடுகளின்** பணிக்கொடை தொடர்பான நிலையான வைப்புக்கள் இதனுள் அடங்குகின்றன.

**2.3 பொருட்களின் கையிருப்பு மற்றும் பொருட்பதிவேடு**

கையிருப்பு மற்றும் பொருட்பதிவேடு என்பன கிரயம் அல்லது வரவுவைக்கப்படும் பெறுமதிகளை விட குறை பெறுமதியிலேயே மதிப்பிடப்படுட்டுள்ளது. கிரயமானது முன்னர் வரவு வைக்கப்பட்ட முன்னைய வழங்கல்கள அடிப்படையிலேயே கணக்கிடப்பட்டுள்ளது.

**2.4 வியாபார கடன் பெறுநர்கள் மற்றும் அறவிடவேண்டியுள்ள தொகை**

தேயிலை சக்தி நிதியில் இருந்து ரூபா 75.2 மில்லியன் மீதி இவ்வாண்டினுள் பதிவழிக்கப்பட்டது. வரவுசெலவுத் தி மானியங்களுக்கு மாறாக ரூபா 36.66 மில்லியன் மூலதனம் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 38.56 மில்லியன் வருமா மற்றும் செலவு கணக்கிலிருந்து அறவிடப்பட்டது.

2.5 **ஏனைய அறவீடுகள்**

வியாபார கடன்பெறுநர் தவிர ஏனைய அறவீடுகள், வரவுவைக்க வேண்டிய மதிப்பீட்டு பெறுமதிகளுக்கமை காண்பிக்கப்பட்டுள்ளனவாகும்.

**2.6 காசும் காசு ஒப்புரவுகளும்**

இதனுள் கையிருப்பிலுள்ள நிதி மற்றும் வைப்புக்கள் என்பன உள்ளடங்குகின்றன.

**2.7 காசுப் பாய்ச்சல்**

காசு பாய்ச்சல் கூற்று அமய முறையொன்றுக்கு ஏற்பவே தயாரிக்கப்பட்டுள்ளது.

**2.8 நிதி கணக்கீட்டிபெறுவனவுகள்**

ஒதுக்கீட்டுக் கணக்கினூடாகவே 2007 ஆண்டில் இருந்து செஸ் நிதி திறைசேரியின் மூலம் வழங்கப்பட்டு வந்துள்ளது.

(3) **பொறுப்புக்கள்**

ஐந்தொகை திகதியில் இருந்த அனைத்து பொறுப்புக்களும் கணக்கிலிடப்பட்டுள்ளது என்றபடியால் தெளிவான பொறுப்புக் தொடர்பான நிதியேற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. எனினும், திட்டநுட்பமாக கணக்கிட முடியாத தொ உள்ளடக்கப்படவில்லை. கணக்கு மீதியின் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளவை, விண்ணப்பிக் பட்சத்தில் வழங்கப்படுகின்ற சொத்துக்கள் ஆகும். வருமானமாக காட்டப்பட்டுள்ள ரூபா 46 மில்லியன் கடன்தருநரகளு செலுத்தாமை மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான ஏனைய மீதிகளாகும்.

**3.1 பணிக்கொடை தொடர்பான நிதியேற்பாடு**

சேவையில் 6 ஆண்டுகளைப் பூத்திசெய்துள்ள அனைத்து ஊழியர்களுக்கும் செலுத்த வேண்டிய ஓய்வூ பணிக்கொடை தொடர்பாக முழுமையான நிதியேற்பாடுகள் கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிதியின்மையின் காரணமாக, பணிக்கொடை நிதியேற்பாடுகளுக்கு தகுந்தவாறு வைப்புக்களின் பெறுமதி அதிகரிப்பதற்கு முடியாதுள்ளது. எவ்வாறாயினும், சுமார் ரூபா 6.7 மில்லியன் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவ வைப்பிலிடப்பட்டுள்ளது.

**3.2 வாடகை அறிவிடல்**

ஒருங்கிணைந்த நிதியிலிந்து மற்றும் செஸ் நிதியிலிருந்து முதலீடு செய்யும் நிறுவமொன்றாக தேயிலை சிறுபற்று நிலங்கள் அதி சபை வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

3.3 **முறைசாரா பொறுப்புக்கள்**

தொழில் நியாயாதிக்கச் சபை மற்றும் நீதிமன்ற வழக்குகள் தொடர்பாக 3 மில்லியன் ரூபா முறைசாரா பொறுப்புக்கள் காணப்படுகின்றன.

(4) IRDP , SHTDP, TDP, *பிற செயற்திட்டங்கள் தொடர்பாக 1981 இலிருந்து 2011 வரை கிடைக்கப்பெற்ற திறைசேரி மானியங்கள் மற்றும் இலங்கை தேயிலைச் சபையின் சொத்துக்கள், இலங்கை கணக்கீட்டு நியம இல. 24 இற்கு தேய்மானம் நிலவுகின்றது. அதற்கமைய ரூபா 5.945 மில்லியன் பிற்போடப்பட்ட வருமானமாக கணக்கிலிடப்பட்டுள்ளதுடன், நிலுவைகள் இனிவரும் ஆண்டு தொடர்பாக தேய்மானம் மேற்கொள்ளப்பட்டு முன்கொணரப்பட்டுள்ளது.*

(5) *வலஹந்தூவை சுற்றுலா பங்களா மற்றும் காணியை அண்மித்த நிலப்பரப்பின் விஸ்தீரணம் 10.54 ஹெக்ரயார்கள் ஆகும். கா நிரப்பும் ஆணைக்குழுவுக்குச் சொந்தமான இக் காணி இதுவரை அதிகாரசபையிடம் ஒப்படைக்கப் படவில்லை.*

(6) ***சட்டகத்தன்மை***

*திரு. ஜயந்த த சில்வா அவர்களின் தொழில் பிணக்கை சுமுகமாக தீர்த்துவைப்பதற்காக இவ் வாண்டினுள் ரூபா 01 மில்லி செலுத்த வேண்டி ஏற்பட்டது.*

(7) *மீள் பயிரிடுதல் நிவாரண முறையில் காணப்பட்ட செயலாற்றுகை மற்றும் ஆரம்ப செயற்பாட்டுத் திட்டத்துக்கு அ ஆண்டிற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், வரவுசெலவுத்திட்ட ஆவணம் அதற்கமைய தயாரிக்கப்பட்டிருந் எனினும், மேலதிக நிதியேற்பாடுகள் திறைசேரியிடமிருந்து கிடைக்காமை காரணமாக இவ் ஆண்டில் மேற்கொள்ளப நிவாரணக் கொடுப்பனவு தொடர்பாக அதிகாரசபையிடமிருந்த ரூபா 28 மில்லியன் செலவிடப்பட்டது.*

.

(8) 2012 சனவரி 01 ஆந் திகதியில் இருந்து செல்லுபடியாகுமாறு நிவாரணங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவ அதிகரிக்கப்பட்டுள்ளன.

*மீள் பயிரிடல்* - ஒரு ஹெக்ரயாருக்கு ரூபா 250,000 இலிருந்து 300,000 வரை

*புதிதாக பயிரிடல்* - 50,000 ரூபாவில் இருந்து 150,000 வரை

(9) இவ் ஆண்டினுள் தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், 'திவிநெகு நிதியேற்பாடுகளின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக ரூபா 9.3 மில்லியன் செலவிடப்பட்டது.

(10) *களுத்துறை மாவட்டத்தின் தேயிலை சிறு பற்றுநிலங்களின் மகளிர் உரிமையாளர்கள் 1000 பேரின் வருமானத்தை வருமானத் அதிகரிப்பது தொடர்பான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இவ்வாண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேல் மாகாண சபையின இது தொடர்பாக நிதி வழங்கப்பட்டதுடன், அதற்கான மொத்தச் செலவினம் ரூபா 3.75 மில்லியன் ஆக இருந்தது.*

## தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபை

### 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த காசுப் பாய்ச்சல் கூற்று

| | | (ரூபா '000) |
|---|---|---|
| **செயற்பாட்டுப் பணிகளின் காசுப் பாய்ச்சல்** | **2012** | **2011** |
| **பொதுவான பணிகளின் மிகை (பற்றாக்குறை)** | (154,165) | (12,757) |
| ***பணம் அல்லாதவைகள்*** | | |
| தேய்மானம் | 11,744 | 21,424 |
| பணிக்கொடை நிதியேற்பாடுகள் | 14,908 | 16,309 |
| சந்தேகத்திற்கிடமான கடன் ஒதுக்கீடுகளை அதிகரித்தல் | 9,465 | 2,476 |
| கடன்பெறுநர்களது அறவிடமுடியாக்கடன்/ பதிவழித்தல் | | (2,594) |
| வட்டி வருமானம் | (2,231) | (1,925) |
| செலுத்தவேண்டிய நிதி அகரித்தல் /குறைவடைதல் | 72,119 | 87,,364 |
| மிள்மதிப்பீட்டு நட்டங்கள் | | |
| ஊழியர் கிரய அதிகரிப்புக்கான ஒதுக்கீடு | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதி உபகரண விற்பனையின் மூலம்பெற்ற இலாபம் / நட்டம் | (1129) | (1,594) |
| ஏனைய சொத்துக்கள் அதிகரித்தல் /குறைவடைதல் | (1,508) | (6,764) |
| அறவிட வேண்டியன அதிரித்தல் /குறைவடைதல் | 73,171 | 15,574 |
| பொருட் பட்டியல் அதிரித்தல் /குறைவடைதல் | (2,771) | 5,214 |
| ***செயற்பாட்டுப் பணிகளின் தேறிய காசுப் பாய்ச்சல்*** | 173768 | (39,242) |
| முதலீட்டுப் பணிகளின் நிதிப் பாய்ச்சல் | | |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (16,806) | (20,634) |
| இயந்திரங்கள், உபகரணங்களின் விற்பனையின் மூலம் பெற்ற வருமானம் | 1,281 | 1,634 |
| ***முதலீட்டுப் பணிகளின் தேறிய காசுப் பாய்ச்சல்*** | (15,525) | (19,000) |
| வட்டி | 3,705 | 3275 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (7,877) | (4,714) |
| ***நிதியீட்டல் பணிகளின் காசுப் பாய்ச்சல்*** | (4,172) | (1,439) |
| ***மூலதன மானியங்கள்*** | (29,664) | 5,126 |
| ***ஆண்டிற்கு முன்னரான சீராக்கம்*** | (29,664) | 5,126 |
| ***நிதியீட்டல் பணிகளின் நிதிப் பாய்ச்சல்*** | (29,759) | (67,312) |
| ***குறித்த காலஎல்லையின் ஆரம்பத்திலிருந்த காசும் காசு ஒப்புரவுகளும்*** | 70,392 | 137, 704 |
| ***குறித்த காலஎல்லையின் முடிவிலிருந்த காசும் காசு ஒப்புரவுகளும்*** | 40,633 | 70,392 |

***நிதியீட்டல் பணிகளின் காசுப் பாய்ச்சல்***

***மூலதன மானியங்கள்***

***ஆண்டிற்கு முன்னரான சீராக்கம்***

***நிதியீட்டல் பணிகளின் நிதிப் பாய்ச்சல்***

***குறித்த காலஎல்லையின் ஆரம்பத்திலிருந்த காசும் காசு ஒப்புரவுகளும்***

***குறித்த காலஎல்லையின் முடிவிலிருந்த காசும் காசு ஒப்புரவுகளும்***

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. எல்பி/டி/ரீஎஸ்எச்டிஏ/எஃஏ/2012 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2014 யூன் 19

தலைவர்,

தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதகாரசபை

**தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசோட்டக் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்க தகவல்கள் என்பவற்றை கொண்ட 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 35 ஆம் இலக்க தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையிற் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு 2014 சனவரி 23 இல் வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்**

---

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆறு காசுப் புத்தக மீதிகளிற்கும் சம்பந்தப்பட்ட வங்கிக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட காசுப் புத்தக மீதிகளிற்கும் இடையில் ரூபா 362,909 மொத்தமான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) பேரேட்டு கணக்குகளிற்கும் தலைமை அலுவலக மற்றும் பிராந்தி அலுவலகத்தின் தொடர்புபட்ட பட்டோலைகளிற்கும் இடையில் பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

| கடன் வகை | பேரேட்டு கணக்குகளின் படி மீதி | பட்டோலைகளின் படி மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| இடர் கடன் | 17,422,814 | 15,404,232 | 2,018,582 |
| வீடமைப்புக் கடன்கள் | 41,253,692 | 41,412,838 | (159,146) |
| கடன் நிவாரணக் கடன்கள் | 99,691 | 53,810 | 45,881 |
| மோட்டார் சைக்கிள் கடன்கள் | 364,233 | 237,326 | 126,897 |
| சைக்கிள் கடன்கள் | 63,230 | 330,927 | (267,697) |
| பண்டிகை முற்பணங்கள் | 86,106 | 57,000 | 29,106 |
| சம்பள முற்பணங்கள் | - | 106,000 | (106,000) |
| விசேட சம்பள முற்பணங்கள் | 67,950 | 9,000 | 58,950 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி கடன்கள் | - | 744,528 | (744,528) |
| நலன்புரிக் கடன்கள் | - | 3,650 | (3,650) |
| நானாவித முற்பணங்கள் | 9,900 | - | 9,900 |

### 2.2.2 கிடைக்க வேண்டிய மறறும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலைமை அலுவலகத்தின் ரூபா 5,925,956 மற்றும் பிராந்திய அலுவலகங்களின் ரூபா 4,908,112 தொகையான கடன்பட்டோர் 5 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தன.

(ஆ) ரூபா 1,288,967 கூட்டு மொத்தத் தொகையான களுததறை, கேகாலை மற்றும் ஊவா பிராந்திய அலுவலகங்களின் கடன்கொடுத்தோர் 5 ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தன.

(இ) ஹந்தானை பயிற்சி நிலையத்தின் நிர்மாணத்திற்காக ஒப்பந்தகாரரொருவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 12,968,728 தொகையான முற்பணம் 10 ஆண்டு காலத்திற்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. பயிற்சி நிலையத்தின் நிர்மாணம் 2001 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தென அவதானிக்கப்பட்டது. அறவிடப்படவேண்டிய தொகை தேசிய பாதீட்டு திணைக்களத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் படி 2013 ஆம் ஆண்டுக் கணக்குகளில் சீராக்கப்படும் என்று அதிகாரசபையின் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

(ஈ) ரூபா 8,147,878 தொகையான நிலுவையாகவிருந்த மீள்பட்டியலிடப்பட்ட மோட்டார் வாகனக் கடன்கள் அறவிடப்படாமல் 5 ஆண்டுகளிற்கு மேலாக முற்கொண்டு வரப்பட்டிருந்தன.

(உ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் மற்றுமு் இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் ஏனைய செயற்பாடற்ற கடன்கள் என்பன ரூபா 1,625,916 தொகையாகும்.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

| விபரங்கள் | தொகை | கிடைக்கப்பெற்றிராத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| செயற்திட்ட மோட்டார் வாகனங்களின் கிரயம் | 8,518,625 | பட்டோலைகள் மற்றும் ஆதார ஆவணங்கள் |
| தேயிலை பரிசோதகர்கள்/ விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் என்போருக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் கடன்கள் | 6,955,347 | |
| செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 225,100 | |
| மோட்டார் வாகனக் கடன்கள் | 17,309 | |
| வெள்ள நிவாரணக் கடன்கள் | 20,452 | |
| நலன்புரிக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 11,070 | |
| சிறு நிலவுடமையார்களிற்கான பாதீட்டு மானியங்கள் | 93,610,309 | விரிவான பட்டோலை |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| திறைசேரிச் சுற்றறிக்கைகள் | |
| (அ) 1978 திசெம்பர் 19 ஆந்திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையால் வேண்டப்பட்டவாறு தலைமை அலுவலகத்திற்கான நிலையான சொத்துப் பதிவேடு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையின்படி சொத்துக்களின் பதிவேட்டில் கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள்களின் பெறுமதி பதியப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் விளைவித்திருந்த ரூபா 154.16 மில்லியன் தேறிய பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 12.76 மில்லியன் நேரொத்த தேறிய பற்றாக்குறையுடன் ஒப்பிடலாம், ஆதலால் நிதிசார் விளைவுகளால் ரூபா 141.4 மில்லியனால் மேலுமொரு வீழ்ச்சிகை் காட்டுகின்றது. செயற்பாட்டு செலவினங்கள் மற்றும் பதிவழிக்கப்பட்ட நட்டக்கடன்கள் உன்பன முறையே ரூபா 83.44 மில்லியன் மற்றும் ரூபா 45.54 மில்லியனால் அதிகரித்தமை பற்றாக்குறையின் அதிகரிப்பிற்கான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) தேயிலை உற்பத்திக்கு தேயிலை சிறுநிலவுடமையாளர்களின் பங்களிப்பு

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டின் போது இலங்கையில் மொத்த தேயிலை உற்பத்தி 326.28 மில்லியன் கிலோகிராம்களானதுடன் அதில் தேயிலை சிறுநிலவுடமையாளர்களின் பங்களிப்பு 233.10 மில்லியன் கிலோகிராம்கள் அல்லது 71.4 சதவீதமாகும். முன்னைய ஆண்டின் போது இலங்கையில் மொத்த தேயிலை உற்பத்தி 328.37 மில்லியன் கிலோகிராம்களானதுடன் அதில் தேயிலை சிறுநிலவுடமையாளர்களின் பங்களிப்பு 229.94 மில்லியன் கிலோகிராம்கள் அல்லது 70 சதவீதமாகும். அதன்பிரகாரம் தேயிலை சிறுநிலவுடமையாளர்களின் பங்களிப்பு மீளாய்வாண்டின் போது 1.4 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) தேயிலை தோட்ட அபிவிருத்திகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்றின்படி, ரூபா 276.3 மில்லியன் தொகையான உதவுதொகைகள் மீளாய்வாண்டின் போதான தேயிலை மீள் நடுகை மற்றும் புதிய மரநடுகை, விரிவாக்கல் சேவைகள் மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் நிறுவன ரீதியான வலுப்படுத்தல் போன்ற அத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய நான்கு ஆண்டுகளிற்காகவும் தோட்ட அபிவிருத்தி கிரயம் மற்றும் ஒரு ரூபா விற்கான தோட்ட அபிவிருத்திக் கிரயத்தின் அமுலாக்கல் கிரயம் என்பன கிழே தரப்படுகின்றன.

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| அபிவிருத்திக் கிரயம் (ரூபா மில்) | 208.3 | 185.7 | 189.2 | 208.0 | 276.3 |
| அமுலாக்கல் கிரயம் (ரூபா மில்) | 188.7 | 202.1 | 205.4 | 218.5 | 233.5 |
| அபிவிருத்திக் கிரயத்தின் ஒரு ரூபா விற்கான அமுலாக்கல் கிரயம் (ரூபா) | 0.91 | 1.08 | 1.08 | 1.04 | 0.85 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உதவு தொகை திட்டத்தின் கீழான தேயிலை மீள்நடுகை

தேசிய வேண்டுகையின் பிரகாரம், ஆகக் கூடிய விளைச்சலை பெறுவதற்கும் தேயிலை நிலங்களை நிலைபேறாகவும் வருடாந்தம் 2,300 ஹெட்டெயர் மீள்நடுகை செய்யப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், உதவு தொகை திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது 889 ஹெட்டெயர்கள் மாத்திரமே மீள்நடுகை செய்யப்பட்டிருந்ததுடன் 116,492 ஹெட்டயர்கள் மொத்தமான முதிர்ச்சியடைந்த காணிகளில் 0.76 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

(ii) விரிவாக்கல் மற்றும் ஆலோசனை சேவைகள்

* வரைவு ஆண்டறிக்கையின் பிரகாரம், விரிவாக்கல் சேவை உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் போது 6,508 குழு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 6.6 சதவீத குறைவைக் குறிக்கின்றது.

* விரிவாக்கல் மற்றும் ஆலோசனை சேவைகளில் மீளாய்வாண்டில் 143,456 விவசாயிகள் பங்குபற்றியிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 18 சதவீத குறைவைக் குறிக்கின்றது.

* கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், வினைத்திறனான விரிவாக்கல் சேவையை அடைவதற்கு ஒரு விரிவாக்கல் உத்தியோகத்தரின் விவசாயிகளின் வீகிதம் 1:1000 ஆக இருக்க வேண்டும். எவ்வாறாயினும் உள்ளபடியான விகிதம் 1:2730 ஆக

இருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவறான அதிகாரசபையின் பதவியணியின் படி, விரிவாக்கல் உத்தியோகத்தர்களின் 22 பதவிகளில் வெற்றிடங்கள் இருந்தன.

* உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம், விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் உதவுதொகை கொடுப்பனவுகள் தொடர்பில் பின்வரும் முறைகேடுகளில் ஈடுபட்டிருந்தனர் என்று அவதானிக்கப்பட்டது.

| பிராந்திய அலுவலகம் | அனுமதிப்பத்திர இலக்கம் | முறைகேட்டின் விபரங்கள் |
|---|---|---|
| ஊவா | ஆர்பி/எச்பி/10/28<br>ஆர்பி/எச்பி/10/29 | செய்யப்பட்ட உதிவுதொகை மேலதிக கொடுப்பனவு ரூபா 189,824 தொகையாகும். |
| நுவரெலியா | ஆர்பி/என்ஈ/2004/டிஓ/66,68<br>ஆர்பி/என்ஈ/2005/டிஓ/32,34,36<br>ஆர்பி/என்ஈ/2007/டிஓ/04,05,08,15,17<br>ஆர்பி/என்ஈ/2004/டிஓ/18 | செய்யப்பட்ட உதிவுதொகை மேலதிக கொடுப்பனவு ரூபா 519,503 தொகையாகும். |
| | ஆர்பி/என்ஈ/2004/டிஓ/62<br>ஆர்பி/என்ஈ/2008/டிஓ/33 | ஏதாவது அபிவிருத்தி நடவடிக்கைகளை செய்திருக்காத அனுமதிப் பத்திரங்களிற்காக ரூபா 117,363 தொகையான உதவுதொகை கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. |
| | ஆர்பி/என்ஈ/2007/டிஓ/07<br>ஆர்பி/என்ஈ/2007/டிஓ/06<br>ஆர்பி/என்ஈ/2008/டிஓ/16<br>ஆர்பி/என்ஈ/2008/டிஓ/19 | ஒரே காணிக்காக இரண்டு தடவை வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களிற்கு ரூபா 267,102 தொகையான உதவுதொகை கொடுப்பனவுகள் செய்யப்பட்டன. |
| களுத்துறை | ஆர்பி/கேஎல்/2010/எம்ஏஎச்ஏ/21 | செய்யப்பட்ட உதிவுதொகை மேலதிக கொடுப்பனவு ரூபா 64,752 தொகையாகும். |

சில மேலதிக கொடுப்பனவுகள் அறவிடப்பட்டோ அல்லது அடுத்த தவணைப் பணங்களிலிருந்து கழிக்கப்பட்டோ இருந்ததுடன்

ஏனைய முறையீனங்களிற்காக உத்தியொகத்தர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என்று அதிகாரசபையின் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

* உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம், 2003 முதல் 2009 வரையான காலத்தின் போது எட்டு பிராந்திய அலுவலகங்களால் செய்யப்பட்ட ரூபா 1,178.6 மில்லியன் தொகையான மொத்த உதவுதொகை கொடுப்பனவுகளில், ரூபா 168.5 மில்லியன் தொகை 2012 ஆகஸ்ட் 31 வரை மீள்நடுகை நடவடிக்கைகளிற்காக அவர்களால் செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. ஆகவே, இந்த அறிக்கையிடப்பட்டிருக்காத மீள்நடுகை உதவுதொகை கொடுப்பனவுகள் பயனற்றவையாக கருதப்பட்டிருந்தன.

விவசாயிகள் பயிற்செய்கை காலத்தின் போது காலநிலை, பொருளாதாரம், சமூதாயம் போன்ற அத்தகைய பிரச்சனைகளிற்கு முகம் கொடுத்திருந்ததுடன் எனவே சில விவசாயிகள் அறுவடைக்கு நீண்ட காலம் எடுத்திருந்ததுடன் சிலர் அவர்களுடைய பயிர்ச் செய்கையை கைவிட்டிருந்தனர். ஆகவே, எதிர்காலத்தில் அந்த பிரச்சனைகளை தவிர்ப்பதற்காக அதிகாரசபையால் நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று அதிகாரசபையின் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

(இ) நிறுவனரீதியான தோட்ட நாற்றுமேடைகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 07 தோட்ட நாற்றுமேடைகளின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 870,639 ஆன இலாபத்திற்கு எதிராக மீளாய்வாண்டின் போது ரூபா 571,700 ஆன நட்டத்தில் விளைந்திருந்தன, ஆதலால் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 1,442,339 ஆன குறைவை அது காட்டுகின்றது.

(ii) திஸ்பன நாற்றுமேடையில் தொடர்ச்சியாக நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது முறையே ரூபா 314,573 மற்றும் ரூபா 64,054 தொகையான நட்டங்கள் அவதானிக்கப்பட்டன.

(iii) மீளாய்வாண்டில் அதிகாரசபையின் 07 நாற்று மேடைகளில் அழிந்துபோன செடிகளின் எண்ணிக்கை 306,317 ஆக இருந்ததுடன் மொத்த செடிகளின்

33 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ரகங்துங்கொட, கிகுலோயா மற்றும் திஸ்பன நாற்றுமேடைகளின் அழிந்த செடிகள் மீளாய்வாண்டின் போது அசாதாரணமாக அதிகரித்திருந்தன.

(ஈ) வர்த்தக தோட்ட நாற்றுமேடைகளின் பதிவு

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 969 நாற்றுமேடைகள் மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் பிராந்திய அலுவலகங்களால் பதிவுசெய்யப்பட்டிருந்தன. அதில், 338 நாற்றுமேடைகளின் செடிகள் மாத்திரம் விற்பனைக்காக சிபார்சுசெய்யப்பட்டிருந்தன.

உள்ளபடியான திருப்திகரமான விதைகள் 620 பதிவுசெய்யப்பட்ட நாற்றுமேடைகளில் உற்பத்திசெய்யப்பட்டதுடன் சில செடிகள் தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் உத்தியோகத்தர்களின் சிபார்சுகளிலுள்ள தாமதம் காரணமாக சீ.என்.05 பரிசோதனைக்கு முன்னர் விற்பனை செய்யப்பட்டுள்ளன என தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

(உ) தேயிலை உரத்தின் பங்கீடு

தேயிலை உர பங்கீட்டு கணக்கின்படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தேயிலை உர பங்கீட்டு நிலையங்களின் இலாபம்/ (நட்டம்) கீழே தரப்படுகின்றன.

| உர நிலையம் | ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்) | |
|---|---|---|
| | 2012 | 2011 |
| | ரூபா | ரூபா |
| சரசவிய உயன | மூடப்பட்டது | (174,121) |
| பொரமதுள்ள | (33,009) | (132,161) |
| ஹிங்குல்லா | மூடப்பட்டது | (69,242) |
| கம்பளை | (43,168) | 134,044 |
| பண்டாரவெல | (3,275) | (2,219) |

அந்த உர நிலையங்கள் 2010 இல் அரசாங்க தேசிய உர திட்டம் தாபிக்கப்பட்ட பின்னர் செயற்பட்டிருக்கவில்லை என்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் தொடக்கத்திலிருந்து சரசவிம் உயன உர நிலையத்தில் ரூபா 81,800 (442 கிகி) பெறுமதியான உர இருப்பு களஞ்சியத்தில் இருந்தது. கடன் திட்டத்தின் ஊடாக 08 பிராந்திய அலுவலகங்களுக்கு இடையில் டொலோமைற்றின் 985 மெற்றிக் தொன்களின் பங்கீடு திட்டத்தில்

குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 632 மெற்றிக் தொன்கள் மாத்திரமே 04 பிராந்திய அலுவலகங்களிற்கு இடையில் பகிரப்பட்டிருந்தன.

உர நிலையங்கள் நாட்டில் இலவசமாக உரங்கள் கிடைக்கக் கூடியதாக இருந்தமையால் செயற்பட்டிருக்கவில்லை. டொலோமைற் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு இடையில் பகிருவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், விவசாயிகள் தேயிலைத் துறையில் போதியளவு டொலோமைற் கிடைக்கக் கூடியதாக இருந்தமையால் வேண்டப்பட்டிருக்காததுடன் அவர்களிற்கு கடன் வசதிகளை வழங்குவதற்கு அவசியமிருக்கவில்லை என்று தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

(ஊ) தேயிலை சிறு நில உடமையாளர் அபிவிருத்தி சங்கங்கள்

வரைவு வருடாந்த அறிக்கையின்படி, 1,381 தேயிலை சிறு நில உடமையாளர் அபிவிருத்தி சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் மொத்த பதவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு 261,493 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, 02 சங்கங்களின் அதிகரிப்பு மற்றும் 12,668 உறுப்பினர்களின் குறைவு என்பன அவதானிக்கப்பட்டன. எவ்வாறாயினும், புள்ளவிரபர அறிக்கை மற்றும் 1,240 சங்கங்களிடமிருந்து மெறப்பட்ட தகவல்களின்படி, 82 சங்கங்கள் செயற்பாட்டில் இருக்காத அதேநேரம் 319 சங்கங்களின் செயற்பாடுகள் நலிவாக இருந்தது.

ரங்கே அபிவிருத்தி குழு நிகழ்ச்சித்திட்டம் உற்பத்திய உயர்த்துவதற்கு சுழற்சி நிதியம் மற்றும் உற்பத்தியை நிலைநிறுத்தும் சங்க கண்காணிப்பு முறைமை போன்ற அத்தகைய தேயிலை சிறு உடமையாளர்களின் சமுதாய அடிப்படை அமைப்புக்களை வலுப்படுத்துவதற்காக நடாத்தப்பட்டிருந்தன. முன்னேற்ற அறிக்கையின்படி, 836 ரங்கே அபிவிருத்தி குழு நிகழ்ச்சித்திட்டங்கள் இலக்கிடப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது 120 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. 383 நிகழ்ச்சித்திட்டங்கள் இலக்கிடப்பட்ட போதிலும் ரங்கே அபிவிருத்தி குழு நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவும் காலி, மாத்தறை மற்றும் கண்டி பிராந்திய நிலையங்களில் நடாத்தப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

## 4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரத்தினபுரி பிராந்திய அலுவலகத்தின் பொறதுப்பிட்டியவில் ரூபா 485,736 பெறுமதியான பதவியணி வதிவிடங்கள் நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 23 நிறைவேற்றுத்தரங்கள் உள்ளடங்கலாக 60 வெற்றிடங்கள் இருந்தன.
தலைவரின் கருத்துப்படி, சிரேஷ்ட மட்டத்திலுள்ள 13 வெற்றிடங்கள் மற்றும் மூன்றாந்தர மட்டத்திலுள்ள 27 வெற்றிடங்கள் என்பன 2013 செப்தெம்பர் 30 இல் நிரப்பப்பட்டிருந்தன. தேவைக்கு மேற்பட்ட பதவிகளில், ஐம்பது பதவிகள் அந்நேரத்தில் அவர்கள் சேவையாற்றியமையால் அவர்களுக்கு தனிப்பட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2011 திசெம்பர் 26 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் உதவி முகாமையாளர் (செயற்திட்டம்) பதவியணிக்கு அப்பாற்பட்டு நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்கு புறம்பான கடமைப் பட்டியலொன்று வழங்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் போது அதிகாரசபையில் செலாற்றுவதற்கு அவருக்கு விசேட கடமைகளெதுவும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

(இ) முகாமைத்துவ உதவியாளரொருவரும் வரவேற்பாளரொருவரும் அதிகாரசபையின் ஆட்சேர்ப்புத் திட்டத்தை பின்பற்றாமல் முறையே அமைய அடிப்படையிலும் ஒப்பந்த அடிப்படையிலும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஈ) பதவியணியினரின் கல்விசார் மற்றும் சேவைச் சான்றிதழ்கள் உறுதிப்படுத்தல் பெறுவதற்கு உரிய நிறுவனங்களிற்கு தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) மனிதவள மற்றும் நிர்வாக முகாமையாளர் பதவி 2010 ஏப்ரல் 27 இலிருந்து வெற்றிடமாக இருந்ததுடன் ரூபா 1,100 மாதாந்த கொடுப்பனவில் 2010 ஆகஸ்ட் 02 இலிருந்து பதில் முகாமையாளராக உத்தியோகத்தரொருவர் நிமிக்கப்பட்டிருந்தார். 2013 ஆகஸ்ட் 31 ஆன கணக்காய்வு திகதிவரை இந்த பதவியை நிரப்புவதற்கு பொருத்தமான நபரை தெரிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டு இறுதிவரை வெற்றிடமாக இருந்த ஐந்து பிராந்திய முகாமையாளர் பதவிகள் மற்றும் விரிவாக்கல், திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கான பதினொரு உதவி பிராந்திய முகாமையாளர் பதவிகள் என்பவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.5 மோட்டார் வாகனங்களின் பாவனை

26 மோட்டார் வாகனங்கள் மற்றும் 115 மோட்டார் சைக்கிள்களை கொண்டுள்ள அதிகாரசபையிக் மோட்டார் வாகன அணி தொட்ர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு மோட்டார் வாகனங்கள் திருத்தம் செய்யப்படாமல் 2011 இலிருந்து பயன்படுத்தப்படாமல் பயனற்றிருந்தது.

(ஆ) ஐஆர்டிபீ செயற்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மூன்று வாகனங்களின் உரித்துடமை அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபைக்கு சொந்தமில்லாத மோட்டார் வாகனமொன்று 2012 இலிருந்து 2013 செப்தெம்பர் 05 ஆந் திகதியான கணக்காய்வு திகதிவரை அதிகாரசபையின் வளவில் பயன்படுத்தப்படாமல் பயனற்றிருந்தன.

2012 நவம்பர் 06, 2013 மார்ச் 06 மற்றும் 2013 ஒக்தோபர் 09 ஆகிய திகதிகளில் வளவிலிருந்து இதனை அகற்றுவதற்கு மோட்டார் வாகன உரிமையாளருக்கு கடடிதங்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும் அவரால் மோட்டார் வாகனம் அகற்றப்பட்டிருக்கவில்லை என்று தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

(ஈ) 2012 மார்ச் 30 இல் விபத்திற்குள்ளான மோட்டார் வாகனமொன்று திருத்தம் செய்யப்பட்டு காப்புறுதிக் கோரிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. மதிப்பிடப்பட்ட சேதங்களின் பெறுமதி ரூபா 20,850 ஆன தொகையாகும்.

4.6 பணிக்கொடை ஏற்பட்டின் முதலீடு

ரூபா 115.9 மில்லியன் தொகையான மொத்த பணிக்கொடை ஏற்பாட்டில், ரூபா 7.89 மில்லியன் அல்லது 6.8 சதவீதம் மாத்திரமே 2014 சனவரி 31 வரை முதலீடு செய்யப்பட்டிருந்தது. எனவே, அதிகாரசபை 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு எதிர்காலத்தில் ஏற்படும் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு போதிய நிதிகளை முதலீடு செய்திருக்கவில்லை.

பணிக்கொடை முதலீடுகளிற்காக திறைசேரியால் போதிய நிதிகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் பணிக்கொடை கொடுப்பனவுகளிற்கு ஆண்டு ஒதுக்கம் திறைசேரியிலிருந்து கிடைக்காது என்று தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

## 5. கணக்குப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

கணக்காய்வு மூலம் செய்யப்பட்ட கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகளின் படி, அதிகாரசபை 2012 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை திரும்ப பெறப்பட்டிருந்ததுடன் 2014 மே 07 இல் திரும்ப சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் பொழுது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கை மூலம் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பெறவேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டியவைகள்
(ஆ) காசுக் கட்டுப்பாடு மற்றும் வங்கி கணக்கிணக்கங்கள்
(இ) உதவுதொகை கொடுப்பனவுகள்
(ஈ) கடன்கள் மற்றும் முற்பணங்களின் கொடுப்பனவுகளும் அறவீடுகளும்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்

ஒப்பம்: எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*M*